# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28+04

சுடர் 32 | கதிர் 19 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 30, வியாழக்கிழமை 15.12.2016


# உறுப்பினர்களால் வட மாகாண சபை அமர்வு புறக்கணிப்பு

பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்கக்கோரி பட்ஜட் விவாதம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர். 15

மாகாண சபை உறுப்பினர்களுக்கான பிரமாண அடிப்படையிலான நிதியை 10 மில்லியனாக அதிகரித்து வழங்கவேண்டும் என்று வலியுறுத்தி மாகாண சபை உறுப்பினர்கள் நேற்றுப் போராட்டம் நடத்தினர். இதனையடுத்து இன்றும் நாளையும் நடைபெறவிருந்த வரவு - செலவுத் திட்ட விவாதம் அடுத்த வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. >> 04

## எம்.பி.சிகளுக்கு நிபந்தனையுடன் ஒதுக்கீட்டு நிதி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 15

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களுக்குச் சில நிபந்தனைகளுடன், வழக்கமாக ஒதுக்கப்படும் 6 மில்லியனுக்கு மேலதிகமாக ஒரு மில்லியன் ரூபாவை வழங்கத் தயார் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு அரசின் வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழமைபோன்று 6 மில்லியன் வழங்கப்படும். அதற்குரிய திட்டங்கள் ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவேண்டும். திருத்தங்கள் ஜூன் மாதம் வரையில் செய்யலாம். அதன் பின்னர் எந்தவொரு மாற்றமும் செய்ய முடியாது. அதுவரை திட்டம் சமர்ப்பிக்கப்படாவிட்டால், என்னிடம் பொது அமைப்புக்கள் முன் வைக்கும் திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் - என்றார். (த-5)

(விரிவு 12,13 ஆம் பக்கங்களில்)

## எல்லா அமைச்சுகளும் நன்றாகச் செய்துள்ளன

சான்றிதழ் வழங்கினார் சி.வி.

யாழ்ப்பாணம், டிசெ. 15

வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்கள் எல்லாம் நடப்பு ஆண்டில் சிறப்பாகச் செயற்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு அரசின் வரவு - செலவுத் திட்டத்தைச்சபையில்சமர்ப்பித்துஉரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விவசாயத்தில் முன்னேற்றம் பெறப்பட்டுள்ளது. கால் நடைத்துறை வடக்கில் நடுத்தர மற்றும் வறிய மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கச்செய்துள்ளது. கல்வித் துறையில் ஆசிரியர் பற்றாக்குறையும் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. வடக்கு மாகாணத்தின் சுகாதாரக் குறிகாட்டிகள் முன்னேற்றம் அடைந்திருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது - என்றார். (த-5)

(விரிவு 12, 13 ஆம் பக்கங்களில்)

## நல்லிணக்கத்துக்காக 1.7 மில்லியன் டொலர்

வழங்குகின்றது அமெ.

யாழ்ப்பாணம், டிசெ. 15

இலங்கையில் நிலை மாறுகால நீதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களுக்கு 1.7 மில்லியன் டொலரை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது. இது தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் >> 04

## நல்லாட்சி அரசும் எமக்கு கிள்ளித்தான் தெளிக்கிறது

வடக்கு அரசுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் முதலமைச்சர் சி.வி.

யாழ்ப்பாணம், டிசெ. 15

அடுத்த ஆண்டுக்கு அபிவிருத்தித் திட்டங்களுக்கு 10 ஆயிரத்து 672 மில்லியன் ரூபா கொழும்பு அரசிடம் கோரினோம். ஆயிரத்து 657 மில்லியன் ரூபாவை மாத்திரமே அவர்கள் வழங்கியுள்ளனர். நாம் கேட்ட நிதியின் 16 சதவீதமே கிடைத்துள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சபையில் நேற்றுத் தெரிவித்தார்.

2017 ஆம் ஆண்டுக்கு வட மாகாண சபையினால் மீண்டெழும் செலவினத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதித்தேவை 22 ஆயிரத்து 329.613 மில்லியன்களாக இருந்தபோதிலும், 19 ஆயிரத்து 321.737 மில்லியன்களே மாகாணத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகையாக கிடைக்கப் பெற்றுள்ளது - என்றார். (த-5)

(விரிவு 12 ஆம், 13 ஆம் பக்கங்களில்)

## பொலிஸ், காணி அதிகாரங்களை பகிர்வதற்கு விடவே மாட்டோம்

இப்படிச் சொல்கிறது ஜே.வி.பி.

யாழ்ப்பாணம், டிசெ. 15



காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்குவதற்கும், ஆளுநரின் அதிகாரங்களைக் >> 25

## இன்று கூடுகிறது கூட்டு எதிரணி

யாழ்ப்பாணம், டிசெ. 15

2017 ஆம் ஆண்டுக்குரிய அரசியல் நகர்வுகள் மற்றும் புதிய அரசமைப்புத் தொடர்பில் கலந்துரையாடவும், சிறப்புத் தீர்மானங்களை எடுக்கவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் பொது எதிரணி இன்று கூடுகின்றது. பத்தரமுல்லையில் அமைந்துள்ள >> 25

## முல்லைத்தீவில் பொலிஸ் கட்டட நிர்மாணத்துக்கு அங்கீகாரம்

யாழ்ப்பாணம், டிசெ. 15

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் பொலிஸ் நிலையக் கட்டடம் >> 25

## மாகாணங்களுக்கு நிதி குறைப்பு நிதியமைச்சரை சாடுகின்றார் கிழக்கு முதல்வர்

திருமலை, டிசெ.15

2017 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் மாகாண சபைகளுக்கான நிதி குறைவாக ஒதுக்கப்பட்டுள்ளமை சரியானதே என நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க நாடாளு >> 25

## மாகம்புர துறைமுக விற்பனை 100 மில்லியன் டொலர் மோசடி

கூட்டு எதிரணி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 15

அம்பாந்தோட்டைத் துறைமுகம் விற்பனை செய்யப்படும்போது 100 மில்லியன் அமெரிக்க டொலர் >> 25

## முல்லையிலிருந்து கடத்திய கஞ்சா சிக்கியது திருமலையில்

140 கிலோவுடன் மூவர் கைது



திருமலை, டிசெ. 15

முல்லைத்தீவில் இருந்து கடல் மார்க்கமாகப் படகொன்றில் திருகோணமலைக்குக் >> 25

## யாழ். சுடலைகளிலும் நேற்று சிக்கியது கஞ்சா

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ்ப்பாணத்தில் செம்மணிச் சுடலை, பருத்தித்துறையிலுள்ள குடத்தனைச்சுடலை மற்றும் கோயில்



களை அண்மித்து மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 30 கிலோ கிராம் >> 25

## வடக்கு ஆளுநர் செயலக நிதி ஒதுக்கீட்டுக்கு அங்கீகாரம்

யாழ்ப்பாணம், டிசெ. 15

வடக்கு மாகாண ஆளுநர் செயலகம், பொதுச் சேவை ஆணைக்குழு, பேரவைச் செயலகம் என்பவற்றுக்கான அடுத்த >> 04

முச்சந்தி முரளி



காசிலையும், சலுகைகளிலையும் மட்டும் குறிப்பாய் இருக்கினம் பாருங்கோ...

## சுமணரத்ன தேரருக்கு பிணை

யாழ்ப்பாணம், டிசெ. 15

மட்டக்களப்பில் அட்டகாசம் புரிந்த மங்களராமய விகாராதிபதி >> 25

## 171 மோசடி விசாரணைகள் நிறைவுக்கு

மிகப் பெரிய ஊழல் மோசடிகளுடன் தொடர்புடைய >> 25

## தீவிரமாகிறது போராட்டம் திணறுகின்றது நல்லாட்சி

மாகம்புர துறைமுக ஊழியர்களுடன் மக்களும் இணைந்து எதிர்ப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 15

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீன நிறுவனத்துக்கு நீண்ட காலக் குத்தகைக்கு வழங்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து துறைமுக >> 25




இதோ வெளிவந்துவிட்டது

ஒளிஅரசி

மனம் திறக்கிறார் பிரபல ஆசிரியர் வே. அன்பழகன்

உலகின் முதல் தமிழ் பெண் விமானி

தலைவரின் மண்ணில் இன்னொரு தனித்துவம்



பிரதிகளைப் பெற்றுக்கொள்ள: கொழும்பு: 071- 8628572, கிழக்கு: 071-8724057, வவுனியா: 077-2772726 மலையகம்: 071 - 8724056,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டாட்சித் தீர்வுக்கு நாடாளுமன்றிலும் கிடைக்காது ஆதரவு

## பொதுவாக்கெடுப்பும் தோல்வியில்தான் முடியும் என்கிறது ஜாதிக ஹெல உறுமய

யாழ்ப்பாணம், டிசெ. 15
கூட்டாட்சித் தீர்வுத் திட்டத்துக்கு நாடாளுமன்றத்திலும் ஆதரவு கிடைக்காது. பொது வாக்கெடுப்பு நடத்தினால் அதுவும் தோல்வியில்தான் முடியும். இவ்வாறு நல்லாட்சி அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.



ஹெலஉறுமயவின் பேச்சாளரும் மாகாண சபை உறுப்பினருமான நிசாந்த சிறிவர்ணசிங்க தெரிவித்தாவது:
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர் பிரச்சினைக்குக் கூட்டாட்சி மூலமே தீர்வு தேவை என்று வலியுறுத்துகிறது. கூட்டாட்சி ஆசையென்பது இலங்கையில் ஒருபோதும் நிறைவேறாது. அதற்கு சாத்தியமும் இல்லை. சம்பந்தன், விக்கினேஸ்வரன் போன்றோரின் பகற் கனவே கூட்டாட்சியாகும். இது தொடர்பில் அவர்கள் அனுதினமும் பேசலாம். ஆனால் ஒரு போதும் சாத்தியமாகாது.
ஜீ.ஜீ.பொன்னம்பலம், செல்வநாயகம் பேசினார்கள். ஆனால் வெற்றி பெறவில்லை. பண்டா- செல்வா ஒப்பந்தம், டட்லி- செல்வா ஒப்பந்தம் நிறைவேறவில்லை. பின்னர் பிரதேச சபைகள் ஏற்படுத்தப்பட்டன. இந்திய - இலங்கை ஒப்பந்தம் செய்து கொள் ளப்பட்டது. மாகாண சபைகள் ஏற்படுத்தப்பட்டன. அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டன.
முப்பது வருடகாலப் போர் நடைபெற்றது. ஈழ இராச்சியத்தை உருவாக்க பிரபாகரன் முன்னெடுத்தார். ஆனால் தோல்வி கண்டது.
இறுதிவரை கூட்டாட்சி தமிழர்களுக்குக் கிடைக்கவேயில்லை. மலை யக தமிழர்களும், முஸ்லிம் களும் கூட்டாட்சி வழங்குவதை விரும்பமாட்டார்கள்.
புதிய அரசமைப்பில் கூட்டாட்சிக்கு இடமில்லை. சிங்கள பௌத்தர்கள் எதிர்ப்பார்கள். பொது வாக்கெடுப்பு நடத்தினாலும் தோல்வியிலேயே முடியும். நாடாளுமன்றத்திலும் கூட்டாட்சி என்பதற்கு ஆதரவு கிடைக்கப் போவதில்லை.
நடைமுறைச் சாத்தியமாகாத கூட்டாட்சியைப் பேசிப் பேசியே சம்பந்தனும் தமிழ் தலைவர்களும் காலத்தைக் கடத்துவார்கள்.
இதனால் தமிழ் மக்களுக்கு எதுவிதமான நன்மையும் கிடைக்கப் போவதில்லை.
மாறாகச் சட்டியிலிருந்து அடுப்பில் விழுந்த கதையாக தமிழர்களின் நிலை மாறும். கூட்டாட்சியைப் பேசித் தமிழர்களை நிர்க்கதிக்குள் தள்ளிவிட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முனைகிறது என்றார். (த-5)

## விவசாய ஆராய்ச்சி மாநாடு 2 நாள்கள் கிளிநொச்சியில்

### இன்று காலை ஆரம்ப நிகழ்வு

கிளிநொச்சி, டிசெ.15
'காலநிலையுடன் சார்ந்த விவசாயம்' எனும் தொனிப்பொருளில் இரு நாள்கள் பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடு இன்று கிளிநொச்சியில் ஆரம்பமாகவுள்ளது.
இந்த மாநாடு இன்று வியாழக்கிழமை காலை 8மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகத்தில் இடம்பெறவுள்ளது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவயாச பீடத்தின் ஏற்பாட்டில் இரண்டாவது முறையாக இது நடத்தப்படுகின்றது.
இன்று வியாழக்கிழமையும், நாளை வெள்ளிக்கிழமையும் இடம்பெறவுள்ள இந்த மாநாட்டில் விவசாயம் சார்ந்த 26 கட்டுரைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களால் சமர்ப்பிக்கப்படவுள்ளன.
விவசாயக் கண்காட்சியுடன் கூடிய நிகழ்வாக இந்த மாநாடு அமைய உள்ளது.
நாடு முழுவதும் காலநிலை மாற்றத்தால் இந்த முறை காலபோகச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. மழை இன்மையால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.
இவற்றுடன் தொடர்புபட்ட வகையிலேயே இந்தபன்னாட்டுஆராய்ச்சிமாநாடு அமையும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.
இந்த மாநாட்டில் ஜப்பான், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளின் பிரபல பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த விவசாயம் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டு விளக்கமளிக்க உள்ளனர்.
இதில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து சிறப்பிக்க உள்ளார். இந்த வருடத்துக்கான மாநாட்டு இணைப்பாளராக கலாநிதி திருமதி. சிவசந்திரன் கடமையாற்றுகின்றார். (தி)

## புதிய அரசமைப்பு இலகுவானதல்ல

### கூறுகிறார் ஜி.எல்.பீரிஸ்

தற்போதைய அரசினால் புதிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும், அது இலகுவான காரியம் அல்ல என்று அரசு தற்போது புரிந்து கொண்டுள்ளது. இவ்வாறு முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்பு நடவடிக்கைகளின் சிக்கல் தன்மையை மறைப்பதற்காகத் தற்சமயம் சிறப்பு அபிவிருத்தி ஏற்பாடு என்ற பெயரில் சட்டவரைவை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் சட்டவரைவு மிகவும் பயங்கரமானது. இது தொடர்பில் எந்தவொரு ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை.
அதற்கு அமைச்சரை நியமிப்பதால், பல அமைச்சுக்களை அந்த அமைச்சின் கீழ் இணைத்துக் கொள்ள முடியும். இதனூடாக அபிவிருத்தி உத்திகள் மற்றும் மீன்பிடித்துறை போன்ற சில அமைச்சர்களின் பதவிகள் பறிபோகும் நிலை உள்ளது.
இதனூடாக புதிய நீதிமன்றம் ஆரம்பமாவதுடன், சிறிலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படும். இதனூடாக ஊழல் மோசடிகளுக்கு அழைப்பு விடுக்கும் நடவடிக்கை இடம்பெறும் - என்றார். (த-5)

## உப குழுக்களின் பரிந்துரைக்கு சுதந்திரக் கட்சி பச்சைக் கொடி

யாழ்ப்பாணம், டிசெ. 15
கொழும்பு அரசுக்கும்-மாகாண அரசுகளுக்கும் இடையிலான ஒருங்கியைவுப் பட்டியலை நீக்க வேண்டும் என்று முன்வைக்கப்பட்டுள்ள உப குழுவின் அறிக்கைகள் உள்ளிட்ட சில விடயங்களுக்குச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பச்சைக் கொடி காட்டியுள்ளது.
புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் நியமிக்கப்பட்ட 7 உப குழுக்களினதும் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
உப குழுக்களின் அறிக்கைகளில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி நடவடிக்கை எடுத்திருந்தது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் குழுவை நியமித்திருந்தார். இந்தக் குழு தனது அறிக்கையை இறுதிப்படுத்தும் பணியை ஆரம்பித்துள்ளதாக அறிய முடிகின்றது.
'13 ஆவது திருத்தச் சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டும். மாகாண சபைகளுக்கு வழங்குகின்ற அதிகாரங்களைக் கட்டுப்படுத்துகின்ற ஒருங்கியைவுப் பட்டியலை நீக்கவேண்டும். இரண்டாவது சபை எனக் கூறப்படும் மேல் சபையையும் உருவாக்கி அதனூடாக அதிகாரங்களைப் பகிரவேண்டும்' ஆகிய உப குழுக்களின் பரிந்துரைகளுக்கே சுதந்திரக் கட்சி பச்சைக் கொடி காட்டியுள்ளது.
அத்துடன் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தற்போது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை உரிய வகையில் பயன்படுத்தவேண்டும் என்றும், ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (த-5)

## மத்தளவில் ஒரு வாரம் நின்றது அமெ. கண்காணிப்பு விமானம்

யாழ்ப்பாணம், டிசெ. 15
அமெரிக்கக் கடற்படையின் பத்தாவது ரோந்து அணியின் இராட்சத கடல்சார் கண்காணிப்பு விமானம், ஒரு வார காலமாக அம்பாந்தோட்டையில் தரித்து நின்றதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.




டிசெம்பர் 4ஆம் திகதி மத்தள விமான நிலையத்தை வந்தடைந்த இந்த விமானம், கடந்த 11ஆம் திகதி புறப்பட்டுச் சென்றது.
அமெரிக்கக் கடற்படையின் பொசிடோன் விமானத்தில் வந்த கடற்படை நிபுணர்கள் இராணுவத்தினருக்கு, இந்த விமானத்தின் ஆற்றல்கள் குறித்து விளக்கமளித்தனர். நிபுணத்துவ ஆலோசனைகளையும் பரிமாறிக் கொண்டனர்.
விமானப்படை மற்றும் கடற்படையுடன் இணைந்து, பூகோள வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த பன்னாட்டுக் கப்பல் பாதைக்கு பாதுகாப்பு அளிப்பது குறித்தும் அமெரிக்க கடற்படை விமானம் பயிற்சியில் ஈடுபட்டது.
ரெட் லான்சர்ஸ் என்ற செல்லப் [illegible] பத்தாவது ரோந்து அணி, அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் உள்ள ஜக்சன்வில் தளத்தில் இருந்து செயற்படுகிறது.
இந்தோ- ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும், முக்கியமான கடல்பாதைகள் மற்றும் வணிகப் பாதைகளைப் பாதுகாப்பதிலும், இந்த விமானம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.
பொசிடோன் ஒரு பலநோக்குப் பயண விமானமாகும். இது நீண்டதூர கடல்சார் கண்காணிப்பு ஆற்றலைக் கொண்டது.
உலகிலுள்ள மிக முன்னேற்றகரமான சமுத்திர கண்காணிப்பு விமானம் இதுவாகும். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகவியலாளர்கள் இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 15
அம்பாந்தோட்டை, மாகம்புர துறைமுக வளவில் ஊடகவியலாளர்கள் இருவர் மீது கடற்படைத் தளபதி மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து ஊடகவியலாளர்கள் இன்று காலை 11 மணிக்குக் கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக கண்டனப் போராட்டத்தை நடத்தவுள்ளார்கள். இந்தப் போராட்டத்தில் நாட்டின் சகல பாகங்களிலும் உள்ள ஊடகவியலாளர்களும், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் பெருமளவில் கலந்துகொள்வர் என்று ஊடகவியலாளர் தொழிற்சங்க சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் காஞ்சன குமார ஆரியதாச தெரிவித்தார்.
ஊடகவியலாளர்கள் மீது கடற்படைத் தளபதி தாக்குதல் நடத்தியமை தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை உடனடியாக நடத்தப்பட வேண்டுமென போராட்டத்தில் கலந்து கொள்பவர்கள் ஜனாதிபதியையும், பிரதமரையும் வலியுறுத்துவார்கள் என்று அவர் மேலும் கூறினார். (த-5)

## இராஜதந்திர உறவை வளர்ப்பதில் அரசுக்குத் தோல்வி



யாழ்ப்பாணம், டிசெ. 15
மத வழிபாட்டுத் தலங்களின் ஊடாக வலுவான இராஜதந்திர உறவுகளைக் கட்டியெழுப்ப முடிந்துள்ளபோதிலும் தற்போதைய அரசு இதில் தோல்வி கண்டுள்ளதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட கூட்டு எதிர்க்கட்சியினர் ஜப்பானில்வாழும் இலங்கையர்களை சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
வெளிநாடுகளில் வாழ்வோருக்கு தாய்நாடு பற்றிக் கூடுதல் கரிசனை காணப்படுகின்றது. வெளிநாடுகளில் காணப்படும் மத வழிபாட்டுத் தலங்களின் ஊடாக வலுவான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அரசு இந்தச் சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றும் கோத்தபாய குறிப்பிட்டார்.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஜப்பானில் வாழ் ஆதரவாளர்களின் அழைப்பில் அங்கு சென்றுள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட குழுவினர் இன்றும் பல தரப்புகளைச் சந்தித்துக் கலந்துரையாடல்களில் ஈடுபட உள்ளனர். (த-5)

# அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு குருதி பாய்ச்சும் நிதி அமைச்சு

## சரவணபவன் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ.15
'அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு குருதி பாய்ச்சும் நிதி அமைச்சு, அதிகாரப் பரவலாக்கலை பலப்படுத்த என்றுமே விசுவாசமாகச் செயற்பட்டதில்லை. எதிர்பார்ப்பது போல அதிகாரப்பரவலுக்கு அமைவான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுவதில்லை. கடந்த காலங்களில் அதிகாரப் பரவலாக்கலுக்கு ஆதரவான வகையில் நிதிப்பிரிவின் கொள்கைகள் இருக்கவில்லை. இப்பொழுதும் கூட பழைய கோலமே தெரிகின்றது. அடுத்த வருடத்திற்கான வரவு-செலவுத் திட்டத்தில் கூட பாதிக்கப்பட்ட எமது மக்கள் வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்தும் விதத்தில் நிதி ஒதுக்கீடு விடயத்தில் மாற்றங்கள் இருப்பதாகத் தெரியவில்லை' என்று யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் குற்றஞ்சாட்டினார்.
நாடாளுமன்றத்தில் கடந்தவாரம் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மேலும் தெரிவித்ததாவது:
இன்றைய நிதி அமைச்சின் வாக்களிப்பு பொதுக்குழு விவாதத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோகித அபே குணவர்த்தனவும், நாமல் ராஜபக்சவும் பொதுமக்கள் பற்றி இன்று பெரிதும் அக்கறைப்பட்டதை நான் அவதானித்தேன். இவர்கள் ஆட்சியின் போது வடக்கில் இதே போன்று சம்பவத்தை நான் ஏமாற்றத்துடன் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது ஒரு சம்பவமல்ல. ஒரே சமயத்தில் ஒரே விதமாக பல சம்பவங்கள் இடம்பெற்றன. ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள்? எந்தச் சமயத்திலாவது இதையிட்டு குரல் எழுப்பினார்களா? எப்படியிருப்பினும் நீங்கள் பொதுமக்களைப் பற்றி அக்கறைப்படுகிறீர்கள். நான் அதைப் பாராட்டுகிறேன்.
நிதி அமைச்சுக்கான வாக்கு பற்றிய என் உரையை ஆரம்பிக்கிறேன். நிதி ஒதுக்கீடுகள் அதிகாரப் பகிர்வுக்கு ஏற்ப அமையவில்லை என்பதையே நான் காண்கிறேன். அது எல்லோராலும் வாசிக்கத்தக்க வகையில் அங்கே இருப்பதை நான் விளக்குகிறேன். இந்தச் சமயத்தில் நாட்டில் அதிகாரப் பரவலாக்கல் சரித்திரம் படைக்கும் இந்த வேளையில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததும், நெருக்கடியானது
மான ஒரேயொரு விடயத்தை மாத்திரம் நான் எடுக்க விரும்புகிறேன். இந்த மாதம் 7ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எங்கள் மக்களின் வாழ்வாதாரத்தை பெரிதும் அழித்த உள்நாட்டு கலவரத்திற்கான காரணங்களை கண்டறிவது சம்பந்தமாக தனக்குள்ள மன உறுதியை நாடாளுமன்றத்தில் கடுமையாக மீள்வெளிப்பாடு செய்திருந்தார். இவருடைய உயர்ந்த பார்வை உண்மையாகவே நடை முறைப்படுத்தப்படுவதானால் அரச இயந்திரத்தின் வேறுபட்ட கைகள் கூட்டிணைந்துநல்ல உளப்பாடுடன் இருப்பதற்காகப் பணியாற்ற வேண்டும்.
அரச கட்டமைப்பில் இரண்டாம் மூன்றாம் இடத்தில் இருப்பவர்களுக்கு ஆகக் குறைந்த வரவு-செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு செய்வதையே நிதி அமைச்சு கையாளுகின்றது. இதன் காரணமாக மக்களை பலவீனப்படுத்தி, மேலே முன்னேற முடியாத நிலையை உருவாக்கி இருக்கின்றது. 2017ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் அரசின் மூலதனச் செலவிற்கான நிகழ்ச்சி நிரலில், இரண்டாம் மூன்றாம் நிலையிலுள்ள அரசகட்டமைப்புக்குகுறிப்பாகமாவட்ட சபைகளுக்கும், உள்நாட்டு அரசுக்கும் 3.5 வீதமான நிதியே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதே போல பகிர்ந்தளிக்கப்பட்ட அரசகட்டமைப்புகளுக்கு அரச பட்ஜெட்டில் 8 வீதமே ஒதுக்கப்பட்டுள்ளது.
நிதி அமைச்சர் ரவி கருணநாயக்க கடந்த வருடம் வடக்குக்காக ஒதுக்கப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியில் 30 வீதமே செலவிடப்பட்டுள்ளதாக மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். இல்லை. தேசிய வரவு-செலவுத் திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் எப்பொழுது பணம் வழங்கப்பட்டது என்ற விவரத்தை அறிய வேண்டும். கடந்த மாதத்தில் கூட எமக்கு ஒரு திட்டம் கிடைக்க இருந்தது. ஆனால் பூஜ்யம் வரவு-செலவுத் திட்டம் என்பதால் இந்தத் திட்டம் அடுத்த வருடத்துக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.
இந்த நல்லாட்சியின் கீழ் - இந்த அரசியல் கட்டமைப்பின் கீழ் இரண்டாம் மூன்றாம் நிலையில் உள்ளவர்களுக்கு வரவு-செலவுத்திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில் எத்தனை வீதம் ஒதுக்கப்படவுள்ளது என்பதை இங்கே இந்த இடத்தில் நிதி அமைச்சரிடம் கேட்டறிய விரும்புகிறேன். போரால் பாதிக்கப்பட்ட ஒரு சமுதாயமாக வாழ்வின் பல நிலைகளிலும் அடிபட்டு நொந்துபோயுள்ள எமக்கு இந்த அரசின் மீதான நம்பிக்கையும், விசுவாசமும் அபிவிருத்தி அடைவதாயின் அரசின் நடவடிக்கைகள் எமக்குத் தெரியப்படுத்தப்படல் வேண்டும்.
பல நிபுணர்களின் ஆலோசனைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட தனது வரவு-செலவுத்திட்ட உரையில் நிதி அமைச்சர் ஒரு லட்சம் பேர் உல்லாசப் பயணத் துறையில் பயிற்றுவிக்கப்பட இருப்பதாகவும் 60 ஆயிரம் பேர் துணி உற்பத்தித் தொழில் பயிற்சி பெற இருப்பதாகவும் 4 லட்சம் பேர் கட்டுமானப் பணியில் பயிற்சி பெறவுள்ளார்கள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.
எனவே இது ஒரு நல்ல பிரேரணை. அத்துடன் அரச நிறுவனங்களில் பயிற்சிக்காக உதவித் தொகை வழங்கவிருப்பதாகவும் அமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். நீங்கள் இதைப் பெரிய அளவில் செய்ய விரும்பினால் கிளிநொச்சியிலுள்ள இலங்கை-ஜேர்மன் பயிற்சி நிலையத்தை விட வடக்கிலோ கிழக்கிலோ எந்த அரச பயிற்சி நிலையங்களிலும் இந்த நிகழ்ச்சிநிரல் சுயவேலைவாய்ப்பை வழங்குவதோடு, வேலைகளைத் தேடுதலையும் சுலபமாக்கி விடும். எனவே இந்தப் பிரேரணையை நான் வரவேற்கின்றேன்.
நிதி அமைச்சரின் தனது வரவு-செலவுத்திட்ட உரையில் குறிப்பிட்டபடி காங்கேசன்துறையிலிருந்து பொன்னாலை சந்தி வரையிலான ரயில் பாதை விரிவாக்கத் திட்டம், செங்குத்தான கட்டட அமைப்புத் திட்டம் என்பன எந்த அமைச்சினால் கையாளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். எனது நீண்ட தேடுதலுக்குப் பின்னரும் இதன் விவரம் பற்றி என்னால் அறிந்து கொள்ள முடியாதபோது, நிதி அமைச்சர் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தல் பற்றி தீவிரமான போக்கோடுதான் உரையாற்றினாரா என்று நினைக்கத் தோன்றுகிறது.
வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களை பின்தள்ளும் இன்னும் பல உத்திகள் இந்த வரவு-செலவுத் திட்டத்தில்புகுத்தப்பட்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.
அரசமைப்பிலுள்ள பொறுப்புணர்ச்சி, அதிகாரத்துவம், அதன் கடமை என்று எல்லாமே நிதி அமைச் சினால் சிறுமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் பலவீனப்படுத்தப்பட்டும் உள்ளது.
கடந்தகால நிதிஒதுக்கீடுகளை உற்று நோக்கினால் பிராந்திய ரீதியாக வேறுபாடுகளை உருவாக்க திட்டமிடப்பட்ட முயற்சிகள் இடம் பெற்றுள்ளதைக் காணமுடியும். இது தற்போதைய அரசுக்கு ஒரு சங்கடமான நிலையை உருவாக்கி ஏனைய பிராந்தியங்களுக்கு செய்யப்படுவது போல போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கிற்கும் 2020ஆம் ஆண்டுக்குள் செய்யும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. ஆனால் ஒருங்கிணைந்த முயற்சியோடு இந்தப் பிராந்தியங்களுக்கு அவசியப்படும் வளங்களை வழங்காதிருப்பது ஒரு படுமோச மான நிலையை எமது பார்வைக்கு கொணர்கின்றது-என்றார். (வ)

## பிள்ளையானின் மறியல் நீடிப்பு

மட்டக்களப்பு, டிச.15
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) உள்ளிட்ட நால்வரின் விளக்கமறியல் டிசெம்பர் 28ஆம் திகதிவரை நீடிக்கப் பட்டுள்ளது.
நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான மாணிக்க வாசகர் கணேசராஜா முன்னிலையில் சந்தேக நபர்களைப் பொலிஸார் நேற்று நீதிமன்றில் முற்படுத்தியபோது நீதிவான் விளக்க மறியலை நீடித்தார்.
கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் எம். கலீல் ஆகியோருக்கே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜ சிங்கம் கடந்த 2005ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.
இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 11 ஆம் திகதி சந்தேகநபரான சிவநேசதுரை சந்திர காந்தன் உட்பட 4 பேர் கைதுசெய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றனர். (க-ய-46)

## சிறுத்தை தாக்கி ஒருவர் காயம்

கொழும்பு, டிசெ.15
அகரப்பத்தனை, டொரிங்டன் கல் மதுரை தோட்டத்தில் சிறுத்தையின் தாக்குதலுக்கு உள்ளான 43 வயது நபர், அகரப்பத்தனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தோட்ட வெளிக்கள உத்தியோகத்தரான எஸ்.தியாகராஜா என்பவரே காயமடைந்தார்.
இவர், தனது வளர்ப்பு நாயுடன் வனப்பகுதிக்குச் சென்றபோது, சிறுத்தையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். இவரது வளர்ப்பு நாயையும், சிறுத்தை தாக்கியுள்ளது.
குறித்த நபர், மயக்கமுற்ற நிலையில் தேயிலைச் செடியின் அடிவாரத்தில் கிடந்ததைக் கண்ட பிரதேச மக்கள், அவரை உடனடியாக வைத்தியசாலையில் சேர்த்தனர்.
அவர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# தேசத்தின் குரலுக்கு நேற்று யாழ்ப்பாணத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம். டிசெ. 15

தமிழ்த் தேசத்தின் அங்கீகாரத்துக்காக நான்கு தசாப்தங்களுக்கு மேலாக ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்து மீளாத்துயிலில் உறங்கிக் கொண்டிருக்கும் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 10ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது,

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 10 ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கந்தர்மடத்திலுள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கட்சியின் அங்கத்தவர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் ஈகச் சுடர் ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மலர்வணக்கமும் தேசத்தின் அங்கீகாரத்திற்கான போராட்டத்தில் உயிர்நீத்த மா வீரர்கள், பொதுமக்களுக்கு அகவணக்கமும் செலுத்தப்பட்டது என்றுள்ளது. (வ-4)

# வடக்கு மாகாண சபையில் தமிழ்மொழிக்காக அமளி

யாழ்ப்பாணம், டிசெ. 15

தமிழ் மொழிபெயர்ப்பு ஆவணங்கள் வழங்கப்படாமை தொடர்பில் வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் பெரும் அமளி நிலை யேற்றபட்டது.

வடக்கு மாகாண சபையின் 69ஆவது அமர்வு கைதடியில் உள்ள பேரவைச் செயலகத்தில் அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன் ஆரம்பத்தில் 2016ஆம் ஆண்டுக்கான குறைநிரப்பு வரவு செலவுத் திட்ட விவாதம் இடம்பெற்றது. இதன் போதே வழங்கப்பட்ட ஆவணங்களின் தமிழாக்கம் வழங்கப்படாமை தொடர்பிலேயே அமளிநிலை ஏற்பட்டது.

இவ்வாறு வழங்கப்பட்ட ஆவணங்கள் ஆங்கிலத்தில் மட்டும் இருப்பதனால் தமிழில் வழங்க வேண்டும் எனவும் அவற்றை இன்றே வழங்க வேண்டும் எனவும் கோரிக்கைகள் எழுப்பப்பட்டன. இதன்போதே பல கருத்துக்களும் எழுப்பப்பட்டதோடு வடக்கு மாகாண சபையானது தமிழர் சபையாகவுள்ளபோதும் தமிழ் மொழி ஆவணங்கள் இன்றி ஆங்கிலத்தில் வழங்கப்படுகின்றமையை ஏற்க முடியாது என்று உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது. (வ-10)

# ஆறு. திருமுருகனின் தாயார் மறைவு



சுன்னாகம்-கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவரும், தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கப் போசகரும், சிவபூமி அறக்கட்டளை நிலையத் தலைவருமான கலாநிதி ஆறு. திருமுருகனின் தாயார் திருமதி ஆறுமுகம் சரஸ்வதிஅம்மையார்நேற்றுக்காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

# வடக்கு மாகாண சபையில் நூலகம் அமைக்கவேண்டும்

## சபையில் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 15

வடக்கு மாகாண சபைக்கு என்று ஒரு உசாத்துணை நூலகம் இல்லை. சுவடிகள் இல்லை. வடக்கு மாகாண சபை சில நியதிச் சட்டங்களை உருவாக்கியுள்ள போதும் அது தொடர்பான விளக்கங்கள் இல்லை. எனவே மாகாண சபைக்கு என நூலகம், சுவடி அமைக்க வேண்டும் என்று சபையில் உறுப்பினர் கே.சயந்தன் வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண சபை வரவு-செலவுத் திட்ட குழுநிலை விவாதம் கைதடியிலுள்ள வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் உறுப்பினர்கள் உரையாற்றினர். அதன்போதே சயந்தன் இதனைத் தெரிவித்தார். நூலகம் அமைக்கப்பட்டு அங்கு வட மாகாண சபையினரின் நியதிச் சட்டங்கள் தொடர்பான விடயங்களையும் உள்ளடக்கினால் அனைவரும் பயன் பெறமுடி யும் என்று அவர் கூறினார்.

**பசுபதிப்பிள்ளை**

மாங்குளத்தில் உள்ள காணியில் பேரவை செயலகம் அமைப்பதற்கு முதற்கட்டமாக காணியை அளவிடுவதற்கு நிதி ஒதுக்கப்படவேண்டும். 250 ஏக்கர் காணியில் இப்பவே கட்டடம் கட்டுங்கள் என்று சொல்லவில்லை. பேரவை செயலகத்துக்கான காணியை அளவீடு செய்ய நிதி ஒதுக்குங்கள்.

**சர்வேஸ்வரன்**

மாகாண சபையின் கட்டடத்தொகுதி அமைப்பதற்கு என்று ஆயிரம் ஏக்கர் காணி ஒதுக்கப்படவேண்டும். அதற்கான கட்டடங்களை இனிவரும் காலங்களில் அமைக்கலாம்.

**லிங்கநாதன்**

பேரவை செயலகம் அமைப்பது தொடர்பான பிரேரணை என்னால் கொண்டு வரப்பட்டது. எனவே அது தொடர்பான செயற்பாடுகள் தற்போது எந்த நிலையில் உள்ளன என்பதை அறிய விரும்புகின்றேன்.

**சிவஞானம்**

பேரவை செயலகம் அமைக்கவுள்ள இடத்தை கொரியன் நிறுவனம் ஆய்வு செய்கின்றது. அந்த நிறுவனத்தின் ஆய்வுப்பணி நிறைவுற்றதும் அடுத்த நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**ஆனோல்ட்**

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற் றைய இடங்களை விட 50 வீதமான கொடுப்பனவையே பெற்றுவந்தோம். கடந்த காலத்தில் எமது செயற்பாட்டால் ஒரு வீதம் உயர்த்தப்பட்டுள்ளது. எனினும் இது போதாது. எங்களுக்கும் இனிவரும் காலங்களில் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களின் அமர்வுகளுக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. எனவே எங்களின் கொடுப்பனவுகளையும் மீள் பரிசீலனை செய்யவேண்டும்.

வடக்கு மாகாண சபையின் சின்னம், செங்கோல் போன்றவற்றில் மீன்பிடித்துறை தொடர்பில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. எனவே வடக்கு மாகாண சபையின் சின்னத்தில் மீள்பரிசீலனை செய்து புதிய சின்னம் உருவாக்கப்பட வேண்டும். அதுக்கு என்று ஒரு குழு அமைக்க வேண்டும் என்று உறுப்பினர் ஆனோல்ட் கேட்டுக்கொண்டார்.

அதற்குப் பதிலளித்த அவைத்தலைவர், வடக்கு மாகாண சபையின் செங்கோல் முக்கிய விடயங்களை உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ளது. வடமாகாண சபையின் சின்னம் தொடர்பில் ஆராயலாம். என்றார்.

**சிவாஜிலிங்கம்**

வட மாகாண சபையின் தலைமைச் செயலகம் மாங்குளத்தில் அமையவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். அதற்காக 10 மில்லியன் ஒதுக்கி முதலில் காணியை அளவிடுதல், முட்கம்பி போட்டு பராமரித்தல் போன்றவற்றை செய்ய வேண்டும். மாகாண சட்டக்குழு உருவாக்கப்படவேண்டும்.

**ஐங்கரநேசன்**

வடக்கு மாகாண சபையின் மரமாக மருதமும், பறவையாக புலுணியும், பூவாக வெண்தாமரையும், விலங்காக ஆண் மானும் உள்ளன. ஆனால் இந்த விடயம் உள்ளமை பெரும்பாலானோருக்கு தெரியாது. எனவே இதனை மீளாய்வு செய்து இதனை அனைத்து தரப்புக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

**சிவாஜிலிங்கம்**

ஐங்கரநேசன் கூறிய இந்த விடயத்துக்குள் சேர, சோழ, பாண்டிய, மன்னர்கள் தொடர்பிலும் வெளிப்படுத்துவதை உள்ளடக்க வேண்டும். (வ-4,8)

# தாஜுதீனின் காரை பின்தொடர்ந்தது யார்?

## விசாரிப்பதாக சி.ஐ.டி. அறிவிப்பு

தாஜுதீன் கொலை செய்யப்பட்டபோது அவரின் காரின் பின்னால் ஒரு வாகனம் சென்றிருக்கின்றமை விசாரணைகளில் துலங்கியுள்ளது. அந்த வாகனம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் நேற்று அறிவித்தனர்.

அது தொடர்பில் நீதிமன்றில் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்

அதனைத் தொடர்ந்து முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்க மற்றும் நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் முன்னாள் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகிய இருவரையும் எதிர்வரும் 26ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-4)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## வடக்கு...

ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கீட்டுக்கு வடக்கு மாகாண சபை நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வடக்கு மாகாண சபையின் வரவு-செலவுத் திட்டம் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது.

இதில் அடுத்த ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கீட்டு விவரம் சமர்ப்பிக்கப்பட்டது. ஆளுநர் செயலகத்துக்கு 59.38 மில்லியன் ரூபாவும், வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவுக்கு 28 மில்லியன் ரூபாவும், பேரவைச் செயலகத்துக்கு 314.2 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. இவை குழுநிலையில் பரிசீலிக்கப்பட்டு எதிர்ப்பு இன்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதேவேளை, முதலமைச்சரின் அமைச்சுக்கு மீண்டு வரும் செலவினத்துக்கு 2 ஆயிரத்து 430.611 மில்லியன் ரூபாவும், மூலதனச் செலவினமாக 301.5 மில்லியன் ரூபாவும்,

தலைமைச் செயலர் அலுவலகத்துக்கு மீண்டு வரும் செலவினத்துக்கு 872.78 மில்லியன் ரூபாவும், மூலதனச் செலவினமாக 393.38 மில்லியன் ரூபாவும்,

வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கு மீண்டு வரும் செலவினமாக 983.784 மில்லியன் ரூபாவும், மூலதனச் செலவினமாக 289.5 மில் லியன் ரூபாவும்,

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு மீண்டு வரும் செலவினமாக 9 ஆயிரத்து 670.871 மில்லியன் ரூபாவும், மூலதனச் செலவினமாக 666.5 மில்லியன் ரூபாவும், சுகாதார அமைச்சுக்கு மீண்டு வரும் செலவினமாக 5 ஆயிரத்து 267.455 மில்லியன் ரூபாவும், மூலதனச் செலவினமாக 786.5 மில்லியன் ரூபாவும்,

போக்குவரத்து அமைச்சுக்கு மீண்டு வரும் செலவினமாக 420.726 மில்லியன் ரூபாவும், மூலதனச் செலவினமாக 293 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. (த-5-8)

## நல்லிணக்கத்துக்காக...

விவகாரங்களுக்கான பிரிவு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. நிலைமாறு கால நீதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களில் ஆர்வமுள்ள அமைப்புகள், நிதி உதவிக்காக விண்ணப்பம் செய்யுமாறு கோரப்பட்டுள்ளன. மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் நிலை[illegible] றும் நல்லிண[illegible] படுத்தும், வரையான திட்டங்களுக்கே இந்த 1.7 மில்லியன் டொலர் நிதியை அமெரிக்கா வழங்கவுள்ளது. (த-5)

## உறுப்பினர்களால்...

வடக்கு மாகாண சபையின் வரவு - செலவுத் திட்ட அமர்வு நேற்று ஆரம்பமானது. இந்த அமர்வு இன்றும் நாளையும் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

நேற்றைய அமர்வின் போது வரவு - செலவுத் திட்ட முன்மொழிவைச் சமர்ப்பித்து உரையாற்றிய முதலமைச்சர், உறுப்பினர்களுக்கு 6 மில்லியன் மாத்திரமே வழங்க முடியும் என்றும், திட்டங்கள் காத்திரமானதாக இருந்தால் 7 மில்லியன் வழங்கலாம் என்றும் தெரிவித்தார்.

இதனால் மாகாண சபை உறுப்பினர்கள் அதிருப்தியடைந்தனர். மதியபோசனத்துக்காக சபை நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்ட பின்னர் அவர்கள் அமர்வைப் புறக்கணித்தனர். பி.ப. 2.15 மணிக்குமீள ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் சபை உறுப்பினர்கள் சபா மண்டபத்தினுள் செல்லவில்லை. உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் அறையில் தங்கியிருந்தனர்.

பிரமாண அடிப்படையிலான நிதியை 6 மில்லியனில் இருந்து 10 மில்லியனாக அதிகரித்து வழங்கவேண்டும். அவ்வாறு வழங்கினால்தான் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வோம் என்று விடாப்பிடியாக இருந்தனர். அந்த நேரம் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பேரவைச் செயலகத்தில் இருக்கவில்லை. அவைத் தலைவர், முதலமைச் சருக்குத் தகவல் வழங்கியதைத் தொடர்ந்து, பேரவைச் செயலகத்துக்குத் திரும்பி வந்தார்.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், உறுப்பினர்கள் சார்பில் இ.ஆனோல்ட், எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பில், தலைமைச் செயலர் அ.பத்திநாதன் கொழும்பு சென்றுவிட்டார் என்றும் அவர் திரும்பியதுடன் அவருடன் பேசி முடிவு எடுக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. இதனையடுத்து சுமார் ஒரு மணித்தியாலம் தாமதமாகச் சபை நடவடிக்கை ஆரம்பமானது. இதன் பின்னர் சபை நடவடிக்கை, ஏற்கனவே திட்டமிட்டவாறு இன்றும் நாளையும் நடைபெறாது என்றும், அடுத்த வாரம் 20ஆம், 21ஆம், 22ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (த-5-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10% - 40%
வரையிலான
விலைக்கழிவு

# மாபெரும் மலிவு விற்பனை

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

# JAFFNA ELECTRICALS

DEALERS IN QUALITY ELECTRICAL & ELECTRONIC ITEMS

ஆரம்பம் 1969

LG Authorized Dealer for Abans Ltd.

KTK PVC | KEVILTON | USHA | OSRAM | :hager | KML CABLES | ORANGE | HAVELLS

15.12.2016
தொடக்கம்
31.12.2016 வரை

உங்கள் நிறைவே! எங்கள் தேவை!

**47 வருட கால முதற்தரமான மின்சாதனப் பொருள்கள் விற்பனையில் வாடிக்கையாளரின் நன்மதிப்பையும், தமக்கென தனி இடத்தையும் பெற்ற ஒரே ஒரு நிறுவனம்.**

**குறிப்பாக இன்று முதல் உத்தரவாதத்துடன் முதற்தரமான வீட்டு மின்னிணைப்புப் பொருள்களை கொள்வனவு செய்வோருக்கு 10% - 40% வரையிலான விலைக்கழிவு வழங்கப்படும்**

விசேடமாக இப் பொருள்களுக்கு இலவச மின் உபகரணங்களும் வழங்கப்படும்.

- Mixer Grinder 4750/= — Steel Kettle
- Induction Cooker 4500/= — Iron
- 5L/Pressure Cooker 3750/= — Hoper Pan
- 18/ Electric oven 6900/= — Plastic Kettle
- Gas Cooker (Double Burner) 2990/= — Iron
- Rice Cooker 2990/= — Toaster
- Water Purifier 2750/= — Torch
- Ceiling Fan 3690/= — 23 W Bulb 1Year Warranty

குறிப்பு:- கையிருப்பு உள்ளவரை மட்டும், நிபந்தனைக்கு உட்பட்டது

No: 94(6) Stanley Road Jaffna
Tel: 021 222 2353
Fax: 021 222 4302
Email:- jaffnaelectricals@yahoo.com
Web:- www.jaffnaelectricals.com



டேவிட்பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட் ஏக விநியோகஸ்தர்கள்

BAJAJ

# சந்நிதி முருகன்

## வேக்ஸ் சொப் & சேவிஸ்

திறப்பு விழா

நிலையத்தினர் தமது புதிய கிளையை

**ஆரியகுளம் சந்தியில் இன்று (15.12.2016)**
**வியாழக்கிழமை காலை 9.00 - 9.30 மணிவரை**

வரும் சுபவேளையில் திறந்து வைக்கின்றனர்.



**பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களை விசேட விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்வதற்கான அரிய சந்தர்ப்பம்**



15% OFF

15/12/2016 - 02/01/2017 வரை எமது புதிய கிளையில் கொள்வனவு செய்யும் அனைத்து முச்சக்கரவண்டி உதிரிப்பாகங்களுக்கும் விசேட விலைக்கழிவினை 15% பெற்றுக் கொள்ள முடியும் என்பதனை மகிழ்வுடன் தெரிவித்து நிற்கின்றோம்.

உங்கள் அசல் உதிரிப்பாகங்களை உறுதிப்படுத்திக்கொள்ள 0777665577 எனும் இலக்கத்துக்கு SMS செய்யவும்.

இல.102, பருத்தித்துறை வீதி,
ஆரியகுளம் சந்தி அருகில், யாழ்ப்பாணம்.

0212225202 / 0777110199 / 0772018275


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் விவகாரத்தால் மு.கா. கட்சிக்குள் சர்ச்சை

## ஜனவரி 2ஆம் திகதி வரை கூட்டத்தை ஒத்திவைத்தார் தலைவர் ஹக்கீம்

கொழும்பு, டிசெ.15

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உத்தியோகபூர்வ செயலாளர் யார் என்ற சர்ச்சை கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள நிலையில் கட்சியின் உயர்பீடக் கூட்டம் கொழும்பிலுள்ள கட்சித் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நேற்று நடைபெற்றது. கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசனலி பங்கேற்கவில்லை.

இதனையடுத்து முஸ்லிம் காங்கிரஸின் உத்தியோகபூர்வ செயலாளர் யார் என்று நேற்றைய கூட்டத்தில் கடும் வாக்குவாதம் மூண்டது.

எனினும், செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசனலியே கட்சியின் உத்தியோகபூர்வ செயலாளராக இருக்க வேண்டும் என்று கூட்டத்தில் கலந்துகொண்ட உயர்பீட உறுப்பினர்களில் பெரும்பாலானோர் வலியுறுத்தினர்.

இதனையடுத்து எதிர்வரும் ஜனவரி 2ஆம் திகதி வரை மு.காவின் உயர்பீடக் கூட்டத்தை கட்சியின் தலைவர் ஹக்கீம் ஒத்திவைத்தார்.

ஜனவரி 2ஆம் திகதி மீண்டும் கூடவுள்ள முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடக் கூட்டத்துக்கு கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசனலியையும் நேரில் அழைத்து உத்தியோகபூர்வ செயலாளர் விவகாரத்துக்கு முடிவு காணவேண்டும் என்றும் நேற்றைய கூட்டத்தின் இறுதியில் முடிவெடுக்கப்பட்டது.

இதேவேளை, நாளை 16ஆம் திகதி முஸ்லிம் காங்கிரஸின் உத்தியோகபூர்வ செயலாளர் விவகாரம் தொடர்பில் நேரில் வருமாறு கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசனலி, செயலாளர் மன்சூர் ஏ காதர் ஆகியோருக்கு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப் பிரிய நேற்று அழைப்பு விடுத்துள்ளார். மகிந்த தேசப்பிரியவுடனான சந்திப்பில் ஹக்கீம், ஹசனலி, மன்சூர் ஏ காதர் ஆகிய மூவரும் கலந்துகொள்வார்கள் எனத் தெரியவருகின்றது. (வ-4)

## சம்பள மட்டத்தை அதிகரிப்பது அவசியம் – பிரதமர்

சம்பள மட்டம் அதிகரிக்கப்படாவிட்டால் வேலையற்ற இளையோர் நாட்டைவிட்டு வெளியேறிவிடுவார்கள் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்தார்.

சீனிகம தொழிற்பயிற்சி நிலையத்தை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரால் திறந்துவைக்கப்பட்டது. 'நாட்டில் நல்லிணக்க செயற்பாடுகளை அடுத்து இனங்களுக்கிடையில் ஒற்றுமை கட்டியெழுப்பப்பட்டு வருகிறது. நல்லிணக்கத்தின் ஊடாகவே நாட்டில் தற்போது அரசியல் ரீதியாகவும் உறுதியான நிலை ஏற்படுத்தப்பட் டுள்ளது' என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (வ-4)

## சம்பள முரண்பாட்டை நீக்க வலியுறுத்தி மின்சார சபை ஊழியர்கள் போராட்டம்

சம்பள முரண்பாட்டை நிவர்த்தி செய்யுமாறு வலியுறுத்தி யாழ். மாவட்ட இலங்கை மின்சார சபையின் இணைந்த தொழிற்சங்க முன்னணியினர் நேற்று யாழ்.நகரில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையின் வடக்கு மாகாண அலுவலகம் முன்பாக இடம்பெற்ற இந்த ஆரப்பாட்டத்தில் யாழ். மாவட்ட தொழிச்சங்கத்தைச் சேர்ந்த ஊழியர்கள் மற்றும் வடக்கு மாகாண இலங்கை மின்சார சபை ஊழியர்களும் பங்குபற்றினர்.

2015ஆம் ஆண்டில் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சம்பள உயர்வினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சம்பள விகிதாசாரத்தினை பேணி முரண்பாட்டினை தீர்க்க வேண்டும் என்ற கோரிக்கையினை வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'இந்தக் கோரிக்கையை முன்வைத்து நாடு முழுவதும் போராட்டங்கள் நடத்தப்படும். அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. சகல மாவட்டங்களிலும் முன்னெடுக் கப்பட்டு இறுதியில் ஜனவரி 4ஆம் திகதி கொழும்பில் நிறைவு பெறவுள்ளது' என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். (வ-101)

# கச்சதீவு ஆலயத் திறப்பு விழாவில் பங்கேற்க இந்தியர்களுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ. 15

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் திறப்பு விழாவில் இந்திய யாத்திரிகர்கள் 100 பேர் கலந்துகொள்வதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கச்சதீவில் புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்துக்கான திறப்புவிழா வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் தம்மையும் அனுமதிக்குமாறு தமிழக பக்தர்களும் கோரிக்கை விடுத்திருந்தனர். இதன் பிரகாரமே குறித்த அனுமதி வழங்கப்பட்டது என்று கூறப்பட்டது.

23ஆம் திகதிய கச்சதீவு ஆலயத் திறப்பு விழாவில் இந்திய பக்தர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கக் கோரி தமிழக பக்தர்கள் சென்னை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இதேவேளை கச்சதீவு ஆலயத் திறப்பு விழாவானது கடந்த 7ஆம் திகதி இடம்பெற ஏற்பாடாகியிருந்த போதும் முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் மறைவு காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. (வ-101)

# பேருந்து மீது தாக்குதல் நடத்திய 12 இளைஞர்களுக்குப் பிணை

யாழ்ப்பாணம், டிசெ. 15

பட்டா வாகனத்தில் சென்று பேருந்தை மறித்து அடாவடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 12 இளைஞர்கள் யாழ்ப்பாண நீதிவான் மன்றினால் நேற்றுப்பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபையின் காரைநகர் சாலைக்குரிய பேருந்தை யாழ்ப்பாணம் கச்சேரிப் பகுதியில் வழிமறித்த பட்டா வாகனத்தில் வந்த இளைஞர்கள் அதனுள் ஏறி சாரதியையும் நடத்துனரையும் தாக்கியதுடன் நடத்துனரின் கையிலிருந்த பற்றுச்சீட்டு புத்தகம், பணம் ஆகியவற்றை பறித்து சென்றனர். அத்துடன் பேருந்தை தாக்கிச் சேதப்படுத்தியதாகவும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்தச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பொலிஸார் பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த 12 இளைஞர்களைக் கைது செய்து யாழ். நீதிவான் மன்றில் முற்படுத்தியிருந்தனர். அவர்கள் நீதிமன்றினால் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சந்தேகநபர்களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணியின் பிணை விண்ணப்பத்தின் அடிப்படையில் சந்தேகநபர்களுக்கு பதில் நீதிவானால் பிணை வழங்கப்பட்டது.

எனினும் இந்த வழக்கு மீண்டும் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, சந்தேக நபர்கள் அனைவரையும் டிசெம்பர் மாதம் 6ஆம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. அத்துடன் பொதுச் சொத்துக்கள் கட்டளை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை இல்லையென தெரிவித்த யாழ்ப்பாண தலைமையகப் பொலிஸ் பரிசோதகரையும் குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரியையும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதிவான் கட்டளையிட்டிருந்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது யாழ்ப்பாண தலைமையக பொலிஸ் பரிசோதகர் மன்றில் சமுகமாகி இவ்வழக்கு தொடர்பாக மீள் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதன்படி அடுத்த வழக்குத் தவணையின் போது குற்றப் பத்திரத்தை தாக்கல் செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார். எனினும் சந்தேக நபர்களை இந்த மாதம் 14ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேகநபர்களுக்கு எதிராக பொலிஸாரால் குற்றப்பத்திரம் முன்வைக்கப்பட்டது. குற்றப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ஆறு குற்றஞ்சாட்டுக்களையும் ஏற்பதாக சந்தேகநபர்கள் தெரிவித்தனர். அதனையடுத்து சந்தேகநபர்கள் ஒவ்வொருவரையும் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பிணையில் செல்லுமாறும் சந்தேக நபர்களின் கைவிரலடையாளத்தை பெற்று நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். இந்த வழக்கு தீர்ப்புக்காக மாதம் 17ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டது. (வ-4,103)

## வடக்கில் சீ, டீ தர வீதிகள் சீரமைக்கப்படவேண்டும்

### முதலமைச்சர் சபையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 15

வடக்கு மாகாணத்தில் சீ மற்றும் டீ தர வகைகளிலுள்ள ஆயிரத்து 747 கிலோ மீற்றர் வீதியும், ஆயிரத்து 970 கிலோமீற்றர் கிராமிய வீதியும் இன்னமும் சீரமைக்கப்பட வேண்டியுள்ளன.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 69ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன் ஆரம்பத்தில் 2016ஆம் ஆண்டுக்கான குறைநிரப்பு வரவு செலவுத் திட்ட விவாதம் இடம்பெற்றது. இதன்போதே முதலமைச்சர் இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

'வடக்கு மாகாணத்தில் சீ மற்றும் டீ தரத்தையுடைய வீதிகளில் ஆயிரத்து 747 கிலோ மீற்றர் வீதிகள் சீரமைக்கப்படவேண்டியுள்ளன. அதேநேரம் ஆயிரத்து 970 கிலோமீற்றர் கிராமிய வீதியும் இன்னமும் சீரமைக்கப்பட வேண்டியுள்ளது.

இடப்பெயர்வு, மீள்குடியேற்றங்களின் மத்தியிலும் வடக்கு மாகாணம் 2015ஆம் ஆண்ல் மொத்த தேசிய உற்பத்தியில் 3.6 வீதப் பங்களிப்பைச் செலுத்தியுள்ளது. அதேபோல் விவசாயம் 5.8 வீதமும், கைத்தொழில் 2.4 வீதமும், சேவைகளில் 3.9 வீதப்பங்களிப்பும் வழங்கப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டின் தரவுகளின் பிரகாரம் இலங்கையில் முல்லைத்தீவு 28.8 வீதத்தைக் கொண்டு முல்லைத்தீவு மாவட்டமே மிகவும் வறுமையான மாவட்டமாக கணிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று வேலை யற்றோர் வீதத்தில் வடக்கு மாகாணம் 5.3 வீதம் வேலையற்றவர்கள் எனவும் கணிக்கப்பட்டுள்ளது' என்று முதலமைச்சர் தெரிவித்தார். (வ-4,101)

### போலி பதிவுத் திருமணம்

## ஆசாமிக்கு விளக்கமறியல் நீடிப்பு பதிவாளருக்குக் கிடைத்தது பிணை

யாழ்ப்பாணம், டிசெ. 15

திருமணம் புரிவதாகக்கூறி ஏமாற்றி 45 இலட்சம் ரூபாவை சீதனமாகப் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரின் விளக்கமறியலை நீடிக்குமாறும் அவருக்கு உடந்தையாகவிருந்த திருமணப் பதிவாளரை பிணையில் விடுவிக்குமாறும் யாழ்ப்பாண நீதிவான் மன்றம் நேற்று உத்தரவிட்டது.

பிரான்சை வசிப்பிடமாகக் கொண்ட இலங்கையின் கேகாலை பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரை பதுளையைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் தொலைபேசி மூலமாக காதலித்து வந்துள்ளார். பின்னர் குறித்த பெண் 2014ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்து யாழ்ப்பாணம் கொழும்புத்துறை பகுதியில் மணமகனது நண்பர் ஒருவரது வீட்டில் வைத்து அந்த இளைஞரை திருமணம் முடித்துள்ளார். அவர்களுடைய திருமணத்தை வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த திருமணப்பதிவாளர் நிறைவேற்றியதாக கூறப்படுகிறது. திருமணத்தின் பயனாக மணமகளால் 45 இலட்சம் ரூபா மணமகனுக்கு வழங்கப்பட்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் குறித்த பெண் பிரான்சிற்கு சென்று திருமணம் முடித்த இளைஞரை அந்நாட்டுக்கு அழைப்பதற்காக திருமண பதிவுச் சான்றிதழை அனுப்பி வைக்குமாறு பல தடவைகள் அவரைக் கோரியுள்ளார். எனினும் திருமணச் சான்றிதழை அனுப்பி வைக்காமல் அவர் சாக்குப் போக்கு கூறி வந்துள்ளார். இதனையடுத்து அந்தப் பெண் யாழ்ப்பாணத்துக்கு வந்து விசாரித்த போது அவ்வாறான திருமணப் பதிவொன்று இடம்பெறவில்லையெனவும் இளைஞர் ஏற்கனவே திருமணமானவர் என்பதும் தெரிய வந்துள்ளது. இதனையடுத்து யாழ்ப்பாண சிறப்புக் குற்ற விசாரணைப் பிரிவில் நம்பிக்கை மோசடி தொடர்பாக பெண்ணால் முறைப்பாடு செய்யப்பட்டது. அதனையடுத்து பொலிஸாரால் பதுளையை சேர்ந்த மாப்பிள்ளையும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமணப் பதிவாளரும் கைது செய்யப்பட்டு ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டிருந்தது.

தொடர்ந்து வழக்குத் தவணைகளின் போது சந்தேக நபர்களின் விளக்கமறியலை நீதிமன்றம் நீடித்து வந்தது. நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சந்தேகநபர்களில் ஒருவரான திருமணப் பதிவாளரை இரண்டு இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்குமாறும் அவருடைய திருமணப் பதிவுகள் தொடர்பான பதிவுப் புத்தகத்தை விசாரணைகளுக்காக யாழ்ப்பாண சிறப்புக் குற்ற விசாரணை பிரிவில் ஒப்படைக்குமாறும் நீதிவான் கட்டளையிட்டார். அத்துடன் போலி மணமகனை எதிர்வரும் 28ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (வ-4,103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரியில் கைக்குண்டு மீட்பு

சாவகச்சேரி டிசெ.15

தோட்டக் காணியைத் துப்புரவு செய்தபோது வெடிக்காத நிலையில் கைக்குண்டு இருந்தமை கண்டறியப்பட்டது.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி சிவன் கோவிலடியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

காணி உரிமையாளர் இந்தவிடயம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு அறிவித்தார். அந்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் அந்தப் பகுதியில் பாதுகாப்பை ஏற்படுத்தி விட்டு சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் சிறப்பு அதிரடிப் படையினரின் ஊடாகக் கைக்குண்டை அப்புறப்படுத்தி செயலிழக்கச் செய்யுமாறு உத்தரவிட்டார்: இதனையடுத்து குண்டு மீட்கப்பட்டுச் செயலிழக்கச் செய்யப்பட்டது. (வ-4,9)

# திறப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 15

சந்நிதி முருகன் வேக்ஸ் சொப் மற்றும் சேவிஸ் நிறுவனம் இன்று வியாழக்கிழமை ஆரிய குளம் சந்திக்கு அருகாமையில் திறந்து வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-5)

# பிள்ளையார் கதை

சாவகச்சேரி டிசெ.15

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் (புலுட்டையன் பிள்ளையார்) ஆலயத்தில் விநாயகர் விரத ஆரம்பமும் இலட்சார்ச்சனையும் நேற்றுக் காலை ஆரம்பமானது. எதிர்வரும் ஜனவரி இரண்டாம் திகதி கஜமுக சங்ஹாரமும் மறுநாள் விநாயகர் சதுர்த்தியும் இடம்பெறுமென ஆலய நிர்வாகத்தினர் அறிவித்தனர். (வ-9)

# சங்கு முழுக்கு

சாவகச்சேரி, டிசெ.15

சாவகச்சேரி பொதுச் சந்தை குபேர கணபதி ஆலய மணவாளக்கோல சங்கு முழுக்கு நாளைமறுதினம் சனிக்கிழமை காலை இடம் பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்தனர். (வ-9)

# இராணுவப் பிரதானியாக சன்ன குணதிலக நியமனம்

கொழும்பு, டிசெ.15

இலங்கை இராணுவப் படைப் பிரிவின் பிரதானியாக மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக நியமிக்கப்பட்டுள்ளார் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஜனாதிபதியினால் இந்த நியமனம் வழங்கப்பட்டதாக அவர் கூறினார். (வ)

# திருவாசகம் ஓதல்

யாழ்ப்பாணம், டிசெ. 14

திருவருட்பா ஓதுதலும், திருவாசகம் முற்றும் ஓதுதலும் வேம்பிராய் மீசாலை வடக்கு கொடிகாமம் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானக் கோட்டத்தில் நாளை வெள்ளிக்கி ழமை ஆரம்பமாகி தொடர்ந்து 29 நாள்கள் நடைபெறும் என்று தெரி விக்கப்பட்டது.

உலகத்தில் சாந்தியும் சமாதானமும் ஏற்படும் பொருட்டு இந்த ஓதுதல் தொடங்கும் நாளிலிருந்து அதிகாலை 4.30 மணியிலிருந்து காலை 7 மணி வரை திருவருட்பா ஓதுதலும், காலை 7 மணியிலிருந்து திருவாசகமும் தொடர்ந்து 29 நாள்களும் ஓதப்படும் என்று அறி விக்கப்பட்டது. (வ-10)

## கண்ணீர் அஞ்சலி



யா/ சுப்பிரமணிய வித்தியாசாலை
அதிபர் திருமதி அருள்மொழி
கௌரியம்பாள் அவர்களின்
அன்புத் தாயார்

**திருமதி கமலாம்பிகை பத்மநாதன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

***கோட்டக்கல்விப் பணிப்பாளரும், அதிபர்களும்.***
**கோட்டக்கல்வி அலுவலகம், காரைநகர்.**

## கண்ணீர்க் காணிக்கை



ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானத்தினதும், துர்க்காபுரம் மகளிர் இல்லத்தினதும் **தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன்** அவர்களின் அருமைத்தாயார்.

**திருமதி சரஸ்வதி ஆறுமுகம்**
**(இளைப்பாறிய ஆசிரியர்)**

அன்னாரின் பிரிவு குறித்து மிகுந்த வேதனையடைகின்றோம் அத்துடன் அன்னாரின் ஆத்மா அம்பாளின் திருவடியை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

**கேச கீர்த்தி ஆறுமுகநாதன் குடும்பம்,**
**மற்றும் ஜெனர்த்தனன் குடும்பம் (தெல்லிப்பழை),**
(ஜே/6869)

## கண்ணீர்அஞ்சலி



எமது தேவஸ்தான
நிர்வாக சபையின்
தலைவர்
**ஆறு.திருமுருகன்**
அவர்களின்
அன்புத்தாயார்

**திருமதி சரஸ்வதி ஆறுமுகம்**
**(இளைப்பாறிய ஆசிரியர்)**

அவர்களின் பிரிவு குறித்து மிகுந்த வேதனையடைகிறோம். அன்னாரின் ஆத்மா சாந்திபெற துர்க்காதேவியைப் பிரார்த்திக் கின்றோம்.

**நிர்வாக சபை, ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 15.05.1939 — மறைவு 13.12.2016

### றீற்றா சபாலிங்கம்

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல.107, கட்சன் வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட றீற்றா சபாலிங்கம் 13.12.2016 செவ் வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அலோசியஸ் சபாலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி - ஞானம்மா தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம் தம்பதிகளின் மருமகளும், சகாயராசா (அதிபர் - வ/வேடர் மகிழங்குளம் வித்தியால யம்), செல்வராசா (சிறீலங்கா ரெலிகொம் - வவுனியா), ஜீவராசா (சிறீலங்கா ரெலிகொம் - வவுனியா), சகாயரஜனி (வவி),திவ்வியராசா (ஆஸ்திரேலியா), அமலராசா (உதவி திட்டமிடல் பணிப்பாளர் - கரைச்சிப் பிரதேச செயலகம்), விமலராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலாதேவி (பிரதிக் கல்விப் பணிப்பாளர் நிர்வாகம் -வவுனியா தெற்கு வலயம்), கீத்தா, ராணி, மனுவேல் (அதிபர் - வட்டக்கச்சி மத்திய கல்லூரி), மரியா, தமிழ்ச்செல்வி (சிரேஷ்ட சுற்றாடல் அதிகாரி - மத்திய சுற்றாடல் அதிகாரசபை - கிளிநொச்சி), வதனி ஆகியோரின் அன்பு மாமியா ரும்,ஆசீர்வாதம் ரத்தினம்,லீலா, காலஞ்சென்ற வில்லி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மனோஜா, றீனி, டிலோசன், நிறோசன், தனுசன், பிரேமினி, சுலக்சன், போ்லின்,நிலக்சன், விதுசன், லக்சன், லவின், லதீசன், சில்வியா, கெவின், கஜீவன், அலென், ஓவியா, மதுசனா, துசாந்தன், செரீனா, கிறேசியா, நிக்சன், றீகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் நாளை (16.12.2016) வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணியளவில் வட்டக்கச்சி புனித சூசையப்பர் ஆலயத்தில் நல்லடக்க ஆராதனையுடன் மம்மில் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறி[illegible] ஏற்றுக்கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]:
**குடும்பத்தினர்.**
(J/6856)
(11,17)

## கண்ணீர்அஞ்சலி



ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானத்தினதும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தினதும் **தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன்** அவர்களின் அருமைத்தாயார்.

**திருமதி சரஸ்வதி ஆறுமுகம்**
**(இளைப்பாறிய ஆசிரியர்)**

அன்னாரின் பிரிவு குறித்து மிகுந்த வேதனையடைகின்றோம் அத்துடன் அன்னாரின் ஆத்மா அம்பாளின் திருவடியை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,**
**மகளிர் இல்லம்.**
(ஜே/6868)
(17.19.20)

## மரண அறிவித்தல்கள்

### மரியாம்பிள்ளை பிலிப் இராஜநாயகம்

(இளைப்பாறிய உப அதிபர்)

இளவாலையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை பிலிப் இராஜநாயகம் 11.12.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - சுவக்கீனா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை - பிளசம் தம்பதிகளின் மருமகனும், பியற்றிஸின் (றஞ்சினி - கனடா) அன்புக் கணவரும், கீத்தா (அமெரிக்கா), விஜித்தா (கனடா), அலன் (லண்டன்),கிலன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜஸ்ரின் (அமெரிக்கா), அரவிந்தன் (கனடா), சிறோ (லண்டன்), சுவீற்றா (ஆசிரியர் - சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரவிஸ் (அமெரிக்கா), றமி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ் சென்றவர்களான அந்தோனியாப்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை, மனுவல்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 17.12.2016 சனிக்கிழமை கனடாவில் நடைபெறவுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24, முதலாம் ஒழுங்கை,
கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(J/6853)
(11,17,18)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## சின்னையா தம்பிராசா



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தம்பிராசா நேற்று (14.12.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சின்னையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான E.S.S.அருணாசலம் (பப்பா) - மதுரம்மா தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ் சென்ற சுந்தரகாந்தா (மல்லி) யின் அன்புக்கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2016) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பழஞ்சந்தி,**
**திருநெல்வேலி கிழக்கு.**

**தகவல்:**
**மருமக்கள்**
(சி/6865)(17.20)

## நவரத்தினராசா நவக்குமார்



வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் ஓமானில் பணிபுரிந்தவருமாகிய நவரத்தினராசா நவக்குமார் 13.12.2016 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு நவரத்தினராசா பரமேஸ் வரி (முன்னாள் மத்திய வங்கி அதிகாரி) தம்பதிகளின் அன்பு மகனும் மனோகரி, பத்மினி, மனோகரன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.12.2016) வியாழக் கிழமை பி.ப.2.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தக்னக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கனகரத்தினம் வீதி,**
**வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

# மாற்றுவலு உள்ளோர் கௌரவிப்பு

கிளிநொச்சி, டிசெ.15
கிளிநொச்சியில் இன்று வியாழக்கிழமை மாற்று வலுவுள்ளோர் கௌரவிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கம் தெரிவித்தது.
காலை 9 மணிக்கு கிளிநொச்சி டிப்போச் சந்தியிலிருந்து ஊர்வல மாக கூட்டுறவாளர் மண்டபத்தை சென்றடைந்து அங்கு மாற்று வலுவுள்ளோர் கௌரவிப்பும் மற்றும் ஏனைய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.
அதில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சோந்த அனைத்து மாற்று வலுவுள்ளோர்களையும் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கத்தினர் கேட்டுள்ளனர்.
(ற-35)

## கிருஸ்ணா அடகு சேவை

பதிவு இல.J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2016 ஆம் ஆண்டு 30.06.2016 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி (15.01.2017) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.01.2017 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்: A.S.Surendran

இல.370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 4900 311

இல. 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் விளம்பரப் பெயர்ப் பலகைகள் அமைத்தல் தொடர்பான அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சகல நிலையான (பனர்கள், அறிவித்தல் பலகைகள், எல்லைச்சுவர்கள் மூலமான விளம்பரப்படுத்தல்கள்) மற்றும் காட்சி மாறுகின்ற விளம்பரப்பலகைகளுக்கும் ( Bill boards and display screens ) உரிய அனுமதியினை உடன் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அனுமதி பெறப்படாத சகல விளம்பரப்பலகைகளும் எதிர்வரும் 21.12.2016 ஆம் திகதி தொடக்கம் எமது சபையால் அகற்றப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

யுகராஜா ஜெலீபன்
செயலாளர்
வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.

(C 27015)
(14,17,18)

## அறிவித்தல்- இனியவாழ்வு இல்லம்

தேவிபுரம் "அ" பகுதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
Regd.At NCPD No: MSEW/NSPD/2/10/R-202
Regd.At Div.Sec.No :- MU/PKI/DS/VSSO/02

### நிறைவேற்றுச் செயலணி தெரிவு

இனியவாழ்வு இல்லம் கட்புலன்,செவிப்புலன் பேச்சுத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறன் கொண்ட சிறுவர்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் பதிவு பெற்ற ஒரு தொண்டு நிறுவனம் ஆகும். 2016ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4ஆம் திகதி நடை பெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் கீழ் குறிப்பிடப்படுவோர் காப்பாளர்சபை உறுப்பினர்களாக ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்கள்.

திருமதி.றூபவதி-கேதீஸ்வரன் (மாவட்டச் செயலர்-முல்லைத்தீவு)
திரு.என்.வேதநாயகன் (மாவட்டச் செயலர்-யாழ்ப்பாணம்)
திரு.எம்.பிரதீபன் (பிரதேசசெயலர்-புதுக்குடியிருப்பு)
திரு.எஸ்.ஜெயக்காந்த் (பிரதேசசெயலர்-நெடுந்தீவு)
திரு.வீ.சுப்பிரமணியம் (ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர்)
திருமதி.ஜீ. நவநீதன் (சமூகசேவை உத்தியோகத்தர்-புதுக்குடியிருப்பு)
திரு.வீ.கைலாசபிள்ளை (தலைவர்-மனிதநேயம்)

அத்துடன் நிறைவேற்றுச் செயலணி உறுப்பினர்களாக கீழ்வருவோர் இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர் :- திரு.எஸ்.நாகரட்ணம் (ஓய்வுநிலைவலயப் பிரதிக்கல்விப்பணிப்பாளர்)
உப தலைவர் :-திரு.எஸ்.றூபராஜா (தலைவர்- வன்னிவிழிப்புலனற்றோர் சங்கம்)
செயலாளர் :- திரு.என்.தசரதராஜகுமாரன் (முல்லைமாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர்)
உபசெயலாளர் :-திரு.என்.கிரியாகரன் (முகாமையாளர்-சனச காப்புறுதி நிறுவனம் )
பொருளாளர் :- திரு.எம்.ஜே. றெஜினோல்ட் (பிரதம கணக்காளர்-மாவட்டச் செயலகம் முல்லைத்தீவு)

ஏனைய நிறைவேற்றுசெயலணிஉறுப்பினர்கள்
திரு.பீ.பேரின்பநாயகம். (ஓய்வு நிலைவலயப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் )
திரு.கே. இராஜேந்திரம்- (ஓய்வுநிலை அதிபர்)
திரு.வீ.கோணேஸ்வரன் -முகாமைத்துவ உதவியாளர்,
திருமதி.கண்மணி கிறிஸ்ரியன் (ஆசிரியர்-உடையார்கட்டு ம.வி)
திரு.எஸ்.பிரதீபன் (யாழ் பல்கலைகழகமாணவன்)
திரு.ஏ.ஞானேஸ்வரன் (அதிபர்-தேராவில் அ.த.க.பாடசாலை)

மேலும் இல்ல நிர்வாக நிறைவேற்று முகாமையாளராக திரு.எஸ்.திருச்செல்வம் ஓய்வுநிலை ... முகாமையாளர்- இலங்கைவங்கி), அவர்கள் பணியாற்றி வருகின்றார். தொ.பே.இல- 0777752...

Tel: 0213200333 ,0212061949 E.mail:iniyavazhvu@yahoo.com
Bank:BOC:72966208

தகவல்:
கௌரவசெயலாளர் திரு.என்.தசரதராஜகுமாரன்

# இஸ்லாமிய, தமிழ் இலக்கிய மாநாடு கட்சி சார்ந்த மாநாடாகவே நடந்துள்ளது

## மஸ்தான் எம்.பி. குற்றச்சாட்டு




வவுனியா, டிசெ.15
கொழும்பில் இடம்பெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டுக்கு தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப் படவில்லை. இது ஒரு கட்சி சார்ந்த மாநாடாகவே நடத்தப்பட்டுள்ளது.
இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் கே. கே. மஸ்தான் குற்றஞ்சாட்டினார்.
கொழும்பில் இடம்பெற்ற தமிழ் இலக்கிய மாநாட்டில் கலந்து கொண்ட இந்தியக் கலைஞர்கள், வடக்குக்கு சுற்றுலாவை மேற்கொண்டு நேற்றுக்காலை வவுனியா வந்தனர். அது தொடர்பில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
இலங்கையில் இடம்பெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டுக்கு தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப் பினர்களையும் அழைத்திருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. ஏற்பாடு செய்தவர்கள் ஏதோ ஒரு வகையிலும், கால அவசாகசம் கிடைக்காமலும் அதைச் செய்யத் தவறியுள்ளனர். நாங்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டிருந்தால் மிகவும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும்.
எனது அப்பாவின் ஊரும் தமிழ் நாடுதான். நானும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அங்கு சென்று வரு வது வழமை என்று கூறிக்கொள்வதில் சந்தோசமடைகின்றேன். உங்களைச் சந்தித்ததில் மிகவும் மகிழ்வடைகின்றேன். இந்தச் சந்திப்புக்கு இரண்டு தினங்களுக்கு முன்னரே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எங்களுக்கு மாநாட்டில் கலந்து கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.
இங்கு 21 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். கிட்டத்தட்ட 26 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். எல்லோரையும் அழைத்து மிகவும் சிறப்பாகச்செய்திருக்கலாம். நான் இங்குள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் உதவியுடனே நாடாளுமன்றுக்குச் சென்றேன் - என்றார்.
வவுனியா மாவட்ட கலை-இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் அனுசரணையில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இந்தியாவைச் சேர்ந்த இஸ்லாமிய கலைஞர்களுக்கும் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த கலைஞர்களுக்கும் இடையே நேற்று இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் இந்தியாவைச் சேர்ந்த இஸ்லாமிய கலைஞர்கள் அதிகளவில் பங்கேற்றனர். அதில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமான கலை ரீதியான தொடர்புகள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.
நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், கொழும்பு மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் சி.பாஸ்கரா மற்றும் கலைஞர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ற-21)

## விற்பனைக்கு

பேக்கரிப் பாவனைக்குரிய சிறிய காஸ் அவன் மற்றும் அதற்குரிய பொருள்களும் விற்பனைக்கு உண்டு.

076 569 9897

## பெயர்மாற்றம்

ஏழாலை- கிழக்கு, ஏழாலையைச் சேர்ந்த **வேலுப்பிள்ளை யோசேப் எமிலியானஸ்பிள்ளை பற்றிமாநாயகி** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **வேலுப்பிள்ளை யோசேப் எமிலியானஸ்பிள்ளை பற்றிமாமலர்** என மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.

(J 6849)
(22,18)

பற்றிமாமலர்.

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள் புரிபவரே. என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறித்துதிக்கின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாயிருப்பினும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.- ஆமென்

அடியார்.

# கடன்களை அறவிட நேரக் கட்டுப்பாடு

அச்சுவேலி, டிசெ.15
வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் வழங்கப்பட்ட கடன் தொகையை அறவீடு செய்வதற்கு வீடுகளுக்குச் செல்வதற்கான நேர அளவை மத்திய வங்கி கட்டுப்படுத்தியுள்ளது.
காலை 8 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையே மட்டுமே கடன் அறவீடுகளை மேற்கொள்ள வேண்டும் என வங்கிகள், நிதி நிறுவனங்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிக்கப்பட்டுள்ளது. வங்கிகள் நிதி நிறுவனங்களின் உயர் அதிகாரிகளை நேரில் அழைத்தும் அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளது.
கடன் அறவீடு தொடர்பாக நிதி நிறுவனங்களின் பணியாளர்கள் இரவு, அதிகாலை வேளைகளில் கடன் பெற்றவர்களின் வீடுகளுக்குச் செல்வதாலும், சம்பந்தப்பட்டவர்களின் மனம் நோகும் வகையில் நடந்து கொள்வதாலும், குடும்ப உறவுகள் இடையே பிரச்சினைகள் ஏற்படுகின்றன, தற்கொலைகளும் இடம்பெற்றுள்ளன. அதைக் கருத்தில் கொண்டே மத்திய வங்கி கடன் அறவீடும் விடயத்தில் நேரக் கட்டுப்பாட்டை விதித்துள்ளது"- என்று மத்திய வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
கடன் விடயத்தில் தவணை தப்பிய கடனாளிகளின் விவரம் வங்கி நடவடிக்கையில் சிவப்பு பட்டியலில் இடம் பெறும். அவர் தொடர்பான விவரம் இணைய வழி ஊடாக சகல வங்கிக் கிளைகளிலும் பதிவு செய்யப்பட்டிருக்கும்- என்றும் அவர் தெரிவித்தார்.
(ற-11)

## பண்டிகைக் காலத்தை முன்னிட்டு ஏசியன் தளபாடத்தின் மாபெரும் மலிவு விற்பனை

Table mat - ~~2400/=~~ - 1550/=
Kitchen Rack - ~~2000/=~~ - 1450/=
Iron Board - ~~1300/=~~ - 990/=

மெத்தை ~~2600/=~~ 2250/=
பிரம்பு செற் ~~16500/=~~ 14750/=
லெதர் சோபா செற் (ஈபோ இலவசம்) ~~41400/=~~ 36500/=
6 கதிரை ரீப்போ ~~5500/=~~ 4000/=

ஸ்ரீல் அலுமாரி ~~10900/=~~ 8750/=
6X4 கட்டில் ~~10500/=~~ 8750/=
TV ஸ்டாண்ட் ~~10750/=~~ 8500/=

இல.230, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி - ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்)
021 791 6911, 076 821 9415,
077 358 3879

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முஸ்லிம் நிகழ்வுகளில் பங்குகொள்வதில்லை வடக்கு முதலமைச்சர்

## அஸ்மின் கவலை

யாழ்ப்பாணம், டிசெ.15

வடக்கு மாகாண முதலமைச்சராக க.வி. விக்னேஸ்வரன் தேர்வானதன் பின்னர் முஸ்லிம் சமூகத்தின் எந்த நிகழ்விலாவது பங்கு கொண்டாரா? இவ்வாறு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் கேள்வி எழுப்பினர்.

வடக்கு மாகாண சபையின் 69ஆவது அமர்வு நேற்று கைதடியில் உள்ள வடக்கு மாகாண பேரவைச்செயலகத்தில் நடைபெற்றது. அதில் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாத உரையில் உரையாற்றும்போதே மாகாண சபை உறுப்பினர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் தெரிவித்ததாவது–

"வட மாகாண முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் தெரிவான பின்னர் முஸ்லிம் சமூகத்தின் எந்த நிகழ்விலும் ஏன் பங்கு கொள்வதில்லை என்று முஸ்லிம் மக்கள் என்னிடம் வினவுகின்றனர். இதனையே நானும் முதலமைச்சரிடமும் கேட்கின்றேன். முதலமைச்சரின் அனுமதியைப் பெற்று அழைப்பிதழ் அச்சிடப்பட்டாலும் அவர் வருவதில்லை என்று கூறப்படுகின்றது. வரவு செலவுத் திட்ட சமர்ப்பிப்பின் போது இரணைமடுத் திட்டத்தை எமது திட்டம் என்றார். ஆனால் அந்தத் திட்டம் தொடர்பில் எதிரான கருத்தையே இந்தச் சபை ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு அனுப்பியது என்றார். (ந-101)

# மானிப்பாயில் 12 வீதிகள் அடுத்தாண்டு காப்பெற்றாகும்

யாழ்ப்பாணம், டிசெ.15

வலி.தென்மேற்கு மானிப் பாய் பிரதேச சபைக்குட் பட்ட 12 வீதிகள் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியீட்டத்தில் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் காப்பெற்வீதியாக சீரமைக் கப்படவுள்ளன. ஆலங்குழாய் – கல்வளை வீதி, பிரான்பற்று – பண்டத்தரிப்பு வீதி, அல் லுண்ணி வீதி, சண்டி லிப்பாய் இந்துக்கல்லூரி – கம்மாலை வீதி, 1ஆம் 2ஆம் காயா வீதி, நவாலி தெற்கு ராஜராஜேஸ்வரி வீதி, மலைவேம்படி வீதி, சவாரி வீதி, மதவடி வீதி, செட்டியடைப்பு வீதி, சண்டிலிப்பாய் ஐந்து கண்மதவடி வீதி, நவாலி வடக்கு தலுவில் வீதி என்பனவே சீரமைக் கப்படவுள்ளன. வீதிகளின் சீரமைப்பு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டப் பணிப்பாளரின் மேற்பார்வையில் இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-50)

# வவுனியாவில் குரங்குகள் அட்டகாசம்

வவுனியா, டிசெ.15

வவுனியாவில் அண்மைக்காலமாக குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளது என்றும், அதைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

குரங்குகளின் தொல்லைகளைக் குறைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ந-21)

# காணி வேண்டி 3 தலைமுறை போராட்டம்

## யாழ்.நகரில் தந்தை செல்வா சதுக்கம் முன்பாக



யாழ்ப்பாணம், டிசெ.15

தன் காணியை ஒருவர் கையகப்படுத்தியுள்ளார் என்று தெரிவித்த மாற்றுத் திறனாளியான மூதாட்டி ஒருவர், அதிகாரிகள் இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்து உணவு தவிர்ப்பில் இறங்கினார்.

யாழ். நகரில் உள்ள தந்தை செல்வா சதுக்கத்தின் முன்பாக அந்த மூதாட்டியும், அவரது மகளும், பேரக் குழந்தையும் பாதாகைகளுடன் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டனர்.

"யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியிலுள்ள நாச்சிமார் கோயிலுக்கு அண்மையில் எனது காணி உள்ளது. காணியின் இலக்கம் 641/2.

எமது காணிக்கு அருகில் உள்ள காணியின் உரிமையாளர் இல்லாத காரணத்தால் வேறொருவர் காணியை ஆக்கிரமித்துள்ளார். எங்களது காணியையும் தன்னுடைய காணி என்று கூறுகின்றார். 10 வருடங்களுக்கு மேலாக இந்தப் பிரச்சனை உள்ளது. குறித்த நபர் அரச பணி புரிகின்றார். பொய்யான உறுதி தயாரித்து அந்த வீட்டையும் அபகரித்துக் கொண்டு எங்கள் வீட்டையும் தன்னுடையது என்கிறார். தற்போது அவருடைய மகள் தன்னுடைய காணி எனக் கூறி அடாவடியில் ஈடுபடுகின்றார். இதற்கு ஒரு தீர்வுகிடைக்கவேண்டும்என்றேஉணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுளோம். இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் ஆளுநருக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். தீர்வு கிடைக்கும் வரைக்கும் எங்கள் போராட்டம் தொடரும்."- என்று காணி உரிமையாளர் எனத் தெரிவிக்கும் காசிப்பிள்ளை இராசலட்சுமி தெரிவித்தார். (ந-21,7)



ஆறு மாத வயதுடைய யானைக் குட்டி ஒன்று வாகனத்தில் மோதிக் காயமடைந்தது. இந்தச் சம்பவம் மாங்குளம், கிழவன்குளத்தில் நேற்று அதிகாலை நடந்துள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் யானைக் குட்டியை கிளிநொச்சி 155 ஆம் கட்டையில் உள்ள வனஜீவராசிகள் மருத்துவப் பிரிவு அலுவலகத்தில் சேர்ப்பித்தனர். யானைக் குட்டியின் இடுப்புப் பகுதி விபத்தால் உடைந்துள்ளது என்று வனஜீவராசிகள் மருத்துவப் பிரிவினர் தெரிவித்தனர். (ந-21,35)



வடக்கு மாகாண விவசாய அமைச்சின் மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு அனலைதீவு அருணோதயா சனசமூக நிலையத்தினர் அண்மையில்நிலைய வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு பாதுகாப்புக் கூடுகளையும் அமைத்தனர். (ந-9)

# கிராமங்களில் சேவையாற்ற முன்வரவேண்டும் மருத்துவர்கள்

முல்லைத்தீவு, டிசெ.15

முல்லைத்தீவு மாவட்டத்தின் கிராமப்புற வைத்தியசாலைகளில் அந்த பகுதிகளில் இருந்து மருந்துவர்களாக வருபவர்கள் சேவை செய்ய முன்வர வேண்டும்.

இவ்வாறு முல்லைத்தீவு மருத்துவர் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ம. சாந்தமேனம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மருத்துவச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு நட்டாங்கண்டல் பாடசாலையில் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. அதன் போது நட்டாங்கண்டல் வைத்தியசாலைக்கு நிரந்த மருத்துவர் நியமிக்கப்படாததால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் நட்டாங்கண்டல் கிராம அபிவிருத்திச் சங்கம், வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கம், பனங்காமம் அபிவிருத்திச் சங்கம் என்பன இணைந்து முல்லைத்தீவு மருத்துவர் சங்கத்திடம் மனுக் கையளித்தன.

> முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டனர். நியமிக்கப்படுபவர்கள் சில மாதங்களில் வேறு இடத்துக்கு மாற்றல் எடுத்துச் செல்கின்றனர்.

அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே மருத்துவர் சங்கத்தின் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"நட்டாங்கண்டல் வைத்திய சாலைக்கு முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டனர். நியமிக்கப்படுபவர்கள் சில மாதங்களில் வேறு இடத்துக்கு மாற்றல் எடுத்துச் செல்கின்றனர். இவ்வாறான மருத்துவமனைகளில் சேவையாற்ற இந்த பகுதியில் இருந்து மருத்துவரானவர்கள் முன்வரவேண்டும்." – என்று அவர் குறிப்பிட்டார். (ந-7)

# வீதி சமிக்ஞை விளக்குகள் வவுனியாவுக்கு தேவை

வவுனியா, டிசெ.15

வவுனியா நகரில் வீதி சமிக்ஞை விளக்குகளை பொருத்த வேண்டும் என்று மத்திய நெடுஞ்சாலை அமைச்சரிடம் வடக்கு சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்தார்.

நெடுஞ்சா[illegible] லக்ஸ்மன் [illegible] கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

அதில் உள்ளதாவது:

வவுனியா நகரம் வடக்கையும் தெற்கையும் இணைக்கும் பிரதான நகரமாகும். வடக்குக்கான நுழை வாயிலாக காணப்படும் இந்த நகரினூடாக நாளாந்தம் பெரும[illegible] வாகனங்கள் பயணிக்கின்றன. [illegible] மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். முக்கிய சந்திகளில் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுகின்றன. இவற்றைக் கருத்தில்கொண்டு வவுனியா நகரில் காணப்படும் முக்கிய சந்திகளான மணிக்கூட்டுக் கோபுரச் சந்தி, வைத்தியசாலை சுற்றுவட்டம் மற்றும் கச்சேரி சுற்றுவட்டம் என்பவற்றில் வீதிப் போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்கில் வீதிச் சமிக்ஞை விளக்குகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றுள்ளது. (ந-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் விவாகரத்துச் சட்டம்: மார்சூப்பின் அறிக்கை தாமதம்

கொழும்பு, டிசெ 15
முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் தலைமையிலான குழு மேற் கொண்டுள்ள பரிந்துரைகளை மேலும் ஆராய்வதற்கு உலமா சபை கால அவகாசம் கோரியதால் சட்டத் திருத்தங்கள் தொடர்பான இறுதி அறிக்கை எதிர்வரும் ஜனவரி 29 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகக் குழுவின் தலைவர் உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் சலீம் மார்சூப் தெரிவித்தார்.

> “இறுதி அறிக்கை எதிர்வரும் ஜனவரி 29 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகக் குழுவின் தலைவர் உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் சலீம் மார்சூப் தெரிவித்தார்.

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் திருத்தங்களைச் பரிந்துரைசெய்வதற்கு 2009 ஆம் ஆண்டு அப்போதைய நீதியமைச்சர் மிலிந்த மொரகொடவினால் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் சலீம் மார்சூப்பின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது.
இந்தக் குழு நேற்று முன் தினம் தனது அறிக்கையைப் முழுமைப்படுத்த திட்டமிட்டிருந்தது. அறிக்கையில் குழு அங்கத்தவர்களினது கையொப்பங்களையும் பெற்றுக் கொள்ளவிருந்தது.
இந்தக் கூட்டத்தில் உலமா சபையின்தலைவர்அஷ்ஷெய்க் எம்..எம்.ரிஸ்வி முப்தியும் செயலாளர் அஷ்ஷெய்க் எம். எம்.ஏ. முபாரக்கும் கலந்து கொள்ளவில்லை.
உலமா சபையின் தலைவர் ரிஸ்வி முப்தி சிகிச்சைக்காக கனடா சென்றிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன் சட்டத்திருத்தங்களை மேலும் ஆராய்வதற்கு உலமா சபை கால அவகாசமும் கோரியிருந்தது.
இதற்கமைவாகவே இறுதி அறிக்கை எதிர்வரும் ஜனவரி 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த)


# மலேசியத் தொழில் முதலீட்டுக்கு கிழக்கு மாகாண சபை ஒப்பந்தம்

மட்டக்களப்பு, டிசெ.15
மலேசிய நிறுவனத்துடனான தொழில் வாய்ப்பு முதலீட்டு ஒப்பந்தம் ஒன்று நேற்றுக் கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் மலேசிய நிறுவனப் பிரமுகர்களினால் கைச்சாத்திடப்பட்டது.
மலேசிய அமானா பௌண்டேசன் நிறுவனத்தின் பணிப்பாளர் அப்துல் காதிர் அஸ்கரி தலைமையிலான குழுவினருக்கும் கிழக்கு மாகாண முதலமைச்சருக்கும் இடையில் நேற்றுக் கொழும்பில் இடம் பெற்ற பேச்சுக்களில் கிழக்கில் முதலீடு செய்யும் ஒப்பந்தத்துக்கு உடன்பாடு எட்டப்பட்டது.
அமானா நிறுவனம், கிழக்கு மாகாண மக்களுக்கு உதவும் பொருட்டு தனியார்துறைகளில் முதலீடு செய்து வேலை வாய்ப்புகளை வழங்குதல் தொடர்பாக கலந்துரையாடியதுடன் ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டதாகக் கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்தார். (கு-ய-46)



# மீண்டுமொரு போருக்கு வழிகோலும் மதக் குழுக்கள்

அமைச்சர் அர்ஜுன சாடல்



கொழும்பு, டிசெ. 15
மீண்டுமொரு போருக்கு வழிகோலும் மதக் குழுக்கள் எம்மிடையே இன்னும் இருக்கின்றமையை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அவர்கள் இருப்பது எம் இனத்தின் துரதிர்ஷ்டம்.
இவ்வாறு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.
கிராமத்து விகாரையே கிராமத்தின் சக்தி எனும் வேலைதிட்டத்தின் மூன்றாம் கட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாகப் போதிய விளக்கமின்றி ஒரு சிலர் மேற்கொள்கின்ற கருத்துக்கள் காரணமாக இன்று இனங்களிடையே மோதல்நிலை ஏற்பட்டுள்ளது.
நாட்டில் இன, மத பாகுப் பாடுகளைத் தூண்டுபவர்கள் மீண்டும் ஒன்றிணைந்துள்ளார்கள்.
இன்று அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பில் எவ்வித முடிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை. பல்வேறுப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. எவ்வித இறுதி முடிவும் எட்டப்படவில்லை. பௌத்தர்கள் போன்று இவ்வாறு பிற மதத்தவர்களும் செயற்படுகின்றார்கள்.
அரசமைப்பைப் பற்றி அறியாத எம் நாட்டு மக்களின் மனங்களை குழப்பாதிருக்குமாறு நான் இவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்-என்றார். (த-4)

# பொலிஸ்மா அதிபருக்கு எதிராக அரசமைப்புச் சபை முறைப்பாடு

கொழும்பு, டிசெ 15
பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் அண்மைக்கால செயற்பாடுகள் குறித்து அவர் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென வலியுறுத்தும் முறைப்பாடொன்றை அரசமைப்புச் சபை ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்துள்ளது.
இரத்தினபுரியில் நடந்த கூட்டமொன்றில் பூஜித் ஜயசுந்தர தெரிவித்த கருத்துகள் தொடர்பில் விரிவான விசாரணை நடத்தி அதற்கேற்ப அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அரசமைப்புச் சபை ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் அரசமைப்புச் சபை கடந்த வியாழக்கிழமை (8ஆம்திகதி)பொலிஸ்மா அதிபரை அழைத்து விசாரணை நடத்தியது. அதன்பின் மறுநாள் வெள்ளிக்கிழமை சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமையில் நடந்த அரசமைப்புச் சபைக் கூட்டத்தில் பொலிஸ்மா அதிபருக்கு எதிராக ஜனாதிபதியிடம் முறையிடுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.
பொலிஸ்மா அதிபரின் இந்தச் செயற்பாடு குறித்து பல்வேறு தரப்புகளிலிருந்தும் விமர்சனங்கள் எழுந்திருந்த வேளையில் அரசமைப்புச் சபையின் முறைப்பாட்டின் மீது ஜனாதிபதி எடுக்கும் தீர்மானம் முக்கியத்துவம் பெறுமென அரசியல் விமர்சகர்கள் எதிர்வு கூறியுள்ளனர். (த)

# ஏறாவூர் இரட்டைப் படுகொலை: சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

மட்டக்களப்பு, டிசெ 15
மட்டக்களப்பு – ஏறாவூர் இரட்டைப் படுகொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஆறு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 28ஆம்திகதிவரைதொடர்ந்து விளக்கமறி யலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
சந்தேக நபர்கள் ஆறு பேரும் ஏறாவூர் சுற்றுலா நீதிவான் மன்றத்தில் மேலதிக நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான முஹம்மத் இஸ்மாயில் முஹம்மத் றிஸ்வியிடம் நேற்றுப் புதன்கிழமை முன்னிலைப் படுத்தப்பட்டனர்.
இதன்போது விளக்கமறியல் நீடிப்புக்கு நீதிபதி உத்தரவிட்டார். ஏறாவூர் நகர பிரதேசத்தில் முகாந்திரம் வீதி முதலாவது குறுக்குஒழுங்கையில் வசித்துவந்த தாயான நூர்முஹம்மது உஸைரா (வயது-56), அவரது திருமணமாகிய மகளான ஜெனீராபானு மாஹிர் (வயது-32) ஆகியோர் செப்ரெம்பர் 11ஆம் திகதி நள்ளிரவு இனந்தெரியாத நபர்களால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இந்த ஆறு சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-ய-46)

# பொது எதிரணிக் குழு ஜப்பானுக்குப் பயணம்

கொழும்பு, டிசெ 15
பொது எதிரணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கடந்த திங்கட்கிழமை இரவு ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.
ஜப்பானில் வசிக்கும் இலங்கையர்களின் அழைப்பை ஏற்று அங்கு சென்ற குழுவில் ரோஹித அபேகுணவர்தன, உதய கம்மன்பில மற்றும் நிரோஷன் பிரேமரட்ன ஆகியோருடன் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவும் உள்ளடங்கியுள்ளார்.
இவர்கள் ஜப்பானில் அரச அதிகாரிகள் பலரை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாகவும், நகோயா மற்றும் இபரக்கி பிரதேசங்களிலுள்ள இலங்கையர்கள் ஏற்பாடுசெய்துள்ள இரு கூட்டங்களில் கலந்துகொள்வர் எனவும் பொது எதிரணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த)

# விபத்தில் குழந்தை சாவு பதினொரு பேர் படுகாயம்

உடபுஸல்லாவவில் சம்பவம்

நுவரெலியா, டிச.15
நுவரெலியா – உடபுஸல்லாவ எனிக் தோட்டத்தில் நேற்று அதிகாலை இடம் பெற்ற வாகன விபத்தில் 15 மாதக் குழந்தை உயிரிழந்துள்ளதுடன் 11 பேர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் நுவரெலியா வைத்திய சாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாகத் தெரிய வருவதாவது,
உடபுஸல்லாவ எனிக் தோட்டத்தில் இருந்து கடந்த சனிக்கிழமை கதிர்காமம் சென்று திரும்பியவேளை இந்த விபத்து நேர்ந்துள்ளது.
நேற்றுமுன்தினம் மாலை கதிர்காமத்தில் இருந்து புறப்பட்ட இவர்கள் வீட்டுக்கு மிக அருகாமையிலேயே விபத்தில் சிக்கியுள்ளனர்.
விபத்தில் படுகாயமடைந்த ஆண்கள் 5 பேரும் பெண்கள் ஆறு பேரும் டெல்மார் மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.
15 மாதக் குழந்தை வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளது. (த-ய-43)

# காட்டுக்குள் காணாமற்போன 5 பேரும் பாதுகாப்பாக மீட்பு

கொழும்பு, டிசெ 15
சிவனொளிபாத மலைக்கு அருகிலுள்ள ஏழு கன்னியர் மலை காட்டுப் பகுதிக்குள் காணாமற்போயிருந்த 5 பேரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் குறித்த ஐவரும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்.
கடந்த திங்கட்கிழமை காலை நல்லத்தண்ணி யூடாகக் குறித்த காட்டுப் பகுதிக்குள் சென்றிருந்த நிலையில் இவர்கள் காணமல்போயிருந்தனர். இவர்களைத் தேடி நேற்று முன் தினம் காலை முதல் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் மற்றும் இராணுவத்தினரும் காட்டுக்குள் சென்று தேடுதலில் ஈடுபட்டனர்.
இந்நிலையில் நேற்று முன் தினம் மாலை காட்டுக்குள்ளிருந்து அலைபேசி மூலம் தொடர்புகொண்ட காணமற்போனவர்களில் ஒருவர் தாங்கள் இருக்கும் காடு எந்தப் பகுதியெனத் தெரியவில்லையெனவும் லக்ஷபான மின் உற்பத்தி நிலையத்துக்கு நீரைக் கொண்டுசெல்லும் குழாய்க்கு அருகில் இருப்பதாகவும் தெரிவித்ததுடன் தாம் இருக்கும் இடத்தைப் பொலிஸாருக்கு காட்டும் வகையில் அங்கு தீ மூட்டிப் புகையெழுப்பியுள்ளனர். இதனையடுத்து நேற்று முன் தினம் இரவு அந்த பகுதிக்குச்சென்ற சிறப்பு அதிரடிப் படையினர் காணமற்போனவர்களை மீட்டுள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமயங்களின் ஊடாக நல்லிணக்கம் காணல்

*சர்வ மதத் தலைவர்களை உள்ளடக்கி மன்னாரில் கலந்துரையாடல்*

மன்னார், டிசெ.15
'சமயங்களினூடாக நல்லிணக்கம் காணல்' எனும் தொனிப் பொருளில் சர்வமதத் தலைவர்களை உள்ளடக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று புதன்கிழமை மன்னாரில் இடம்பெற்றது. இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டிலும் மன்னார் சமாதானத்துக்கும் மீள் இணக்கத்துக்குமான வளங்கள்(ஆர்.பி.ஆர்) அமைப்பின் அனுசரணையுடன் மன்னார் முருங்கன் டொன் பொஸ்கோ கேட்போர் கூடத்தில் இது நடைபெற்றது.
'சமயங்களினூடாக நல்லிணக்கம் காணல்' எனும் தொனிப்பொருளில் மாவட்டங்கள் தோறும் மேற்கொள்ளப்பட்டு வரும் இன நல்லிணக்கம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.
இலங்கையில் இடம்பெற்ற முரண்பாடுகளின் பின்னர் ஏற்பட வேண்டிய நல்லிணக்கத்துக்காகவும், சமூக ஒத்திசைவுக்காகவும் சமயங்களுக்கிடையே மக்களுடன் மக்களை இணைந்து செயற்படுவதை வலுப்படுத்துதல் போன்றவை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.
இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் நிகழ்ச்சித் திட்ட அதிகாரி எப்.நிக்ஸன் குரூஸ், மன்னார் சமாதானத்துக்கும் மீள் இணக்கத்துக்குமான வளங்கள்(ஆர்.பி.ஆர்) நிறுவனத்தின் மாவட்ட திட்ட முகாமையாளர் வி.ஸ்.செல்வநந்தராஜா, சர்வமதத் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், கிராம மட்ட பிரதி நிதிகள் எனப் பலரும் அதில் கலந்துகொண்டனர். (ற-21,56)

# கசிப்பு உற்பத்தி சந்தேக நபர்களுக்கு விளக்க மறியல்


தென்மராட்சி, டிசெ.15
மிருசுவில் தவசிகுளத்தில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது. கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து தவசிகுளம் காட்டுப் பகுதியில் உள்ள குளத்துப் பகுதியில் தேடுதல் நடத்திய பொலிஸார், கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேகத்தில் இருவரைக் கைது செய்தது. 20.750 லீற்றர் கோடா, 75 லீற்றர் கசிப்பு, கசிப்பு உற்பத்திப் பொருள்கள் என்பவற்றையும் கைப்பற்றியது.
கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டனர் என்று குற்றம் சாட்டப்பட்ட சந்தேகநபர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிவான் மன்றில் வழக்க தாக்கல் செய்யப்பட்டு, நேற்று இருவரும் நீதிமன்றில் முற்படுத்தினர். அவர்களை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-9)

# திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.15
யாழ்ப்பாணம் சின்மயாமிஷன் ஆச்சிரமத்தில் நாளை காலை 7 மணி முதல் திருவாச முற்றோதல் நிகழ்வு நடைபெறவுள்ளது. நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப. 3 மணி முதல் மாலை 5மணி வரை குருதிக் கொடை முகாம் நடைபெறவுள்ளது. குருதிக் கொடை வழங்க விரும்புவோர் அதில் பங்குகொள்ளலாம் என்று யாழ்ப்பாணம் சின்மயாமிஷன் ஆச்சிரமத்தினர் தெரிவித்தனர். (ற-7)

# மாகம்புரவில் பொருள்களை ஏற்றியிறக்கும் கடற்படையினர்

*துறைமுகப் பணியாளர்களின் பணிப்புறக்கணிப்புக் காரணமாக*



யாழ்ப்பாணம், டிசெ. 15
அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பணியாளர்கள் ஒரு வாரமாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், கடற்படையினர், துறைமுகப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனாவுக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, துறைமுகப் பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்தப் போராட்டத்தினால், அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்த கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கவோ, கப்பல்களில் பொருள்களை ஏற்றவோ முடியாத நிலை காணப்பட்டது.
பெரிய கப்பல் நிறுவனங்கள் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு வருவதைத் தவிர்க்கப் போவதாக எச்சரித்திருந்தன. இந்த நிலையில், கடற்படையினர் துறைமுகத்தில் கப்பல்களைக் கையாளும் பொறுப்பை நேற்று ஏற்றுக் கொண்டனர்.
அம்பாந்தோட்டையில் தரித்து நின்ற வாகனங்களை ஏற்றும் கப்பலில், 1086 கார்கள் மற்றும் ஜீப்கள் கடற்படையினரால் ஏற்றப்பட்டன. இந்த தென் கொரியக் கப்பல் கடந்த 11ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்திருந்தது.
துறைமுகத்துக்குள் கொண்டு வரப்பட்ட இந்தக் கப்பலில் வாகனங்கள் ஏற்றும் பணி இன்று முடிவுக்கு வந்ததும், தென்னாபிரிக்காவின் டர்பன் துறைமுகத்துக்குப் புறப்பட்டுச் செல்லும்.
வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட பணியாளர்களால் சேதமாக்கப்பட்ட மின்பிறப்பாக்கிகள், மின் விநியோகக் கட்டமைப்பு மற்றும் இயந்திரங்களையும் கடற்படையினர் திருத்தியமைத்துள்ளனர்.
ஏற்கனவே பணியாளர்களால் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜப்பானிய கப்பலையும் கடற்படையினரே விடுவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)



மாந்தை மாற்றுத் திறனாளிகளுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் மடு வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பகுதிகளில் மாற்றுத் திறனாளிகளான பெற்றோர்களின் பிள்ளைகளுக்கும், வறிய மாணவர்களுக்கும் பாடசாலை கற்றல் உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன. வட மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன், மாந்தை மேற்கு உதவி மாவட்ட செயலாளர், மடு வலய கல்விப்பணிப்பாளர், அதிபர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். மாந்தை மாற்றுத் திறனாளிகளுக்கான அமைப்புக்கு வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் தனது மாகாண சபை பாதீட்டு நிதியில் இருந்து கொள்வனவு செய்த அலுவலக தளபாடங்களையும் வழங்கினார். (ற-56)

# சகோதரனுடன் சண்டையிட்டு வீட்டை விட்டுச் சென்ற சிறுவன்

*சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு திணைக்களத்திடம் ஒப்படைப்பு*

வவுனியா, டிசெ.15
சகோதரனுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக வீட்டுக்கு செல்லாது தனித்து நின்ற சிறுவன் நேற்று வவுனியா சிறுவர் நன்னடத்தை பராமரிப்புத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டார்.
முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், தொட்டியடியைச் சேர்ந்த சண்முகலிங்கம் சதீஸ்குமார் (வயது-12) என்ற சிறுவனே சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டார்.
வவுனியாபொதுவைத்தியசாலைக்கு முன்பாக நேற்று பிற்பகல் 2 மணியளவில் 12 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் அநாதாரவாக நிற்பதைக் கண்ட ஓட்டோ சாரதி ஒருவர் சமூக செயற்பாட்டாளர் ஒருவருக்கு தகவல் வழங்கினார். அங்கு சென்ற சமூக செயற்பாட்டாளர் சிறுவனை கூட்டிச்சென்று வவுனியா இலுப்பையடியிலுள்ள சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு திணைக்கள அதிகாரியிடம் ஒப்படைத்தார்.
தனது சகோதரன் தன் மீது தாக்கியதை அடுத்து வீட்டுக்கு சொல்லாமல் பஸ் ஏறி வவுனியாவிலிருக்கும் உறவினரின் வீட்டுக்கு வந்தேன் என்றும், உறவினரின் வீட்டுக்குச் செல்வதற்கு வழி தெரியவில்லை என்றும் அந்தச் சிறுவன் தெரிவித்துள்ளான்.
வவுனியா பொலிஸ் நிலையத்துக்குச் சிறுவனுடைய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. வவுனியா பொலிஸார் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பொலிஸாருடன் தொடர்பு ஏற்படுத்தியுள்ளனர்.
சிறுவன் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு சிறுவனின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்திக் கொண்டு பெற்றோரிடம் சிறுவனை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது.- என்று சிறுவர் நன்னடத்தை பராமரிப்புத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ற-21)

# 21 வயதுக்குக் குறைந்தோருக்கு சிகரெட் விற்றோருக்கு தண்டம்

21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்த 12 வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்று நேற்று தலா 4 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தது.
சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் பிரதேசத்தில் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது 21 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்த 12 வர்த் தகர்களுக்கு எதிராக நேற்று நீதிமன்று தண்டம் விதித்தது. (ற-9)

# தகைமையுள்ளவர்கள் நாட்டில் பற்றாக்குறை

*ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ. 15
இன்று எமது நாட்டில் வேலை வாய்ப்புகளுக்கான தகைமை உள்ளவர்கள் தான் பற்றாக் குறையாக உள்ளனர். வேலை வாய்ப்புக்களுக்கு பற்றாக்குறை யில்லை. இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
ஹிக்கடுவ, சீனிகம சிறீ ஜினரத்ன தொழிற் பயிற்சி, மூன்றாம் நிலைக் கல்வி நடுவண் நிலையத்தை நேற்று முற்பகல் மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் புதிய தலைமுறையை தொழில்திறன் மிக்க மனித வளமாகக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான வழி காட்டலையும் வளங்களையும் குறைவின்றிப் பெற்றுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.
அரச மற்றும் தனியார் துறையில் அதிக வேலைவாய்ப்புக்கள் உள்ள போதும் அதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவுடைய பயிற்றப்பட்ட ஊழியர்கள் இல்லாமை பெரிய பிரச்சினையாக உள்ளது. புதிய உற்பத்திப் பொருளாதாரத்தோடு ஏற்படும் தொழில் சந்தைக்குத் தேவையான நவீன தொழிநுட்ப அறிவுடன் கூடிய பயிற்சிகளைப் பெற்ற ஊழியர்களை நாட்டில் உருவாக்க முடியும் - என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் சமிக்ஞையை மீறிய பிரபல அரசியல்வாதியின் மகள்

*வழக்குத் தொடர நடவடிக்கை*

கொழும்பு, டிசெ 15

கொழும்பு-கண்டி வீதியில் கடந்த திங்கட்கிழமை போக்குவரத்துப் பொலிஸாரின் சமிக்ஞையை அலட்சியம் செய்துவிட்டு வாகனத்தை ஓட்டிச் சென்ற பிரபல அரசியல்வாதியொருவரின் இருபது வயது மகள் சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம்விரட்டிப்பிடிக்கப்பட்டார் என நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பு-கண்டி வீதியில் வேவல்தெனிய, ரதாவடுள்ள பிரதேசத்தில் கண்டியிலிருந்து கொழும்பு நோக்கி மிதமிஞ்சிய வேகத்தில் வந்துகொண்டிருந்த இந்த டிபெண்டர் வாகனத்தை நிறுத்துமாறு அங்கு கடமையிலிருந்த இரண்டு கான்ஸ்டபிள்கள் சைகை செய்துள்ளனர். எனினும், அந்த வாகனம் நிறுத்தாமல் தொடர்ந்து சென்றதால் கான்ஸ்டபிள்கள் இருவரும் தங்களது மோட்டார் சைக்கிளில் அதனை விரட்டிச்சென்று சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் வைத்து பஸ்யால சந்திக்கு அருகில் வாகனத்தை மடக்கிப் பிடித்துள்ளனர்.

வாகனத்தை ஓட்டிவந்த பெண் பிரபல அரசியல்வாதியொருவரின் மகளென விசாரணைகளின்போது தெரியவந்திருப்பதாகவும், அவரது சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்ட பின் அவரை ஜனவரி மாதம் 23ஆம் திகதி அத்தனகலை நீதிமன்றத்தில் முற்படுமாறு பணித்திருப்பதாகவும் நிட்டம்புவ தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# இந்தியாவுக்குச் சென்றுள்ள 2 கொள்கலன் மீது சந்தேகம்

*தீவிர சோதனை நடத்துமாறு அறிவிப்பு*

கொழும்பு, டிசெ 15

1,200 கோடி ரூபா பெறுமதியான கொக்கெய்ன் போதைப் பொருள் பிடிபட்ட கப்பல் மூலம் தேக்குமரக் குற்றிகளுடன் வந்த மேலும் இரு கொள்கலன்கள் இந்தியாவுக்கு ஏற்கனவே சென்றிருப்பதால் அந்தக் கொள்கலன்கள் மீது தீவிர பரிசோதனை நடத்துமாறு இலங்கை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் இந்திய அதிகாரிகளுக்கு அறிவித்தல் கொடுத்துள்ளனர்.

ஈக்குவடோரிலிருந்து இந்தியாவை நோக்கி வந்த பெப்யோவா' எனும் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் தரித்திருந்தபோது அதிலிருந்த கொள்கலன் ஒன்றுக்குள் தேக்கு மரக் குற்றிகளுடன் நடுவில் சூட்சுமமாக ஒளித்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகை கொக் கெய்ன் பிடிபட்டது.

அந்தக்கப்பலில் வந்த மேலும் இரு கொள்கலன்கள் தேக்கு மரக் குற்றிகளுடன் இந்தியாவில் புதுடில்லியிலுள்ள பாரத் ரிம்பர் நிறுவனத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இந்தக் கொள்கலன்களிலும் கொக்கெய்ன் ஒளித்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளதால் அந்தக் கொள் கலன்களைத் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்துமாறு இந்திய அதிகாரிகளுக்கு அறிவித்தல் கொடுக் கப்பட்டிருப்பதாக கொழும்பு போதைப் பொருள்ஒழிப்புப்பிரிவின்உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (நி)




# வாகரையில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

*அரச காணி விற்பனை, காடழித்தல் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து*

செங்கலடி, டிச.15

அரச காணியைச் சட்டவிரோதமாக விற்பனை செய்தல், காடழித்தல் போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுக்குமாறு கோரி நேற்று மட்டக்களப்பு - வாகரை பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வாகரை பிரதேச செயலகத்தின் பிரதான வாயிற்கதவு பொதுமக்களால் பூட்டப்பட்டு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வாகரை பிரதேச செயலகத்திற்குப்பட்ட கதிரவெளி, புச்சாக்கேணி, புதூர் பகுதிகளில் அரச காணிகளைச் சட்டவிரோதமாக விற்பனை செய்தல், காடழிப்பு என்பவற்றைத் தடுப்பதுடன் குறித்த பகுதிகளில் உள்ள அரச காணிகளை உடனடியாகப் பிரதேச செயலகம் கையகப்படுத்தவேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் கோரினர்.

இது தொடர்பாகப் பிரதேச அபிவிருத்திக் கூட்டங்களில் அரசியல்வாதிகளிடம் எடுத்துக் கூறியும் இதுவரை காணிப் பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை என்றும் அவர்கள் குற்றம் சுமத்தினர்.

இதன்போது குறித்த இடத்திற்கு வருகைதந்த பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகியிடம் கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதேச செயலாளர் அங்கு உறுதியளிததையடுத்து பிரதேச செயலகத்தின் பிரதான வாயிற்கதவு திறக்கப்பட்டு உத்தியோகத்தர்கள் உள்நுழைய அனுமதிக்கப்பட்டனர். (த-ய-47)

# மனைவி, பிள்ளைகள் வெட்டிக் கொலை; குடும்பஸ்தரின் மறியல் நீடிப்பு

திருமலை, டிச.15

திருகோணமலை - உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளிகுஞ்சுமலைப் பகுதியில் புதையலுக்காக மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளையும் வெட்டிக் கொலை செய்த சந்தேகநபரை எதிர் வரும் 28ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் டி.சரவணராஜா நேற்று உத்தரவிட்டார்.

கன்னியா - கிளிகுஞ்சுமலை 4ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த ராஜலக்ஸ்மன் (வயது-36) என்பவருக்கே விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

கடந்த மாதம் 13ஆம் திகதி காலை தனது மனைவியான நித்தியா (வயது-32) மற்றும் மகள்மாரான காயத்திரி (வயது-11), சந்தியா (வயது-8) ஆகிய மூவரையும் வாளால் வெட்டிக் கொன்ற குற்றச்சாட்டில் கையில் வாளுடன் இவர் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சூரங்கல் - சாந்திநகர் பகுதியில் கடந்த மாதம் 20ஆம் திகதி தனது கர்ப்பிணி மனைவியான நளீம் ஜனூபா (வயது-15) என்பவரைக் கழுத்தை நெரித்துக் கொலை செய்த குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யயப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அதே இடத்தைச் சேர்ந்த அஹமட் பிர்னாஸ் (வயது-18) என்பவரை இம்மாதம் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் டி.சரவணராஜா நேற்று உத்தரவிட்டார். (த-ய-45)

# வாகன சாரதிகள் அனைவரும் விதிகளில் தேற வேண்டும்

யாழ்ப்பாணம், டிசெ.15

பயணிகள் போக்குவரத்து என்பது வடக்கில் ஆபத்தானதாக மாறிவிட்டது. பயணிகள் சேவைகளில் ஈடுபடுகின்ற சாரதிகள் முதலில் போக்குவரத்து விதிமுறைகளை முழுமையாக ஒழுங்காக கற்றுத்தேற வேண்டும்.

இவ்வாறு யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஓய்வு நிலை உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஓட்டோ சாரதிகளுக்கு போக்குவரத்து விதிமுறை தொடர்பான முழுமையான பயிற்சிப்பட்டறை அண்மையில் நடத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

சாரதி என்ற தொழிலைப் பொறுப்பேற்றவர்கள் ஒழுக்கம், பண்பு, மனிதநேயம் என்பவற்றுக்கு மேலதிகமாக பயணிகள் பயணிக்கும் வீதியில் எவ்வாறு சாரத்தியம் செய்ய வேண்டும் என்பதை முழுமையாக அறிந்து கொள்ளவேண்டும். கடந்த காலங்களோடு ஒப்பிடுகையில் தற்போது விபத்துக்கள் அதிகரித்துள்ளன. மனித உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. வீதிகளில் சாரத்தியம் செய்யும் சாரதிகள் மிகப் பொறுப்பு வாய்ந்தவர் களாக ஒழுக்கமிக்கவர்களாக திகழ வேண்டும்.- என்றார்.

விபத்துக்கள் ஏன் ஏற்படுகின்றன. விபத்தை எவ்வாறு தவிர்க்கலாம் என்ற விடயங்களை காணொலி மூலம் அவர் விளக்கினார். (ற-50)

# பிளவுபடாத நாட்டுக்குள் உரிய தீர்வை கேட்கிறோம்

*கூறுகிறார் கிழக்கு விவசாய அமைச்சர்*

களுவாஞ்சிக்குடி. டிசெ 15

நாங்கள் பிளவுபடாத இந்த நாட்டுக்குள் உரிய தீர்வைக் கோரியே நிற்கின்றோம். எமது தலைவர் சம்பந்தன் என்ன சொல்கின்றார் என்பதைத்தான் பிரதமரும், ஜனாதிபதியும் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் எனக் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - மண்டூர் விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் நாம் அதிகாரங்களை வைத்துக் கொண்டு, இனம், விடுதலை, தேசியம் என்பவற்றை மாத்திரமே சிந்தித்துக் கொண் டிருந்தோம். இதற்கு மக்களும் நிறைவான ஒத்துழைப்புகளை வழங்கியிருந்தார்கள்.

ஆனால் தற்போழுது அனைவரும் ஒன்றிணைந்து அரசமைப்பை உருவாக்குவோம் என்ற நிலமைக்கு வந்துள்ளோம். இந்த நிலையில் எமக்கு அதிகாரம் வேண்டும்,

அனைத்து அதிகாரங்களையும் மத்திய அரசே வைத்துக்கொள்ளட்டும்.

எமக்கு சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் பொலிஸ் அதிகாரம், காணியைக் கையாளுகின்ற அதிகாரம், மற்றும் விவசாயம், மீன்பிடி, கூட்டுறவு, சிறுகைத்தொழில், கல்வி, உள்ளிட்ட அதிகாரங்கள் கிடைக்க வேண்டும் - என்றார். (த-ய)

# மாடு, கோழி வளர்ப்புக்கு 50 வீத மானிய உதவிகள்

யாழ்.மாவட்டத்தில் பாதிப்புக்கு உள்ளாகிய மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு 200 குடும்பங்களுக்கு மாடு மற்றும் கோழி வளர்ப்பதற்கான 50 வீத மானிய உதவியாகத் தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

மாடு வளர்ப்பதற்குக் கொட்டகை, கோழி வளர்ப்பதற்கு கூடுகள் நிர்மாணிப்பதற்கே மானிய உதவிக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. பயனாளிகள் தெரிவுகள் பிரதேச செயலர் பிரிவு மற்றும் கால்நடைவைத்திய அதிகாரி பிரிவுகளை உள்ளடக்கி முன்னெடுக்கப்படவுள்ளன. போரால் பாதிப்புக்கு உள்ளாகிய வன்னியில் இருந்துமீளக்குடியேறியபெண் தலை மைத்துவக் குடும்பங்கள் ஆகியவற் றுக்கு முன்னுரிமை வழங்கி தெரிவுகள்மேற்கொள்ளப்படவுள்ளன.

மாடு வளர்ப்பதற்கான கொட்டகை மற்றும் கோழி வளர்ப்பதற்கான கூடுகள் நிறுவப்பட வேண்டும். ஒரு லட்சம் ரூபா உத்தேச செலவில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டத்துக்கு தலா 50 ஆயிரம் ரூபா மானியமாக வழங்கப்படவுள்ளது. வாழ்வாதாரமேம்பாடுமற்றும்போசாக்குஉணவு பயன்பாடு என்பவற் றைக் கருத்தில் கொண்டே மாடு, கோழி வளர்ப்பதற்கு மானிய உதவி வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்குடன் தொடர்பானோரை நிகழ்வுகளுக்கு அழைக்க பணிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.15
வட மாகாண உள்ளூராட்சி சபைகளால் நடத்தப்படும் உள்ளூராட்சி வார நிழ்வுகள் உட்பட அனைத்து நிகழ்வுகளுக்கும் மாகாண சபையுடன் தொடர்புடையவர்களை அழைக்கவேண்டும் என்று முதலமைச்சர் செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
உள்ளூராட்சி சபைகளால் நடத்தப்படும் நிகழ்வுகளுக்கு மாகாண ஆளுநர், மாகாண முதலமைச்சர், அமைச்சர்கள் மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள், மாகாண முதன்மைச் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளார், உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோர் நிகழ்வுகளில் பங்கேற்பதுடன் 'உள்ளூராட்சி பொதுச் சேவை பொதுமக்களுக்கு சிறப்பாக வழங்கப்படுகிறது ' என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# மழை பொய்த்ததால் பயிர் அழிவு அபாயம்

## முல்லை. விவசாயிகள் கவலை

யாழ்ப்பணம், டிசெ.15
முல்லைத்தீவு மாவட்டத்தில் கால போக பயிர்ச் செய்கைக்கு போதுமான மழை வீழ்ச்சி கிடைக்கவில்லை. பயிர்கள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.
இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் உதவிப்பணிப்பாளர் ஆஜகுலன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
"முல்லைத்தீவு மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டுக்கான காலபோக நெற் செய்கை 16 ஆயி ரத்து 889 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டது. பெரும்பாலான விவசாயிகள் மழையை நம்பியே விதைப்பில் ஈடுபட்டனர். விதைப்பு இடம்பேறும் காலப் பகுதியில் மழை பொய்த்ததால் விதைப்பும் பிந்தியே மேற்கோள்ளப்பட்டது.
விதைப்பின் பின்னர் பெய்த பருவ மழை பயிர்கள் முளை விடப் பொதுமானதாக இருந்தாலும் பயிர் வளர்ச்சி அடையும் காலகட்டத்தில் பற்றாக்குறையாகவே உள்ளது."- என்று விவசாயிகள் தெரிவித்தனர்.
இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் உதவிப்ப ணிப்பாளர் தெரிவித்ததாவது-
"முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோக செய்கைக்காக மேற்கொள்ளப்பட்ட பயிர்கள் அழிவடைந்தன என்று இதுவரை உறுதிப் படுத்தப்படவில்லை. இந்த நிலமை தொடருமானால் பெரும் பாதிப்பு ஏற்படக் கூடிய சந்தர்ப்பம் உண்டு.
மானா வாரியாக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாயிகளுக்கு மழை வீழ்ச்சி பொய்க்குமிடத்து அவை முழுமையாக அழிவடையும். கமநல சேவைத் திணைக்கள ஆளுகைக்கு உட்பட்ட சிறு குளங்களிலும் நீர்மட்டம் போதுமானதாக இல்லை.
இந்தக் குளங்களுக்கு கீழ் உள்ள வயல் நிலங்களுக்கும் முழுமையான நீர்ப் பாசனத்தை வழங்க முடியாதுள்ளது. ஒட்டுசுட்டான் குளத்துக்குக் கீழ் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள வயல் நிலத்துக்கு தற்போது குளத்தில் உள்ள நீரில் ஒரு தடவை தான் வழங்க முடியும். எனினும் அந்த வயல் நிலங்களுக்கு 12 தடவை தண்ணீர் வழங்க வேண்டி உள்ளது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதே போன்று தான் ஏனைய குளங்களிலும் போதுமான தண்ணீர் இல்லை என்றார். (ற-21,7)

# மாகாணங்கள் சமர்ப்பிப்பதை பட்ஜெட் என கூற முடியாது

யாழ்ப்பாணம், டிசெ.15
மாகாண சபையில் சமர்ப்பிக்கப்படுவதை வரவு-செலவுத் திட்டம் எனக் கருத முடியாது.
இவ்வாறு வட மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.
வட மாகாண சபையின் 69ஆவது அமர்வில் நடைபெற்ற 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
மாகாண சபையில் சமர்ப்பிக்கப்படுவதை வரவு - செலவுத் திட்டம் எனக் கருதுவதற்கு அருகதை கிடையாது. மாகாணத்துக்கான திட்டங்களை மத்தியே குறித்து ஒதுக்கீடு செய்து வழங்குகின்றது. இது 13ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் உள்ள குறைபாடாகும்.
இந்தச் சட்டத்தில் இதற்கான இடம் இல்லை என்பதே பெரும் விடயம். இனியும் வரப்போவது கிடையாது.
வடக்கு மாகாண சபைக்கு மூலதனச் செலவு என்னும் பெயரில் வழங்கும் நிதிகளில் 50 வீதத்துக்கும் மேலானவை திட்டத்தின் பெயரிலேயே வழங்கப்படுகின்றன. அது தொடர்பில் நாம் திட்டமிடமுடியாத நிலமை உள்ளது. வடக்குக்கு இரட்டிப்பு நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் கூறுகின்றார்.
ஆனால் வடக்கு மாகாண சபைக்கான நிதி 50 வீதம் குறைக்கப்பட்டுள்ளது என்று இங்கு கூறப்படுகின்றது. இவற்றில் எது சரியானது எனவும் கேள்வி எழுகின்றது. அவ் வாறானால் சபையின் நிதியைக் குறைத்து மத்தியின் நேரடித் திட்டத்துக்குள் நிதி சேர்க்கப் படுகின்றது.
இவ்வாறான நடவடிக்கை எவ்வாறு அதிகாரப் பகிர்வாக முடியும். உண்மையான அதிகாரப் பகிர்வும் வழங்கப்படுவது என்பது இவற்றினையும் உள்ளடக்கியதே.- என்றார். (ற-101)

# மயானத்துக்கு சுற்றுமதில் அமைப்பதற்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், டிசெ.15
புலம்பெயர்ந்த உறவுகளின் நிதி உதவியுடன் புதுக்குடியிருப்பு மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு இந்து மயானத்துக்கு சுற்றுமதில் அமைக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நடும் விழா நேற்று நடைபெற்றது.
புதுக்குடியிருப்பு இந்து மயானம் புதுக்குடியிருப்பு மாத்தளன் பிரதான வீதியில் அமைந்துள்ளது. மயானத்துக்கு சுற்று மதில் அமைக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.



தற்போது சுற்றுமதில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அடிக்கல் நடும் விழாவில், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரதீ பன், கரைதுறைப் பற்று பிரதேச செயலாளர் குண பாலன், புதுக்குடியிருப்பு பிரதேச சபைச்செயலாளர் ஜெயராஜ், புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அதிகாரி, புதுக் குடி யிருப்பு மேம்பாட்டு பேரவை உறுப்பினர்கள் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-7)

# வடக்கு மாகாண சபை பேச்சிலேயே முதலிடம்

## மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், டிசெ.15
வட மாகாண சபை கடந்த 3 ஆண்டுகாலத்தில் சாதித்தது பேச்சுப் போட்டிகளில் முதலாம் இடம் பெற்றுக்கொண்டமை மட்டுமே.
இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் தெரிவித்தார்.
வட மாகாண சபையின் 69ஆவது அமர்வில் வரவு- செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
நிதிகள் யாவும் குறித்தொதுக்கப்பட்டே கிடைகின்றன என்று எதிர் கட்சித் தலைவர் கூறினார். கிடைத்த நிதியில் ஏதாவது ஒரு திட்டத்தை மாற்றுவதற்கான அனுமதி கோரப் பட்டதா?. அவை தொடர்பில் அரசிடம் சவால் விடவேண்டும். நாம் மாகாண சபை உறுப்பினர்கள் செய்ய வேண்டியவற்றைச் செய்யாது விட்டு நாடாளுளுமன்ற உறுப்பினர்கள் செய்யவேண்டியவற்றை செய்கின்றோம்.
மாகாணத்தின் சட்டம் ஒழுங்கு தொடர்பில் இதுவரைக்கும் எவற்றையும் மேற்கொள்ளவில்லை . அண்மையில் கூட அச்சுவேலிப் பொலிஸார் வேண்டுமென்றே ஓரிடத்தில் வாளை வைத்துவிட்டு ஒருவரைக் கைது செய்துள்ளனர். இங்கு என்ன இடம்பெறுகின்றது என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். இவை தொடர்பில் நாம் என்ன செய்துள்ளோம்.-.என்றார்.
பின்னர் உரையாற்றிய மாகாண சபை உறுப்பினர் சர்வேஸ்வரன் தெரிவித்ததாவது:
நாடாளுமன்ற நிதி ஒதுக்கீட்டின் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள், வைத்தியர்கள் உள்ளிட்ட அனைவருக்குமான வாகன அனுமதிகள் நிறுத்தம் என்றே கூறப்பட்டது. வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அரசுக்கு எதிராகவும் தீர்மானம் நிறைவேற்றுகின்றனர் என்ற வெளிப்பாட்டில் மாகாண சபை உறுப்பினர்கள் தவிர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், வைத்தியர்களின் அனுமதிகள் வழமை போன்றே வழங்கப்பட்டுள்ளன.- என்றார்.
மாகாண சபைகளில் இடம்பெறும் வீண் விரயங்கள் குறைக் கப்பட வேண்டும். உதாரணமாக டயறிகள் மற்றும் விழாக்களுக்கான அழைப்பிதழ்கள் என்பவற்றுக்கு அதிக செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எமது பிரதேசத்தில் இன்றும் பல மக்கள் வறுமையில் உள்ள நிலையில் இவை தேவையற்றவை. அழைப்பிதழ்கள் ஒரு கடிதம் மூலம் அச்சிட்டால் போதுமானது.- என்று மகாணசபை எதிர்க் கட்சி உறுப்பினர் தவநாதன் தெரிவித்தார்.
மாகாண சபை உறுப்பினர் சிவனேசன் தெரிவித்ததாவது:
மாகாண சபை உறுப்பினர்களின் நிதிக்கான திட்டங்களில் ஏற்படும் மாற்றம் காரணமாகவே தாமதம் அடைகின்றன என்றும், அவை உறுப்பினர்களின் தாமதம் என்றும் கூறப்பட்டது. உண்மையில் அது உறுப்பினர்களின் தாமதம் அல்ல. அண்மையில் நாடாளுமன்றில் இடம்பெற்ற விவாதத்தின்போது வவுனியா மாவட்டத்தின் பொருளாதார மையத்தின் தாமதமானது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாகாண சபை உறுப்பினர்களுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடே காரணம் என அமைச்சர் உரையாற்றினார். அதற்கு அனைவரும் மௌனம் காத்துவிட்டனர்.- என்றார்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் 41 ஆயிரத்து 917 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 292 மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 21 ஆயிரத்து 702 பேர் வேலையற்றுள்ளனர். அதனாலேளே மாவட்டம் வறுமை நிலையில் உள்ளது. கடலில் தொழிலுக்கு மறுப்பு, தரையில் மகாவலி என்னும் பெயரில் நில ஆக்கிரமிப்பு. எவ்வாறு மக்கள் வாழ்வது?. போர் உள்ளிட்ட காரணங்களால் 11 ஆயிரம்பேர் க.பொ.த சாதாரணம் கூடத் தோற்றாதவர்களாகவே உள்ளனர். அவர்களில் பலர் மாற்றுத்திறனாளிகளாகவும் உள்ளனர். எனவே இவர்களின் வாழ்வாதாரத்திற்கு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் திட்டமிடவேண்டும்.- என்று உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார்.
யு.என்.டீ.பியின் கடிதத்துக்கு முதலமைச்சர் உறுப்பினர்களின் கருத்தை அறியாது பதில் அனுப்பியுள்ளார். அனைவரும் கருத்துத் தெரிவிக்கும் முகமாக அவரால் அனுப்பப்பட்ட கடிதம் தமிழில் மொழிபெயர்த்து வழங்க வேண்டும் என உறுப்பினர்கள் கோரினீர்கள். 5 ஆயிரம் ரூபா செலவு செய்து மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டு அனைவருக்கும் அனுப்பப்பட்டது. உறுப்பினர் பரஞ்சோதியைத் தவிர ஏனையோர் கருத்து அனுப்பவில்லை.- என்று சுட்டிக்காட்டினார் அவைத் தலைவர். (ற-21,101)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு வெற்றிடங்களை நிரப்ப புத்தாண்டிலும் நடவடிக்கைகள்

## வரவு - செலவுத் திட்ட ஆரம்ப உரையில் வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 15

2016 ஆம் ஆண்டு வடக்கில் காணப்பட்ட 2 ஆயிரத்து 55 பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டதைப் போல் 2017 ஆம் ஆண்டிலும் பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்த ஆண்டு வெளிநாட்டு நிதியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கில் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சரும், வடக்கு அரசின் நிதி அமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு அரசின் வரவு செலவுத் திட்டத்தை சபையில் நேற்று அவர் சமர்பிப்பித்து உரையாற்றினார். அதில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

### தற்போதைய நிலை

வடக்கு மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான - நான்காவது வரவு - செலவுத் திட்டத்தை இந்தச் சபைமுன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். விதிமுறையாக அதனைச் சமர்ப்பிப்பதற்கு முன் தற்போதைய எமது நிலை பற்றி சில விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

பல்வேறு இடப்பெயர்வுகள், மீள் குடியேற்றம் போன்ற சவால்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டே நீண்ட கால இலக்குடன் கூடிய அபிவிருத்திப் பாதையை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கின்றோம். வட. மாகாணத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்தி மற்றும் கலை, கலாசார விழுமியங்களை உள்வாங்கி மக்களுக்கான வாழ்வாதார நடவடிக்கைகளை அதிகரிக்கச் செய்து தேசிய ரீதியில் வடமாகாணம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வழங்கியுள்ளது. இந்த மாகாணமானது 2015ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.6 வீத பங்களிப்பைப் பதிவு செய்தது. தேசிய ரீதியில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வடக்கு மாகாணத்தின் விவசாயத் துறையானது 5.8 வீத பங்களிப்பையும், கைத்தொழில் துறையானது 2.4 வீத பங்களிப்பையும், சேவைத் துறையானது 3.9 வீத பங்களிப்பையும் வழங்கியுள்ளன.

மாகாண ரீதியில் 2015 ஆம் ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியை நோக்கும் போது வடமாகாணத்தின் விவசாயத்துறை 13 வீத பங்களிப்பையும், கைத்தொழில் துறை 19 வீத பங்களிப்பையும், சேவைத்துறை 68 வீத பங்களிப்பையும் வழங்கியுள்ளன.

2017ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தினூடாக அரச, தனியார் துறைகளில் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கக்கூடிய செயற்றிட்டங்கள் மற்றும் வருமான வாய்ப்புக்களை உருவாக்கக்கூடிய துறைகளில் முதலீடுகளை ஊக்குவித்தல், மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கக் கூடிய வகை யிலான பெறுமதிசேர் / உற்பத்தி மற்றும் சேவைத்துறைகளூடாக வருமானத்தை அதிகரிக்கச் செய்தல் மற்றும் பொருளாதார உட்கட்டமைப்புக்களை விருத்தி செய்தல் போன்றவற்றினூடாக மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு எமது மாகாணம் அதிகரித்த பங்களிப்பை வழங்குவதற்கு ஏற்ற வகையில் அபிவிருத்திக்கான இலக்குகள் துறைசார் ரீதியாக இனங்காணப்பட்டுள்ளன.

### இலக்குகள்

நாட்டின் மொத்த வேலைப்படையில் வடமாகாணம் 4.3 வீத பங்களிப்பைக் கொண்டிருக்கின்றது. வடமாகாணத்தின் மொத்த வேலைப்படையில் 94.7 வீதமானோர் தற்போது பல்வேறு துறைகளில் வேலைப் படையாக இயங்கும் அதே வேளையில் 5.3 வீதமானோர் வேலையற்றோராகக் காணப்படுகின்றனர்.

வடமாகாணத்தின் வறுமை நிலையை நோக்கும் போது 2013 ஆம் ஆண்டின் தரவுகளின் பிரகாரம் நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் வறுமை கூடிய மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் அதாவது 28.8 வீத வறுமைக் குறிகாட்டியை பதிவு செய்தது. மன்னார் மாவட்டம் 20.1 வீத வறுமை நிலையையும், கிளிநொச்சி மாவட்டம் 12.7 வீத வறுமை நிலையையும், யாழ்ப்பாண மாவட்டம் 8.3 வீத வறுமை நிலையையும், வவுனியா மாவட்டம் 3.4 வீத வறுமை நிலையையும் பதிவு செய்தன. வட மாகாணத்தின் பல்வேறு துறைகளிலும் தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கக்கூடிய முதலீடுகளை உருவாக்கி வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்வதும், சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்கூடாக மக்களின் வருமானத்தினை அதிகரிக்கச் செய்வதும் இந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அடையப்பட வேண்டிய இலக்குகளாக உள்ளன.

வட மாகாணம் தனது உள்ளக வள வாய்ப்புக்கள் ஊடாக வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல், மக்களுக்கான வருமான மட்டத்தை அதிகரிக்கச்செய்தல், கிராமிய பொருளாதாரங்களை அபிவிருத்தி செய்தல்; மாகாண மட்டத்தில் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல், சிறிய நடுத்தர விவசாயிகள் மற்றும் முயற்சியாளர்களுக்கு புதிய சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தி ஊக்குவித்தல், சிறிய நடுத்தர முயற்சியாளர்களது திறன்களை விருத்தி செய்தல், சுற்றுலா கைத்தொழிலை ஊக்குவித்தல், வறுமைத் தணிப்பு திட்டங்களை நடைமுறையாக்கல், போதைப் பொருள்களின் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள், சிறுநீரக நோய்த் தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள், போசாக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மனிதவள மேம்பாட்டை நோக்காகக் கொண்டு கல்வி மற்றும் சுகாதாரத்துறைகளுக்கு பொருத்தமான அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் போன்ற முக்கியமான விடயங்களிலும் 2017ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டத்தில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

### கூட்டுப் பொறுப்பு

70ஆவது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் பரிந்துரைகளுக்கு அமைவாக 2030ஆம் ஆண்டில் அடைய எதிர்பார்க்கப்படும் நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி இலக்குகளையும் (SDG) கவனத்தில் கொண்டு எமது அபிவிருத்திப் பாதையை நோக்கி நாம் பயணிக்க வேண்டியுள்ளது. வறுமை ஒழிப்பு, பசி ஒழிப்பு, நற்சுகாதாரம், தரமான கல்வி, பாலினச் சமத்துவம், தூய நீரும் துப்புரவும், மலிவான சக்தி, கண்ணியமான வேலைவாய்ப்பும் பொருளாதார மேம்பாடும், கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்புக்களை உருவாக்கல், சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல், நிலையான நகரங்கள் - சமூகங்களை உருவாக்கல், பொறுப்புடைய உற்பத்தியும் நுகர்வும், காலநிலை நடவடிக்கை, நீர் வாழ் உயிரினங்களைப் பாதுகாத்தல், தரை வாழ் உயிரினங்களைப் பாதுகாத்தல், சமதானம், நீதி போன்றவற்றை மேம்படுத்தி உறுதியான சமூகங்களையும் அமைப்புக்களையும் உருவாக்கல் மற்றும் இலக்குகளை அடைய கூட்டுப்பங்காண்மையை உருவாக்கல் போன்ற 17 இலக்குகளை ஐக்கிய நாடுகள் அடுத்த 15 வருடங்களில் நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி இலக்குகளாக 2015ம் ஆண்டில் அடையாளம் கண்டுள்ளது. அவற்றில் எமது நாடும் கையெழுத்திட்டுள்ளது. இவ்வாறான இலக்குகளை அடைவதில் எமக்கும் எமது நாட்டு அரசுக்கும் கூட்டுப் பொறுப்புள்ளது. முக்கியமாக 16ஆவது இலக்கு எமக்கு மிகவும் பொருந்தும். நிலைத்த அபிவிருத்திக்காக சமாதானத்துடன் எல்லோரையும் உள்ளடக்கிய சமூகங்களை உருவாக்கல் மற்றும் யாவருக்கும் நீதி கிடைக்கச் செய்தல் மேலும் தக்க உறுதியான அமைப்புக்களை சகல மட்டங்களிலும் உருவாக்கல் என்பதே அது. இவற்றை மத்தியும் மாகாணமும் மதித்து நடந்து கொள்ள வேண்டிய கடப்பாடு எம் அனைவருக்கும் உள்ளது. எல்லோரையும் மதித்து உள்ளடக்கக் கூடிய நீதியுடனான சமூகங்களை உருவாக்க நாம் யாவரும் இணைந்தால் நாட்டில் சமாதானம் உருவாகும் என்பதில் எவ்வித மாறுபாட்ட கருத்தும் இருக்க முடியாது.

### ஆளணி

வடமாகாணத்தின் நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை பயனுறுதிமிக்கதாகவும், வினைத்திறனுடையதாகவும் செயற்படுத்துவதற்கு ஆளணிகள் முக்கியமானவை. வடக்கு மாகாணத்திற்கு தேவைப்படும் ஆள ணிகள் தொடர்பாக சேவைப் பிரமாணக் குறிப்புக் களைத் தயாரித்து மாகாண சபைக் குட்பட்ட வெற் றிடங்களை முறையே நிரப்புவது இன்றியமையாததாகும். 2016ம் ஆண்டில் 2 ஆயிரத்து ஐந்து வெற்றிடங்கள் பல்வேறு பதவி நிலைகளிலும் நிரப்பப்பட்டன. மிகுதியாகவுள்ள வெற்றிடங்கள் சம்பந்தமாக சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் மற்றும் ஆள்சேர்ப்புத் திட்டத்தை தயாரித்து அந்த வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு 2017ஆம் ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும். மத்திய அரசினது வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவையும் உள்ளது. 2017ஆம்ஆண்டு மத்திய, மாகாண அரசு களின் கீழ் இனங்காணப்பட்டுள்ள ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வது இன்றியமையாததாகும்;.

### நிதி ஒதுக்கீடு

2016ஆம் ஆண்டுக்கு அதாவது இந்த வருடம் வடமாகாணத்தின் அபிவிருத்தித் தேவைகள் மற்றும் நடைமுறைச் செலவினங்களுக்காக நிதி ஆணைக்குழுவால் நிதி ஏற்பாடுகள் கீழ்வருமாறு மேற்கொள்ளப்பட்டன.

2016ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் வரையான காலப்பகுதியை நோக்கும் போது மீண்டுவரும் செலவினத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 19,157.16 மில்லியன் ரூபாவில் 17,522.29 மில்லியன் ரூபா (92 வீதம்) செலவு செய்யப்பட்டுள்ளது. பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடையின் (CBG) கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 475 மில்லியன் ரூபாவில் 311.45 மில்லியன் ரூபா (66 வீதம்) நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை செலவு செய்யப்பட்டுள்ளது. மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையின் (PSDG) கீழ் ஒதுக்கீடு செய்யப் பட்ட 3,199.3 மில்லியன் ரூபாவில் 1,941.78 மில்லியன் ரூபா (60 வீதம்) செலவு செய்யப்பட்டுள்ளது. எல்லா அமைச்சுக்களையும் சேர்த்தெடுத்துப் பார்த்தால் நடைமுறை முன்னேற்றம் 83 வீதம் வரை நடந்துள்ளது. சுமார் ஆயிரத்து 548 மில்லியன் ரூபா எமக்கு இன்னமும் அரசிடம் இருந்து கிடைக்க வேண்டியுள்ளது. வெளிநாட்டு நிதி உதவியின் கீழான மத்திய, மாகாண நிதி ஆளுகைக்குட்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட 4 ஆயிரத்து 993.7 மில்லியன் ரூபாவில் 2 ஆயிரத்து 862.51 மில்லியன் ரூபா (57 வீதம்) செலவு செய்யப்பட்டுள்ளது.

### முன்னேற்றம்

வடமாகாணத்தின் முக்கிய துறைகளை கவனத்தில் கொள்ளும்போது விவசாயத்துறையில் விவசாய உற்பத்திகளில் அதிகளவு வெளியீட்டுத்தன்மையை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தரமான உயர்ந்த இன விதை வகைகள், நவீன தொழிநுட்ப வசதிகள், காலத்தின் தேவைக்கேற்ப விவசாயிகள், விவசாயத்துறை அலுவலர்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் உட்கட்டுமான வசதிகளின் விருத்தி ஆகியவற்றின் மூலம் இந்த வருடம் கணிசமான முன் னேற்றத்தினை காணக்கூடியதாகவுள்ளது.

கால்நடைத் துறையும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக் கூடிய துறையாகக் காணப்படுகின்றது.

நாட்டின் தேசியக் கொள் கைக்கு அமைவாக உணவுப் பாது காப்புக் கொள்கையின் அடிப்படையில் போசாக்கான உணவு வகை களை பெற்றுக்கொள்ளக்கூடிய முறையில் கால்நடை வளர்ப்பு

(13ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நடவடிக்கைகள், சந்தைப்படுத்தல் வசதிகள், நவீன பால்பதனிடும் முறைகள் மற்றும் நவீன நுட்பங்கள் உள்வாங்கப்பட்டு கால்நடைத் துறையானது வடமாகாண நடுத்தர மற்றும் வறிய மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கச்செய்துள்ளது. விவசாயம் மற்றும் கால்நடை ஆகிய துறைகளை மேலும் வலுவூட்டக்கூடிய வகையில் நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் அபிவிருத்தியும் முக்கிய பங்காற்றுவதை கூற வேண்டியுள் ளது. வடக்கு மாகாணத்தில் பெரிய நீர்ப்பாசனத் திட்டமான இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டமானது துரிதமாக புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். எதிர்காலத்திலும் இவை அனைத்தும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உறுதுணையாக அமைவன என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை.

வடமாகாணத்தில் கல்வித் துறையை நோக்கும் போது பல் வேறு நிதி மூலங்களூடாக உட்கட்டுமான வசதிகள், நவீன தொழிநுட்ப வசதிகளை உட்புகுத்தல், தள பாடங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கல் மற்றும் கல்வித் துறைசார் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற பல்வேறு செயற் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியர் பற்றாக்குறையும் வரு டாந்தம் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. வடமாகாணத்தின் கல்வி நிலையை ஏனைய மாகாணங்களுடன் ஒப்படும் போது அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவைப்பாடு இன்றியமையாததாகவுள்ளது.

சுகாதாரத்துறையும் வடமாகாணத்தின் அபிவிருத்தியில் முக்கிய பங்காற்றுகின்றது. 2016ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக வைத்தியசாலைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள், கிராமிய சுகாதார நிலையங்கள் அபிவிருத்தி, மருத்துவர்கள் மற்றும் தாதிகளுக்கான விடுதிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகங்களுக்கான உட்கட்டுமான அபிவிருத்திகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் சுகாதாரத்துறை மேம்பாட்டுக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு இம்மாகாணத்தின் சுகாதாரக் குறிகாட்டிகள் முன்னேற்றம் அடைந்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. எதிர்காலத்தில் வடமாகாணத்தின் சுகாதாரத்துறை மேம்பாட்டைத் தொடர்ச்சியாகப் பேணும் வகையில் செயற்றிட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிதியளிப்புக்களுக்கூடாக வட மாகாணத்தின் வீதி அபிவிருத்திச்செயற்பாடுகளும் கணிசமான அளவு முன்னேற்றம் அடைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. வடமாகாணத்தில் காணப்படும் C மற்றும் D தரத்திலான ஆயிரத்து 747.77 கிலோ மீற்றர் வீதிகள் சீரமைக்க வேண்டியுள்ளன. 6 ஆயிரத்து 170.42 கிலோ மீற்றர் கிராமிய வீதிகளும் சீரமைக்கப்படவேண்டியுள் ளன. 2017ஆம் ஆண்டு வீதி அபிவிருத்திப்பணிகள், கிராமியப் பாலங்கள் அமைத்தல் போன்றவற்றிற்கான ஐரோட் போன்ற புதிய முதலீடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

சுற்றுலாத்துறை, வீடமைப்பு போன்றவற்றுக்கான அதிக தேவைப்பாடுகள் காணப்படினும் எமக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி மூலம் சிறிய அளவிலானதான தேவைப்பாட்டையே எம்மால் பூர்த்தி செய்ய முடிகின்றது. இவற்றிற்காக இனங்காட் டப்பட்ட தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடி தேவையான நட வடிக்கை எடுப்பது இன்றியமையாததாகும்.



### வரவு-செலவு திட்டம்

விதிமுறையாக 2017ம் ஆண்டுக்கான 4வது வரவு செலவுத் திட்டத்தை ஆராய்வோம். வடமாகாண சபையில் ஒருங்கி ணைந்த கட்டமைப்புக் கூடாக ஐந்து மாவட்டங்களிலும்செயற் படுத்தப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிதி ஆணைக்குழுவால் 2017ம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தினூடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விவரங்கள்:

வட மாகாண சபைக்கு 2017ஆம் ஆண்டுக்கு மீண்டெழும்செலவினங்களுக்காக 19 ஆயிரத்து 321.73 மில்லியன் ரூபாவும், மூலதன செலவினங்களுக்காக 2 ஆயிரத்து 208.38 மில்லியன் ரூபாவும், வெளிநாட்டு-உள்நாட்டு நிதியளிப்புகளுக்கூடான கருத்திட்டங்களுக்கு 3 ஆயிரத்து 409.73 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மீண்டுடெழும் செலவின நிதியீட்டமாக மத்திய அரசின் தொகுதிக் கொடையிலிருந்து 16,476.3 மில்லியன் ரூபாவும் மத்திய அரச சேகரிப்பு நிதியிலிருந்து 2 ஆயிரத்து 300 மில்லியன் ரூபாவும், மாகாணசபை வருமான சேகரிப்பு நிதியிலிருந்து 545 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடாக கிடைத்துள்ளன. இவ்வாறாக 19,321.73 மில்லியன் ரூபா வடக்கு மாகாண சபையின் மீண்டெழும் செலவினங்களுக்காக 2017 ஆம் ஆண்டு பயன்படுத்தப்படும்.

மூலதன செலவினங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 2 ஆயிரத்து 208.38 மில்லியன் ரூபாவில் பிரமாண அடிப்படையிலான கொடையின் (CBG) கீழ் 551.2 மில்லியன் ரூபாவும், மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக்கான நன்கொடையின்(PSDG) கீழ் ஆயிரத்து 657.18 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடாகக் கிடைத்துள்ளன.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடையின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 1 ஆயிரத்து 657.18 மில்லியன் ரூபாவில் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு 788 மில்லியன் ரூபாவும், சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு 737 மில்லியன் ரூபாவும், பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்திக்காக 120 மில்லியன் ரூபாவும், முன்னுரிமைப்படுத்தப்பட்ட அவசிய திட்டங்களை நிறைவேற்ற 12.18 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு இணை நிதியளிப்புக்களுக்கூடான அபிவிருத்தித்திட்டங்களுக்கென அனுமதிக்கப்பட்ட தொகையில் பாடசாலைக் கல்வியை ஓர் அறிவு மையத்தின் அடிப்படையாக மாற்றும் செயற்றிட்டத்துக்காக (TSEP) 315. மில்லியன் ரூபாவும், சுகாதாரத்துறை அபிவிருத்தித் திட்டங்களுக்காக (HSDP) 360 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

வடக்கு வீதி இணைப்பு அபிவிருத்தித் திட்டத்துக்காக 748.73 மில்லியன் ரூபாவும், இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்துக்காக ஆயிரத்து 077 மில்லியன் ரூபாவும், யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நீர் விநியோகத்துக்கும், சுகாதார மேம்பாட்டு கருத்திட்டங்களுக்குமாக 909 மில்லியன் ரூபாவும் மத்திய அரசின் நேரடியான நிதி ஆளுகையால் வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

### கிடைத்தது குறைவு

2017ஆம் ஆண்டுக்கு வடமாகாண சபையால் கோரப்பட்ட நிதித் தேவையின் பிரகாரம் மீண்டெழும் செலவினத்துக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதித் தேவை 22 ஆயிரத்து 329. 613 மில்லியன் ரூபாவாக இருந்த போதும், 19 ஆயிரத்து 321.737 மில்லியன் ரூபாவாவே இந்த மாகாணத்துக்கு அனுமதிக்கப்பட்ட தொகையாக கிடைத்துள்ளது. இது கோரப்பட்ட தொகையின் 86.5 வீதம் மட்டுமே.

மூலதனச் செலவின் கீழ் மாகாண குறித்தொதுக்கப்பட்ட மூலதன நன்கொடையின் மூலம் 10 ஆயிரத்து 672.48 மில்லியன் ரூபா நிதித் தேவைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் ஆயிரத்து 657.18 மில்லியன் ரூபாவே அனுமதிக்கப்பட்ட தொகையாக கிடைத்துள்ளது. அதாவது 16 வீதமான நிதியே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடையைப் பொறுத்த வரையில் 2016ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுடன் ஒப்பிடும் போது 16 வீத நிதி 2017ஆம் ஆண்டுக்கு கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பிரமாண அடிப்படை ஒதுக்கீடு (CBG)

ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினருக்கும் 2016ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீடாக (CBG) 6 மில்லியன் ரூபா வழங்கப்பட்டிருந்தது. அந்தத் தொகையே 2017ஆம் ஆண்டும் வழங்கப்படும்.

அந்த 6 மில்லியன் ரூபாவில் ஒவ்வொரு உறுப்பினரும் தாங்கள் மேற் கொள்ளவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கான முன்மொழிவுகளை 2017ஆம் ஆண்டின் சித்திரை மாதத்துக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் திட்டங்களில் மாற்றங்கள் ஏதும் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அவற்றை ஆனி மாதத் தின் இறுதிப் பகுதிக்கு முன்னர்சமர்ப்பிக்கவேண்டும். அதன் பின்னர் எந்தவிதமான திட்ட மாற்றங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. [illegible] முறைப்படுத்துவதில் 2016ஆம் ஆண் டில் பல திணைக்களங்கள் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர் நோக்கியிருந்தனர். குறிப்பிடப்பட்ட காலத்துக்குள் உறுப்பினர்களால் திட்டங்கள் சமர்ப் பிக்கப்படாது நிதி இருக் கும் பட்சத்தில் பொதுமக்கள் மற் றும் பொது அமைப்புக் களால் என்னிடம் உதவி கோரி சமர்ப்பிக்கப்பட்ட கோரிக் கைகளின் அடிப் படையில் பொருத் தமானவை தெரிவு செய்யப் பட்டு அந்த நிதி அனைத்தும் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக பயன் படுத்தப்படும்.

### மேலதிக நிதி

மாகாண சபை உறுப்பினர்கள் தங்களுக்கான பிரமாண அடிப்படை யிலான நிதி ஒதுக்கீடான 6 மில்லியன் ரூபாவை அதிகரித்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அந்தக் கோரிக்கை என்னால் ஆராயப்பட்டு வழங்கப்படவிருக்கின்ற ரூபா 6 மில்லியனுக்கு மேலதிகமாக தலா ஒரு மில்லியன் ரூபாவை ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினருக்கும் ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்காக ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினரும் காத்திரமான ஒரு திட்ட முன்மொழிவை அதாவது அவர்களுடைய வழமையான 6 மில்லியன் ரூபாவில் மேற்கொள்ளும் சிறிய திட்டங்களைப் போல் இல்லாது தனி ஒரு திட்டமாக குறித்த ஒரு மில்லியன் ரூபாவில் மேற் கொள்ள உத்தேசித்துள்ள அபிவிருத்தித் திட்டத்தைத் தர வேண்டும். அதைப் பல உறுப்பினர்கள் சேர்ந்தும் ஒரு திட்டமாகச் சமர்ப்பிக்கலாம் (உதாரணம் :- வீதி அமைத்தல்). அவ்வாறான திட்டத்தை சமர்ப்பித்தால் மட்டுமே நிதி ஒதுக்குவது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். திட்டமானது குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் மேலதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்படமாட்டாது. திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் உறுப்பினர்கள் எந்தத் துறைக்கு ஊடாகஅதனை முன்னெடுப்பதற்கு திட்டத்தினை சமர்ப்பித்துள்ளார்களோ அத்துறைக்கு ஊடாக சமர்ப்பித்த உறுப்பினரின் பெயரில் அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படும். மேற்குறிப்பிடப்படும் திட்ட முன்மொழிவானது 6 மில்லியன் ரூபாவில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்களுக்கான திட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 2017 ஆம் ஆண்டின் வைகாசி மாதத்தின் இறுதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என எதிர் பார்க்கப்படுகின்றது. அதன் பின்னர் எந்தவிதமான திட்டங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது

உறுப்பினர்கள் திட்டங்களைத் தயாரிக்கும் முன்னர் உதாரணமாக :- கோழி வளர்ப்பு, வீதி அமைத்தல் அல்லது திருத்துதல், கணினி கொள்வனவு செய்தல் போன்றவற்றை, துறை சார்ந்த திணைக்களங்கள் மற்றும் நிபுணர்களுடன் கலந்தாலோசித்து மதிப்பீடுகளைப் பெற்ற பின்னர் திட்டத்தைத் தயாரித்தால் பின்னர் அவற்றை மாற்ற வேண்டிய தேவை ஏற்படாது. அவற்றை இலகுவாகவும் விரைவாகவும் நடைமுறைப்படுத்தக்கூடியதாக இருக்கும். உறுப்பினர்கள் கூடிய தொகையை பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீடாக (CBG) எதிர்பார்த்திருப்பதை நான் அறிவேன். ஆனால் தரப்படும் நிதிகளை நாங்கள் முன்கவனத்துடன் செலவு செய்யப் பழகிக் கொள்ள வேண்டும்.

### ஒத்துழைப்பு அவசியம்

தரப்படும் நிதி ஒதுக்கீட்டில் ஒரு தொகைப் பணத்தைச் சேமித்து வைத்து அவசர தேவைகளுக்குப் பயன் படுத்துவதில் பிழையில்லை என்பதே எமது கருத்து. உதாரணத்துக்கு புனர்வாழ்வளித்தல், மகளிர் விவகாரம் போன்றவற்றுக்கு எமக்குப் பணம் இன்னமும் ஒதுக்கப்படவில்லை. இந்த மிகுதிப் பணத்தில் ஒரு பகுதியையே அவற்றுக்குப் பயன்படுத்த இருக்கின்றோம். அந்தப் பணம் அத்தியாவசிய அல்லது அவசர தேவைக்குப் பயன் படுத்தப்படுகின்றதா என்பதைக் கூர்ந்து அவதானித்து வருவது எங்கள் எல்லோரதும் பொறுப்பாகும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்துக்கு அனைத்து மாகண சபை உறுப்பினர்களதும் ஒத்துழைப்பு பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலதிக பணம் வேண்டும் என்பதிலேயே குறியாக இருக்காது ஆறு மில்லியன் ரூபாவை உரிய பயனாளிகளுக்குச் சென்றடைய வழி அமைக்க வேண்டும்.

2017ஆம் ஆண்டில் மேலும் பல நிதிமூலங்களூடான புதிய திட்டங்கள் உள்வாங்கப்படவுள்ளன.

1. ஜப்பான் அரசின் 3 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா நிதி உதவி யினூடான (REACH) ஊர் திட்டம் - இந்தத் திட்டமானது ஐந்து ஆண்டுகளை கொண்டதாகும். (2016-2020). கிராமிய வீதிகள், நீர்ப்பாசன வசதிகள், சிறந்த குடிநீர் வசதிகள் ஆகிய திட்டங்களை உள்ளடக்கியதாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.
2. ஒருங்கிணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டம் (I-Road) - 683.02 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன.
3. உலக வங்கியின் நிதியீட்டத்தின் கீழ் ஆயிரம் கிராமிய பாலங்களை அமைக்கும் திட்டத்தில், வடமாகாணத்தில் 87 பாலங்கள் அமைக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன.
4. விவசாயத்துறையை நவீனமயப் படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் - (USD) 25.0 மில்லியன் ரூபா மதிப்பீட்டில் ஐந்து ஆண்டுத்திட்டமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
5. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 20.0 மில்லியன் ரூபா தொகையில் வடக்கு மாகாணத்தில் நல்லாட்சியை ஏற்படுத்தும் நோக்கில் நிறுவனங்களின் இயலளவை அபிவிருத்தி செய்தல் எனும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வரவு- செலவுத்திட்டத்தின் மூலமான நிதி ஏற்பாடுகளுக்கமைய சிறந்தமுறையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை பயனுறுதி மிக்கதாகவும், வினைத்திறனுடையதாகவும் நடைமுறைப்படுத்துவது இன்றியமையாததாகும். புத்தாண்டில் கூடிய வினைத்திறனுடன் எமது நடவடிக்கைகளைக் கொண்டு நடத்த எவருடைய ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம். உறுப்பினர்கள் பல தேவைகளை வலியுறுத்தி வருகின்றார்கள். அவை மிகக் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். முதலமைச்சரின் அமைச்சின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பின்னர் ஆராயப்படும். இத்துடன் என் ஆரம்ப உரையை நிறைவு செய்து கொள்கின்றேன் - என்றார்.

(ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வர்தா புயலின் தாக்கத்தால் உயிரிழப்பு 16ஆக உயர்வு

சென்னை, டிசெ. 15
தமிழ்நாட்டின் சென்னை, காஞ்சிபுரம் திருவள்ளூர் மாவட்டங்களை கடந்த திங்கட்கிழமை தாக்கிய வர்தா புயலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்தது.
பலத்த காற்றின் காரணம் வீதிகளில் வைக்கப்பட்டிருந்த விளம்பரப் பலகைகள் தூக்கி வீசப்பட்டன. மரங்களின் கிளைகள் முறிந்தும், சில மரங்கள் அடியோடு பாறியும் விழுந்தன. வீடுகள் கட்டடங்களின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. விமான நிலையம் மூடப்பட்டது. ரயில், பஸ்களும் சேவையில் ஈடுபடவில்லை. இடிபாடுகளுக்குள் சிக்கியும் ஏனைய சில காரணங்களாலும் 11 பேர் உயிரிழந்தனர் என தெரிவிக்கப்பட்டது. நேற்றைய நிலவரத்தின்படி உயிரிழப்பு 16 ஆக அதிகரித்தது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 4 லட்சம் நிதியுதவி வழங்க தமிழ்நாட்டு முதலமைச்சர் பன்னீர்செல்வம் உத்தரவிட்டார்.
தவிர பாதிக்கப்பட்ட பொதுமக்களை நேரில்சென்றும் அவர் பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்தார். தி.மு. கழகத்தின் பொருளாளரும் தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவருமான ஸ்ராலினும் மக்களைச் சென்று சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். (ம-எ)

# ட்ரம்பை சந்திக்க எப்போதும் தயார்
## புடின் தெரிவிப்பு



அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப்பை எப்போதும் சந்திக்கத் தயாராகவே உள்ளேன் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்தார்.
அண்மையில் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் வெற்றிபெற்றார், ரஷ்யாவுடன் நல்லுறவு பேணப்படும் என்பது அவரது தேர்தல் பரப்புரைகளில் முக்கியமானதாக இருந்தது. ஜனாதிபதியாகத் தேர்வான பின்னரும் தன்னிலையில் ட்ரம்ப் உறுதியாக உள்ளார். அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவானமைக்காக ட்ரம்ப்புக்கு முதன்முதலாக வாழ்த்துத் தெரிவித்தவரும் புடினே. இந்த வரிசையில் புடினின் இந்தக் கருத்து அமெரிக்க, ரஷ்ய உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்று கருதப்படுகிறது.
ட்ரம்ப்பை சந்திக்க ரஷ்யத் தரப்பு எப்போதும் தயாராகவே உள்ளது. இரு நாடுகளதும் நல்லுறவைப் பற்றி ட்ரம்ப் தெரிவித்து வருகிறார். அதை நானும் ஆதரிக்கிறேன். அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னரே சந்திப்பு நடைபெறும்என்றுஎண்ணுகிறேன்என புடின் மேலும் தெரிவித்தார். (ம-எ)



# எகிப்து ஆலயக் குண்டுவெடிப்பு; ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்பு

கைரோ, டிசெ. 15
எகிப்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 24 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது.
கைரோவில் உள்ள தேவாலயத்தில் வழிபாடு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை 12 கிலோ எடையுடைய வெடிமருந்து மூலம் குறித்த தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து மூன்று தினங்கள் எகிப்தில் துக்கதினம் கடைப்பிடிக்கப்பட்டது. எகிப்து ஜனாதிபதி அப்தெல் பட்டா எல் செசி தனது கண்டனத்தைத் தெரிவித்தார். எந்த அமைப்புக்களும் குறித்த தாக்குதலுக்கு பொறுப்பெற்காமல் இருந்த நிலையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றது. (ம-எ)

# ஊடகவியலாளர் கை... நடப்பு வருடத்தில் மிக ...
## மோசமான பதிவை ஏற்படுத்தியது

வோஷிங்ரன், டிசெ. 15
உலக அளவில் கடந்த 3 தசாப்தங்களில் இல்லாத அளவுக்கு இந்த வருடமே அதிகளவான ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஊடகவியலாளரைப் பாதுகாக்கும் அமைப்பு நேற்று முன்தினம் தெரிவித்தது.
ஊடகவியலாளர்களின் கைதுகள் வருடாவருடம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. கடந்த வருடம் 199 ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அதிக ஊடகவியலாளர் களைக் கைதுசெய்த நாடு என்ற மோசமான அடைவை சீனா நிலைநாட்டியிருந்தது. இந்த வருடம் இதுவரை 259 ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஊடகவியலாளரை பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்தது.
சில மாதங்களுக்கு முன்னர் துருக்கியில் இராணுவப் புரட்சி நடத்த எத்தனிக்கப்பட்டது. மக்களினதும் இளைஞர்களினதும் கொந்தளிப்பால் குறித்த முயற்சி தோற்கடிக்கப்பட்டது. இந்தச் சதிச் செயலின் பின்னணியில் சில ஊடகங்கள் இருக்கின்றன என்று குற்றஞ்சாட்டிய துருக்கி அரசு 81 ஊடகவியலாளர்களைக் கைது செய்ததுடன் சில நிறுவனங்களுக்கு மூடுவிழா நடத்தியது. இந்த வருடம் அதிகளவான ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டதில் துருக்கியின் வகிபங்கே ... கம். இதனையடுத்து ந... வருடத்தில் அதிக ஊட... யலாளர்களைக்கைதுசெ... நாடு என்ற மோசமான ... சீனாவிடமிருந்து துருக்கி... கைமாறியது. 38 கை... ளுடன் சீனா இரண்...


துருக்கி அரசை...
ஆர்ப்பாட்டங்க...

# ஐ.எஸ். அமைப்பின் உறுப்பினர்கள் அமெ. தாக்குதலில் உயிரிழப்பு

டமஸ்கஸ், டிசெ. 15
அமெரிக்க கூட்டுப்படை சிரியாவில் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்த மூன்று முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்ரகன் நேற்றுமுன்தினம் தகவல் வெளியிட்டது.
கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலிலேயே அவர்கள் மூவரும் உயிரிழந்தனர்.
பிரான்ஸின் தலைநகர் பரிஸில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் பெல்ஜியத்தில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் அவர்கள் மூளையாகச் செயற்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-எ)





# மனித முகத்தைப் போன்ற பா... ஜப்பான் அருங்காட்சியகத்தி...

டோக்கியோ, டிசெ. 15
ஜப்பானின் சிசிபு நகரத்திலுள்ள அருங்காட்சியகத்தில் மனித முகங்களைப் பிரதிபலிக்கும் பாறைகள் காட்சிக்கு வைக்கப்பட்டன.
குறித்த பாறைகளில் மனித முகங்கள் செயற்கையாக செதுக்கப்படவில்லை. இயற்கையாகவே உருவான மனித முக பாறைகள் சேகரித்து அங்கு வைக்கப்பட்டுள்ளன. குறித்த அருங்காட்சியகத்தில் இதுவரை ஆயிரத்து 700 மனித முக பாறைகள் உள்ளன.
அழுவ... சிந்த... னைக... வெளிப்... பாறை... களாக... தெரிவி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதுகள்
# அதிகம்
## து துருக்கி




ங்கே அதி
து நடப்பு
ஊடகவி
கதுசெய்த
ான பதிவு
ருக்கிக்கு
கைதுக
ரண்டாம்


இடத்திலும் 25 கைதுகளு டன் எகிப்து மூன்றாவது இடத்திலும் உள்ளன.
இந்தப் பட்டியலில் காணா மல்போன அல்லது காணா மல் செய்யப்பட்ட ஊடகவிய லாளர்களின் விவரங்கள் உள் வாங்கப்படவில்லை. (ம-ள)



# டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவை ஒன்றிணைப்பார்

## பில் கேட்ஸ் பெருமிதம்

வொஷிங்ரன், டிசெ.15
அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள ட்ரம்ப், அமெரிக்காவை ஒன்றிணைப்பார் என்று கருத்துத் தெரிவித்துள்ளார் பில் கேட்ஸ். ட்ரம்ப், பில்கேட்ஸ் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதனையடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
முன்னாள் ஜனாதிபதி கெனடியின் சிந்தனையை ட்ரம்பில் நான் காண்கிறேன். அமெரிக்காவை புதுமை, புத்தாக்க முயற்சிகள் மூலம் மீளக் கட்டியெழுப்பலாம் என ட்ரம்ப் நம்புகிறார். அதை நடைமுறைப்படுத்தும் ஆற்றலும் அவரிடத்தில் உண்டு என பில் கேட்ஸ் மேலும் தெரிவித்தார். (ம-ள)



# அலெப்போ கட்டட இடிபாடுகளுக்குள் பற்பல சிறுவர்கள் பரிதவிக்கின்றனர்

## யுனிசெப் கவலை

டமஸ்கஸ், டிசெ. 15
அலெப்போ நகரில் இடம்பெற்ற போரில், கட்டட இடிபாடுகளில் சிக்கி நூற்றுக் கணக்கான சிறுவர்கள் பரிதவிக்கின்றனர் என்று யுனிசெப்நிறுவனம்கவலை தெரிவித்தது.
சிரியாவின் அலெப்போ நகர் கடந்த 2014 ஆம் ஆண்டிலிருந்து ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்தது. நகரை மீட்பதற்கு ரஷ்யா பெரும் போரை நடத்தி வந்தது. சில வாரங்களின் முன்னர் நகர் முழுவதும் மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. இந்த மீட்புப் போரில் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி ஏராளமான சிறுவர்கள் சிக்கியுள்ளனர் என்று யுனிசெப் தெரிவித்தது.
பெற்றோரை இழந்து அநாதையாக்கப்பட்ட சிறுவர்களே அவ்வாறு கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியும் ஏனையவிதங்களிலும் அல்லற்படுகின்றனர். அவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு உலகம் ஒன்றுபட வேண்டும் என்று குறித்த நிறுவனத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-ள)





பன்னாட்டு செய்தி நிறுவனங்களில் ஒன்றான ஏ.எவ்.பி. இந்த வருடத்தின் சிறந்த புகைப்படங்கள் என்று கருதும் சில படங்களைப் பட்டியலிட்டுள்ளது. அவற்றில் சில படங்களே இவை. உள்நாட்டுப் போர் காரணமாக ஐரோப்பாவுக்கு செல்லும் அகதிகள் படகொன்று விபத்துக்குள்ளானதை அடுத்து சிறுகுழந்தையொன்று மீட்கப்படும் படமும், சிரியாவில் இடம்பெற்றுவரும் போர் காரணமாக சிரியப் பெண் ஒருவர் தனது செல்லப்பிராணியான பூனையைக் கொண்டு இடம்பெயர்வதும் அவ்வாறான படங்களில் இடம்பெற்றுள்ளன. இதைவிட அமெரிக்கத் தேர்தலில் ட்ரம்ப் வெற்றிபெற்றமை, அவருக்கு எதிராகத் தற்போது இடம்பெறும் ஆர்ப்பாட்டங்கள், ஈராக் போர்ச் சூழல், கமரூனின் இறுதியுரை, அமெரிக்காவில் கறுப்பினத்தவர்கள் நடத்திய போராட்டம், ஹிலாரியின் தேர்தல் பரப்புரை ஆகியவற்றுடன் தொடர்புடைய படங்களும் இடம்பெற்றுள்ளன. (ம)



# அலெப்போ மக்களைக் கொன்றது இராணுவம்

## ஐ.நா. குற்றச்சாட்டு

அலெப்போ நகர மக்களை சிரிய இராணுவம் சுட்டுக்கொன்றது என்று ஐக்கிய நாடுகள் சபை குற்றஞ்சாட்டியது.
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்த அலெப்போ நகரை ரஷ்ய அரசின் உதவியுடன் சிரியா அண்மையில் கைப்பற்றியது. குறித்த போரில் சிரிய இராணுவம் தனது சொந்த ம[illegible] களையே கொலை செய்தது என்[illegible] தெரிவிக்கப்பட்டது. இதுவ[illegible] கிடைத்த தகவல்களின் படி 82 பே[illegible] இராணுவத்தினரால் கொ[illegible] லப்பட்டனர். அவர்களில் 11 பே[illegible] பெண்கள், 13 பேர் குழந்தைக[illegible] என்று ஐக்கிய நாடுகள் ச[illegible] மேலும் குற்றஞ்சாட்டியது. (ம-[illegible]

# பாறைகள்
# தில் வைப்பு



ழுவது, சிரிப்பது, வியப்பு. ந்தனை, போன்ற பாவ னகளை குறித்த பாறைகள் வளிப்படுத்துகின்றன. குறித்த றைகள் கடந்த 50 ஆண்டு ாக சேகரிக்கப்பட்டன எனத் தரிவிக்கப்பட்டது. (ம-ள)

# மலேசியாவில் புதிய மன்னர் முடிசூடப்பட்டா

கோலாலம்பூர், டிசெ. 15
மலேசியாவில் 15 ஆவது மன்னராக சுல்தான் என்பவர் நேற்று முன்தினம் முடிசூடப்பட்டார்.
ஆசிய வரலாற்றில் மிக இளவயதில் முடிசூடப்பட்ட மன்னர்களில் இவரும் ஒருவராகப் பெயரிடப்பட்டார். 47 வயதான சுல்தான் மொகமட் பிரிட்டனில் கல்வி கற்றவர். மன்னரின் பதவியேற்பு வைபவம் அந்த நாட்டின் தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது. (ம-ள)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சம்பந்தன் சிலவற்றைத் தெளிவுபடுத்தவேண்டும்

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகளை ஒருவரும் குழப்பக்கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார். அண்மைய நாள்களாக வெளியாகிவரும் செய்திகள், புதிய அரசமைப்பு வருமா என்கிற கேள்விகளை எழுப்பிவரும் நிலையில், சம்பந்தன் மீண்டும் இப்படி வலியுறுத்தியிருப்பதன் அடிப்படை என்ன என்பதை அவர் தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கான முயற்சிகளின் ஆரம்பத்தில், ஒற்றையாட்சி அல்லது கூட்டாட்சி (சமஷ்டி) என்கிற சொற்பதங்களில் தொங்கிக் கொண்டிருப்பதில்லை என்று இரு தரப்புத் தலைவர்களுமே ஆணித்தரமாகக் கூறிவந்தனர். சம்பந்தனேகூடப் பொது அரங்குகளில் பல தடவைகள் அதனைத் தெரிவித்திருந்தார். அவ்வாறே ஒற்றையாட்சி அல்லது கூட்டாட்சி என்ற பெயர்களைத் தவிர்த்துவிட்டு, புதிய பெயரில் ஒரு அரசமைப்பைக் கொண்டு வரலாம் என்று அரச தலைவர் மைத்திரிபாலவும் பல தடவைகள் கூறியிருக்கிறார்.

ஆனால், இப்போது புதிய அரசமைப்பு என்று வருகின்றபோது, ஒற்றையாட்சி அல்லது கூட்டாட்சி என்கிற பதங்களுக்குள்தான் எல்லோருமே சிக்கிக்கொண்டு திணறுகிறார்கள். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை அண்மையில் சந்தித்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கூட்டாட்சி இல்லாத ஒரு தீர்வை ஏற்பதற்குத் தமிழ் மக்கள் தமக்கு அங்கீகாரம் தரவில்லை என்று தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அதேநேரத்தில், தலைமை அமைச்சரின் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுத் தீர்மானம், கூட்டாட்சியைப் பரிந்துரைக்கவில்லை. அது 'ஏக்க ராஜ்ய' என்று குறிப்பிடுவது ஒற்றையாட்சியையும் குறிக்கலாம், ஒரே நாடு என்பதையும் குறிக்கலாம் என்றுதான் ரணில் விளக்கம் கூறுகின்றாரே தவிர, கூட்டாட்சியையே தனது கட்சி ஆதரிக்கும் என்று தெரிவிக்கவேயில்லை.

சுதந்திரக் கட்சியோ, இன்னமும் ஒருபடி மேலே போய்விட்டது. அதன் தலைவர்களில் பலரும் கூட்டாட்சியை ஏற்கப்போவதில்லை என்று வெளிப்படையாகவே ஊடகங்களிடம் கருத்துக் கூறுகிறார்கள். அதை அரச தலைவர் கட்டுப்படுத்துகிறார் போலவும் தெரியவில்லை. கடைசியாக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் உள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாணங் களுக்கு வழங்குமாறும், மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் இடையில் ஒரே விடயங்களில் அதிகாரங்களைப் பங்கிட்டுக்கொள் ளும் ஒருங்கியை பட்டியலை நீக்குமாறும், சுதந்திரக் கட்சி அரச தலைவருக்குப் பரிந்துரைக்கும் என்றும் செய்தி வெளியாகி இருக்கின்றது.

ஹெல உறுமய கட்சியோ, கூட்டாட்சியைத் தமிழர்கள் தொடர்ந்து கோரினால், சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாகிவிடும் என்று எச்சரிக்கிறது.

ஆக மொத்தத்தில், அரசில் உள்ள இரு முதன்மைக் கட்சிகளும், அரசுக்கு ஆதரவு வழங்கும் கட்சிகளும் கூட்டாட்சிக்கு இணக்கமில்லை என்பது தெளிவாகிறது. அதேநேரம், மாகாணங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கி, மேலும் சில சலுகைகளை வழங்குவதற்கு அவை தயாராக உள்ளன என்பதும் தெளிவு.

அதன் அர்த்தம், புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்காமல் மற்றொரு அரசமைப்புத் திருத்தம் மூலம், சில விட்டுக்கொடுப்புக்களை மட்டும் தமிழர்களுக்காகச் செய்வது என்பதே.

பல மாதங்களுக்கு முன்னர் இதே கருத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரத்ன யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருந்தார். புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வழிகாட்டல் குழுவின் முக்கியமானவரும், முதன்மையானவருமான உறுப்பினர் அவர். இப்போதுள்ள நிலையில் புதிய அரசமைப்பை உருவாக்க முடியாது, அரசமைப்புத் திருத்தத்தை மட்டுமே கொண்டு வரமுடியும் என்று அவர் தெரிவித்திருந்தார். அவரது கருத்துத்தான் மெய்ப்படும்போன்று இன்று தெரிகிறது.

இத்தகையதொரு நிலையில், புதிய அரசமைப்பு ஒன்று வரும் என்றும், அது அனைத்து மக்களினதும் ஆதரவையும் பெறத்தக்கதாக இருக்கவேண்டும் என்பதும் நடக்கக்கூடிய காரியங்கள் என்று சம்பந்தன் எப்படி நம்புகிறார் என்பதை அவர் தமிழ் மக்களுக்கு விளக்கவேண்டும். அப்படி அவர் உறுதியாக நம்புவதற்கான காரணங்களை அவர் பட்டியலிடவேண்டும். அப்படியில்லாதபோது அதைக் குழப்பாதீர்கள் என்று அவர் கேட்பதை, மக்கள் ஏற்பது நடக்கக்கூடிய காரியமாகத் தெரியவில்லை.



# மகிந்தவுக்கு இரகசியத் தகவல் வழங்கியவர் யார்?

அண்மைக்கால அரசியல் சுவாரஸ்யங்கள்

வீ.எஸ்.ரி

**ஜனாதிபதியின் வழமையான மந்திரம்**

அண்மைய தொடர் வேலை நிறுத்தப் போராட்டங்களால் அரசியல் களம் சூடு பிடித்திருந்தது. மருத்துவர்களது வேலை நிறுத்தத்தைவிட, நாளாந்த வாழ்க்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தியது தனியார் பஸ் தரப்பினரது வேலை நிறுத்தமே. தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன வேலை நிறுத்தத்திலிருந்து விலகியிருந்தாலும், ஏனைய பிராந்தியச் சங்கங்களூடாக அது முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதியுடனான பேச்சுக்களையடுத்து ரயில்வே ஊழியர் சங்கங்களது வேலை நிறுத்தம் கைவிடப்பட்டபோதிலும், பேச்சுக்களின்போது வேலை நிறுத்தங்களால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இயலாது; பேச்சுக்களின் மூலமே அது இயலும்" எனத் தெரிவித்த ஜனாதிபதியின் வார்த்தைகளில் கண்டிப்புத் தொனி கலந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

> “ஜனாதிபதியுடனான பேச்சுக்களையடுத்து ரயில்வே ஊழியர் சங்கங்களது வேலை நிறுத்தம் கைவிடப்பட்ட போதிலும், பேச்சுக்களின்போது வேலை நிறுத்தங்களால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இயலாது; பேச்சுக்களின் மூலமே அது இயலும்" எனத் தெரிவித்த ஜனாதிபதியின் வார்த்தைகளில் கண்டிப்புத் தொனி கலந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

**நிதி ஒதுக்கீடு தொடர்பாக கிரியெல்ல - பைசர் மோதல்**

கடந்த இரு வாரங்களுக்கு முன்னரான அமைச்சரவைக் கூட்டம், ஒரு சமயம் காரசாரமாகவும் மற்றொரு சமயம் வேடிக்கையாகவும் இடம்பெற்றது. அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவின் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் 4500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டமையை உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பெருந்தெருக்கள் புனரமைப்பு மட்டுமன்றி, கிராமமட்ட வீதிகள் புனரமைப்பும் தமக்கு ஒதுக்கப்பட்டதாலேயே இத்தகைய பெரிய தொகை தமது அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டதாக லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். “அதெப்படி முடியும்? உள்ளூராட்சி அமைச்சின் கீழல்லவா கிராம மட்ட வீதிகள் புன்ரமைப்பு வேலைகள் வருகின்றன. அவற்றுக்கான நிதி ஒதுக்கீடு எனது அமைச்சுக்கு வழங்கப்பட வேண்டும்" என அடம் பிடித்தார் பைசர் முஸ்தபா. இதனால் சினமடைந்த லக்ஸ்மன் கிரியெல்ல, அந்த நிதி எனது அமைச்சுக்கான ஒதுக்கீடு. அதனை நான் விட்டுக் கொடுக்கப் போவதில்லை" என ஆக்ரோசத்துடன் தெரிவித்தார். நிலமை சூடு பிடிப்பதை அவதானித்த ஜனாதிபதி சிறிசேன, இப்போது வேலை எதுவும் ஆரம்பிக்கப்படவில்லையே? நாங்கள் இந்தப் பிரச்சினை குறித்துக் கலந்தாலோசித்து முடிவெடுப்போமே? என பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். அதன் பின்னர் அமைச்சர்கள் இருவரும் வாக்குவாதத்தை நிறுத்திக் கொண்டனர்.

**மடத்தனமான வேலை என ஜனாதிபதி விமர்சிப்பு**

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் முன்னாள் தலைவர் உதவிப் பொலிஸ்மா அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரத்சந்திர கைது செய்யப்பட்டமை தொடர்பாக ஜனாதிபதி கடும் தொனியில் கருத்து வெளியிட்டார். என்ன மூடத்தனமான வேலை? பெரிய அளவில் ஊழல் புரிந்த பலர் வெளியில் இருக்கத்தக்கதாக, இந்த மனிதரைக் கைது செய்திருக்கிறார்களே? அவர் தொடர்பாக திணைக்கள மட்டத்தில் கூட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையே?" என்று ஆத்திரத்துடன் தெரிவித்தார் ஜனாதிபதி . ஜனாதிபதி சூடாகியிருந்ததன் காரணமாக, அமைச்சரவை உறுப்பினர்களில் எவரும் அவ்வேளை வாயே திறக்கவில்லை. ஆயினும் சரத்சந்திர பொலிஸ் நிதிக் குற்றவியல் பிரிவினரால் கைது செய்யப்பட்டமை தொடர்பாக அமைச்சர்களில் சிலர் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

**பின்புறம் உயரமான பஸ் எப்படியிருக்கும்?**

அமைச்சரவைப் பத்திரங்கள் பரிசீலிக்கப்பட்ட சமயம், போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவால் சமர்ப்பிக்கப்பட்ட, பின்புறம் உயரமான பஸ்களைக் கொள்வனவு செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைப் பார்வையிட்ட ஜனாதிபதி, இந்தப்பின்புறம் உயரமான பஸ் குறித்து அமைச்சர் நிமல் சிறிபாலவுக்கு மட்டுமே விவரம் புரியும் எனச் சிரித்தபடியே கூற, அமைச்சர்கள் சகலருமே ஒரு கணம் வாய்விட்டுச் சிரித்துவிட்டனர். அவர்களுடன் சேர்ந்து நிமல் சிறிபாலவும் அசட்டுச்சிரிப்புச் சிரிக்கத் தவறவில்லை.

**எங்களுடைய பணத்தில் படித்துவிட்டு...**

பொருளாதார மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக 'ஹொங் கொங்' குக்குச் செல்லவிருந்த பிரதமருக்கு வாழ்த்துத் தெரிவிக்க பிரதமர் அலுவலகத்தில் அமைச்சர்களில் பலர் ஒன்று கூடினர். கலந்துரையாடலின் போது அமைச்சர் வஜிர அபேவர்த்தன வைத்தியர்கள் வேலை நிறுத்தம் தொடங்கிவிட்டுப் பின்னர் பேச்சுக்கு முன்வருவதன் பின்னணியில் உள்ள அரசியல் குறித்து நாம் தெரிந்து கொண்டாக வேண்டும்" என்றார். அதைக்கேட்ட அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, வைத்தியர்களது இந்த வேலைக்குப் பொது மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டிருந்தது. எங்களது பணத்தில் வைத்தியப் படிப்புப் படித்துவிட்டு, எங்களையே பரலோகத்துக்கு அனுப்ப முயல்கிறார்களே எனப் பொது மக்கள் வைத்தியர்களது உடுப்புக்கள் கழன்று விழும் விதத்தில் 'ஹின்ட்' அடித்ததைத் தொலைக் காட்சி நிகழ்ச்சியில் பார்த்தேன்" எனக் குறிப்பிட்டார். அமைச்சர்களது இத்தகைய பேச்சுக்களைக் கேட்ட பின்னர் கடைசியில் பிரதமர் ரணில் வாய்திறந்தார்.

"மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் இவர்களெல்லாம் வாயே திறக்கவில்லை. இப்போது வெள்ளை வான்கள் இல்லாததால் நாட்டை நிர்வகிக்கப் புறப்பட்டிருக்கிறார்கள். அரசியல் ரீதியில் இவ்வாறு செயற்பட்டு நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்த நினைத்தால், நாங்களும் வெள்ளை வான்களுக்குப் பதிலாக வார்த்தைகளைப் பயன்படுத்திச் செயற்படப் பின்நிற்கோம் என்று நான் ஊடகங்களுக்குத் தெளிவாகத் தெரிவித்துள்ளேன் எனக் கூறினார் ரணில்.

**ஜீ எல். பீரிஸின் வண்டவாளம்**

உரையாடல்களின் மத்தியில் பேச்சை வேறுபக்கம் திருப்பிய அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, தாம் மிகச் சுத்தமானவர் என இப்போது வாயடிக்கும் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், தாம் வெளியுறவு அமைச்சராக இருந்தவேளையில், ஆபிரிக்காவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தின்போது காட்டு மிருகங்களைக் கண்டுகளிக்க மேற்கொண்ட பயணத்துக்கான செலவையும், அரச கணக்கில் காட்டியுள்ளாரே?" என்று கூறியதைக் கேட்டு பிரதமர் உட்பட ஏனையோரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

**இதைவிட முக்கியமானதாக எதுவும் இருக்க முடியாது**


அங்கிருந்து புறப்பட்டுச்சென்ற பிரதமர் நாடாளுமன்றக்குழு அறையில் இடம்பெற்ற பொருளாதாரக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அங்கு உரையாற்றிய பிரதமர், அரசு என்ற ரீதியில் நாம் இணங்கிக்கொண்ட கொள்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டியது மத்திய வங்கியின் பொறுப்பாகும். அதனை மத்திய வங்கி சரிவர நிறைவேற்றுவதில்லை. தற்போது டொலரொன்றின் பெறுமதி 150 ரூபாவாக உயர்ந்துள்ளது எனக் குற்றம் சாட்டினார். அவரைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட அமைச்சர்களும் கூட, மத்திய வங்கி ஆளுநர் மீது குற்றச் சாட்டுக்களை முன்வைத்தனர். தாம் வேறொரு முக்கிய அலுவலாக வெளியில் செல்ல வேண்டியிருப்பதாக மத்திய வங்கி ஆளுநர் அவ்வேளையில் தெரிவித்துவிட்டு வெளியேற முயன்றதைக் கண்ட ரணிலின் முகம் கோபத்தால் சிவந்தது. இந்தக் கூட்டத்தைவிட வேறு முக்கியமானதாக எதுவும் இருக்க முடியாது. ஆதலால் இந்தக் கூட்டம் முடியும்வரை நீங்களும் இங்கிருந்தாக வேண்டும் என்ற உரத்துக் கூறிய ரணிலின் முகத்தில் வழமையான புன்னகையைக் காணமுடியவில்லை.



**இறுக மூடிக் கொண்ட மகிந்தவின் வாய்**

அண்மையில் சீனாவுக்கான பயணமொன்றை மேற்கொண்டுவிட்டு நாடு திரும்பிய மகிந்தவைச் சந்திக்கச் சென்ற கூட்டு எதிரணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், "சீனப் பயணம் எப்படி சேர்!" என மகிந்தவை வினவினர்." பயணம் நன்றாகத்தான் அமைந்தது. ஆனால் எமது நாட்டில் இந்த நாள்களில் நடைபெறும் சம்பவங்ள் குறித்துச் சீனத் தலைவர்கள் கொஞ்சம் குழப்பத்தில் இருக்கிறார்கள் என்று கூறினார். அதைக் கேட்ட முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல "சேர் நீங்கள் சீனாவுக்குப் போய் கோள் மூட்டினீர்கள் என்று அரச தரப்பில் கூறினாலும் கூறுவார்கள்" என்றார். கொழும்பில் தம்மைச் சந்திக்க வந்தோரிடம் மகிந்த புதுக் கதையொன்றையும் அவிழ்த்துவிடத் தவறவில்லை. அரசு புதிய நீதிமன்று ஒன்றை நிறுவப் போகிறதல்லவா? முதன் முதலில் அதில் தொடுக்கப்படப்போவது எனக்கு எதிரான வழக்குத்தானாம்!" என்று கூறிய மகிந்தவை நோக்கி காமினி லொக்குகே, 'அதெப்படி அவ்வளவு உறுதியாகக் கூறுகிறீர்கள்' என்று கேட்ட தற்கு மகிந்த சிரித்துக்கொண்டே, "அலரிமாளிகையில் இந்த விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. அது குறித்து அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சரொருவர் சீனாவில் நான் இருந்தவேளை எனக்குத் தொலைபேசி மூலம் விடயத்தைத் தெரிவித்தார்" என்று கூறினார். அதைக்கேட்டு ஆச்சரியம் அடைந்த பவித்திரா வன்னியாராய்ச்சி "யார் சேர், அந்த அமைச்சர்?" என்று மகிந்தவைக் கேட்டுத்தான் பார்த்தாரே! எவர் எந்தக் கேள்வியை எழுப்பினாலும் டக்டக்கெனப் பதிலளிக்கும் மகிந்தவின் வாய், இந்த விடயத்தில் மட்டும் இறுக்கமாக மூடிக்கொண்டது.

> மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இவர்களெல்லாம் வாயே திறக்கவில்லை. இப்போது வெள்ளை வான்கள் இல்லாததால் நாட்டை நிர்வகிக்கப் புறப்பட்டிருக்கிறார்கள். அரசியல் ரீதியில் இவ்வாறு செயற்பட்டு நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்த நினைத்தால் நாங்களும் வெள்ளை வான்களுக்குப் பதிலாக வார்த் தைகளைப் பயன்படுத்திச் செயற்படப் பின்நிற்கோம் என்று நான் ஊடகங்களுக்குத் தெளிவாகத் தெரிவித்துள்ளேன் எனக் கூறினார் ரணில்



# வாசகர் திருமுகம்

## அவசிய தேவை நிறைவேற்றப்படட்டும்

யாழ்.நகரின் மையப்பகுதியில் நடைபாதை வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதால், தமது தேவைகளை நிறைவேற்றவென வெளிஇடங்களிலிருந்து நகரப் பகுதிக்கு வரும் பொதுமக்கள், தாம் செல்ல விரும்பும் பகுதிகளுக்கு விரைவாகவும், குறுக்கீடின்றியும் சென்று திரும்ப இயலாதுள்ளது. குறிப்பாக பிற்பகல் மற்றும் மாலை வேளைகளில் வைத்தியசாலையிலுள்ள நோயாளர்களைப் பார்வையிடவென வெளி இடங்களிலிருந்து வரும் பொது மக்கள், நேரகாலத்துடன் தாமதமின்றித் தமது தேவையை நிறைவு செய்து கொண்டு, தத்தமது இடங்களுக்குச் செல்ல இயலாதவாறு நடைபாதையிலும் வீதி ஓரங்களிலும் நடைபாதை வியாபாரிகளால் தடங்கல் ஏற்படுத்தப்படுவது நீண்டகாலமாகத் தொடரும் ஒரு வழக்கமாக ஆகியுள்ளது.

இத்தகைய சிரமத்தைப் போக்கும், வகையிலும், நடைபாதை வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க உதவும் வகையிலும், யாழ். மாநகராட்சி மன்றம், தனியான அங்காடி விற்பனை நிலையமொன்றை அமைத்து வழங்க முன்வந்துள்ளமை பாராட்டுக்குரியது .காலதாமதமின்றி இந்தத் திட்டத்தை யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் முன்னெடுத்து உதவட்டும்.

*ஆர்.ரவி*
*வண்ணார்பண்ணை*

## எதைத்தான் விட்டுவைக்கப் போகிறார்களோ?


கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இறைச்சிக்காக நீர்கொழும்புக்குக் கடத்திச் செல்லப்பட்ட ஒரு தொகை மாடுகள் உடனடித் குற்ற முறியடிப்புப் பொலிஸ் பிரிவால் கைப்பற்றப் பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதில் முக்கிய அம்சம் என்னவெனில், கடத்திச் செல்லப்பட்ட மாடுகளில் பெரும்பாலானவை பசுமாடுகள் என்பதாகும்.

பசுவதை தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டுவரும் இன்றைய சூழலில், கடத்தல்காரர்களது குறித்த செயற்பாடு கவலை தருமொன்று; கண்டிக்கத்தக்கதுமாகும்.

*ப.மார்க்கண்டு*
*கிளிநொச்சி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# எறும்பும் வெட்டுக்கிளியும்

மதிய வெயில் நேரத்தில் வெட்டுக்கிளி ஒன்று இங்கும் அங்கும் குதித்துப் பாட்டுப்பாடி ஆடிக் கொண்டிருந்தது. அப்போது எறும்பு ஒன்று அரிசி ஒன்றை எடுத்துக் கொண்டு அதே பாதையில் தன் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தது. அதைப் பார்த்த அந்த வெட்டுக்கிளி எறும்பிடம் "இப்போது என்ன அவசரம். சிறிது நேரம் என்னைப்போல நீயும் என்னுடன் விளையாடலாமே" என்றது.

அதற்கு எறும்பு "இன்னும் சில நாள்களில் வெயில் காலம் முடிந்து, மழை காலம் தொடங்கப் போகிறது. மழை காலத்தில் எவரும் வெளியே செல்ல முடியாது. அதனால் மழை காலத்துக்குத் தேவையான உணவை இப்போது இருந்தே நான் என் வீட்டில் சேகரித்து வைத்துக் கொள்கிறேன்" என்றது.

வெட்டுக்கிளி எறும்பிடம் "மழைகாலம் வர இன்னும் நாள்கள் இருக்கிறது, நான் விளையாடச் செல்கிறேன்" என்று சிரித்துக்கொண்டே நடனமாடிச் சென்றது. நாள்கள் கடந்தன. மழை காலமும் வந்தது.

தான் சேகரித்த உணவை உண்டு தன் வீட்டிலே எறும்பு இருந்தது. ஆனால் அந்த வெட்டுக்கிளியோ உணவு ஏதும் கிடைக்காமல் உணவு தேடி மழையில் சுற்றித் திரிந்தது. அப்போது வெட்டுக்கிளிக்கு "எறும்பு உணவு சேகரித்து வைத்து இருக்கும். அதனிடம் கேட்டுப் பார்க்கலாம்" என்ற எண்ணம் வந்தது.

வெட்டுக்கிளி எறும்பின் வீட்டுக்கு வந்து எறும்பிடம் "எனக்கு மிகவும் பசிக்கிறது. ஏதாவது உணவு கிடைக்குமா?" என்று கேட்டது.

தன்னிடமிருந்த சேகரித்த உணவில் இருந்து சிறிதளவை வெட்டுக்கிளியிடம் கொடுத்த எறும்பு, "அன்று என்னைப் பார்த்து சிரித்தாயே. இப்போது நான் சேகரித்த உணவு தான் இன்று இருவருக்கும் உதவியது. இனி நீ எப்போதும் சோம்பலில்லாமல் வெயில் காலத்தில் மழைக் காலத்துக்கு வேண்டியதைச் சேமித்துக் கொள்"–என்றது.

கால நேரம் பாராது உழைத்தால் வாழ்வு பிரகாசிக்கும் என்பதை வெட்டுக்கிளி உணர்ந்தது.

*"கடின உழைப்பு உடனடியாகப் பயன் தராவிட்டாலும் என்றாவது ஒருநாள் கண்டிப்பாகப் பயன் தரும்."*

# வரலாற்றில் இன்றைய தினம்

1914 - ஜப்பான் மிற்சுபிசி ஹேலோ நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வாயு வெடிப்பில் 687 பேர் உயிரிழந்தனர்.

1939 - அமெரிக்க ஜோர்ஜியா, அட்லான்டாவில், லோவஸ் கிரான்ட் தியேட்டரில் கோன் வித் த வைண்ட் திரைப்படம் திரையிடப்பட்டது.

1960 - அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் ஜோன் எப் கெனடியை கொல்லச் சதி செய்ததாக றிச்சாட் பவ்லிக் கைது செய்யப்பட்டார்.

1970 - நமியங்ஹோ எனும் தென்கொரிய படகு, கொரிய நீரிணையில் கவிழ்ந்ததில், 3000 பேர் உயிரிழந்தனர்.

1988 - நகரப் பாடசாலை மோகத்தைக் கைவிட்டு கிராமப்புற பாடசாலைகளை நாடுமாறு பரிசளிப்பு நிகழ்வில் கல்வி அதிகாரி கு.சோமசுந்தரம் தெரிவிப்பு.

- இருதய நோய் மரணத்தில் யாழ்ப்பாணத்துக்கு முதலிடமென மருத்துவர் சி.எஸ்.நுச்சினார்க்கினிர் தெரிவிப்பு.


1993 - ஐரோப்பிய தூதுக் குழுவினர் வடக்கு-கிழக்கு நிலமை குறித்தும், டி.பி.விஜேதுங்கவுடன் பேச்சுவார்த்தை.

1999 - வடக்கில் தேர்தலைக் குழப்புவதே புலிகளின் தாக்குதல் நோக்கமென ஜெனரல் பலகல்ல தெரிவிப்பு.

- பள்ளிமுனைக் கடலில் 3 சடலங்கள் இரண்டில் தலைகள் சிதறிய நிலையில் ஒதுங்கின.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# நற்சிந்தனை

உள்ளம் முழுவதும் அன்பு மலர்கள் மலரும்போது, வாழ்க்கையில் அழகும் ஆனந்தமும் புல்வெளியாகப் படர ஆரம்பிக்கின்றன. அப்பசும்புல்வெளியில் தெய்வசக்தியும், மனிதபக்தியும் கைகோத்து நடனமிடுவதைக் காணலாம்.

*சுவாமி சின்மயானந்தர்*

நாம் மட்டும் சிறந்தவர்கள் என்ற அகந்தை கொண்டு பிறரை அவமதிப்புடன் எண்ணாதீர்கள். உலகில் அற்பமானவர் என்று யாரும் இல்லை. வீட்டை தூய்மைப்படுத்தும் துடைப்பம் கூட முக்கியமான பொருள்தான். சிறிய செயல், பெரிய செயல் என்று எதுவுமே இல்லை. எல்லாவற்றையும் மதிப்புடனே செய்யும் பண்பு நம்மை நெறிப்படுத்தும்.

*அன்னை சாரதாதேவி*

சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்சத்திரப் பலன்கள்

## ரேவதி நட்சத்திரப் பலன்கள்

ஆயுள்காரகனும் தொழில்காரகனும், நோய்காரகனுமான சனிபகவான் உதித்த நட்சத்திரம் இது. இதன் அதிபதி புதன் ஆவார். இதில் பிறந்தவர்கள் நல்ல பரந்த மனமும். தயாள குணமும் உள்ளவர்கள். நல்ல சொல்வன்மை மிக்கவர்கள். பிறர் சொல் கேட்டு நடப்பவர். நல்ல அழகிய உருவமும், நீண்ட கைகளும், அழகிய கண்களும் உடையவர். எப்பொழுதும் இளமையாகவும் அழகாகவும் இருப்பர். மற்றவர்களைத் துச்சமாகப் பேசி அவர்களை நோகடிப்பதில் சமர்த்தர்கள். தங்கள் காரியங்களைச் சாதிக்க எந்த எல்லையையும் தாண்டுவர். நல்ல தொழில் செய்து வருமானம் ஈட்டுவர்.

**ரேவதி : 1ம் பாதம்**
நல்ல வித்தை ஞானமும், கணித ஞானமும் உடைய இவர்கள் தாய், தந்தையர் மேல் பற்றும் பாசமும் உடையவர்கள். அதிகமாக உழைத்து குறைந்த ஊதியத்தையும் பெறுவர். நல்ல தெய்வ சிந்தனை உடையவர்கள். இவர்களை அவ்வளவு எளிதில் யாரும் புரிந்து கொள்ள முடியாது.

**ரேவதி : 2ம் பாதம்**
பரந்த மனம் உடையவர்கள், நல்ல பொருள் ஈட்டி பெரும் பணக்காரர் ஆக விரும்புவர். எளிமையாகப் பேசும் இயல்புடைய இவர்கள் பெரிய பதவிகளை வகிப்பர். பெண்கள் விடயத்தில் கீழ்த்தரமாக நடந்து கொள்வர். மற்றவர்கள் மேல் தீராத பலி போட்டு நடப்பர். தன் குடும்ப கஷ்டத்தைக் கட்டிக் காப்பதில் வல்லவர்கள்.

**ரேவதி : 3ம் பாதம்**
பொதுமக்களுக்கு சேவை செய்து நல்ல பெயர் எடுப்பர். இவர்களின் சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமே இராது. மற்றவர்களின் குற்றம் குறைகளை வெகு எளிதில் கண்டு அவர்களை விமர்சனம் செய்வர். தந்தையின் மீது. மிகுந்த பற்று உள்ளவர்கள். குழந்தைகளுக்காக நிறைய செலவு செய்வார்கள் வெளிநாடு செல்ல ஆர்வம் உடையவர்கள்.

**ரேவதி : 4ம் பாதம்**
விருந்து கேளிக்கைகளில் ஆர்வம் உடையவர்கள் தெய்வசிந்தனைகளும், ஆச்சார அனுஷ்டானங்களையும் அறிந்தும் கடைபிடிப்பார்களா என்பது சந்தேகமே. உற்றார் உறவினர்கள் மேல் பற்று உள்ளவர்கள். கணவன் மேல் பற்று உள்ளவர்கள், தனக்கு நிகர் யாருமில்லை என்ற எண்ணம் உடையவர்கள்.

## ரோகிணி நட்சத்திரப் பலன்கள்

பிரம்மன் உதித்த நட்சத்திரம் இந்த நட்சத்திரம் ஆகும். இந்த நட்சத்திரத்தின் அதிபதி சுக்கிரன் ஆவார். இதில் பிறந்தவர்கள் நல்ல அறிவும், ஆற்றலும் உடையவர்கள். எப்பொழுதும் சிரித்துக் கொண்டும் சதா சிந்தித்துக் கொண்டும் இருப்பார்கள்.

**ரோகிணி நட்சத்திரம் : 1ம் பாதம்**
பயந்த சுபாவம் உடைய இவர்கள் சற்று முன் கோபக்காரர்கள். பிறருடைய துன்பத்தில் மகிழ்ச்சி காண்பவர். கொடூரமாக நடந்து கொள்ளும் தன்மை உடையவர். எப்பொழுதும் ஏதாவது வியாதியால் வருந்துபவர். காம இச்சை அதிகம் உடையவர்கள். தாய்மாமனால் நன்மையடைவர்.

**ரோகிணி நட்சத்திரம் : 2 ம் பாதம்**
மனதை கட்டுப்படுத்தி வாழும் தன்மை உடைய இவர்கள் நல்ல உள்ளமும், உண்மையை பேசும் தன்மை உடையவர்கள். நிதானமாக யோசித்து செயற்படுவதில் விருப்ப முடையவர்கள். நீர் சம்பந்தமான வியாதிகளால் அவதிப்படுவார்கள். வியாபாரம் செய்வதில் ஆர்வம் உள்ளவர்கள்.

**ரோகிணி நட்சத்திரம் : 3 ம் பாதம்**
நல்ல கணித அறிவும் ஆற்றலும் உள்ள இவர்கள் வாக்கு சுத்தம் உள்ளவர்கள். எப்பொழுதும் மற்றவர்களின் பேச்சுக்கு மதிப்பு கொடுக்கும் இவர்கள் சற்று கஷ்ட ஜீவனம் நடத்துவார்கள். உஷ்ண சம்பந்தமான வியாதிகளால் அவதியுறுவர். தாயாரின் மேல்பற்றுள்ளவர்கள்.

**ரோகிணி நட்சத்திரம் : 4 ம் பாதம்**
வாழ்க்கையில் திருப்தி இல்லாத இவர்கள் மற்றவர்களின் பொருள்களை அடைவதில் ஆர்வம் உடையவர்கள். ஏழைகளுக்கு உதவும் மனம் படைத்த இவர்கள் பெண்கள் விடயத்தில் சற்று சலனம் உள்ளவர்கள். நல்ல தத்துவ ஞானம் உடையவர்கள். தந்தையார் மேல் பற்றுள்ளவர்கள்.

**நாளை**
**மார்கழி-01**
வெள்ளிக்கிழமை -16.12.2016
திதி: திருதியை பி.இ.01.14
நட்சத்திரம்: புநர்பூசம் மா.06.54
ராகுகாலம்:10.52-12.22 வரை
சுபநேரம்:06.22-07.52 வரை

# அன்று அம்மா இன்று சின்னம்மா நாளை எந்த அம்மாவோ?


தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும் அ.தி.மு. கழகத்தின் முன்னாள் செயலாளருமான ஜெ.ஜெயலலிதா சிகிச்சை பயனளிக்காத நிலையில் சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அண்மையில் உயிரிழந்தார். அவர் உயிரிழந்து சில மணிநேரத்துக்குள் பன்னீர்செல்வம் அடுத்த முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். இதிலொன்றும் பிரச்சினை இல்லை. ஆனால் அ.தி.மு. கழகத்தின் செயலாளர் யார் என்பதிலேயே முரண்பட்ட கருத்துக்கள் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்துள்ளன.

ஜெயா உயிரிழந்த செய்தியைக் கேட்டு கிட்டத்தட்ட 70 பேர் மாரடைப்பு ஏற்பட்டும் தற்கொலை செய்து கொண்டும் உயிரிழந்தனர். லட்சக்கணக்கான தொண்டர்கள் ஜெயாவின் உடல் வைக்கப்பட்ட ராஜாஜி அரங்கிலும் வீதிகளிலும் இறங்கி அழுதுபுலம்பி தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். ஜெயாவின் சமாதிக்குச் சென்று இன்று வரை ஏகப்பட்ட மக்கள் தமது அஞ்சலிகளைத் தெரிவித்து வருகின்றனர்.

வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமானவர்கள் இந்தியா சென்று தமது அஞ்சலியை முன்வைக்கின்றனர். மொத்தத்தில் ஜெயாவின் இறப்பு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பது வெளிப்படை. அவரது இறப்பு மட்டுமல்ல இறப்புக்கு முன்னால் நடந்தது என்று சொல்லப்படும், கருதப்படும், எதிர்வுகூறப்படும் விடயங்களும் தற்போது ஒன்றன்பின் ஒன்றாக ஒட்டுமொத்த உலகுக்கும் அதிர்வலைகளைத் தந்துகொண்டுள்ளன.

ஜெயா உயிரிழக்க சசிகலாவே காரணம். சசிகலாவின் சதிச் செயலால்தான் ஜெயாவின் உயிர் பறிக்கப்பட்டது என்பது ஒரு சாராரின் கருத்து. இது மிகமிக முக்கியமான குற்றச்சாட்டாகவும் சிலரால் பார்க்கப்படுகிறது. குறிப்பாக இணையத்தளப் பாவனையாளர்கள் குறித்த விடயம் தொடர்பாகத் தற்போது மிக அதிகளவில் பதிவிட்டு வருகின்றனர். இவ்வாறான தரப்பினரால் தமிழ் இனத்தின் குறிப்பாக தமிழ்நாட்டின் துரோகி என்று சசிகலா விழிக்கப்படுகிறார். இந்தியப் பிரதமர் மோடி ஜெயாவின் விடயத்தில் நீண்டதும் நீதியானதுமான விசாரணையை நடத்த வேண்டும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது ஒருபுறம் இருக்க சசிகலாவே அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளராகப் பதவியேற்க வேண்டும் என்று பிறிதொரு சாரார் வலியுறுத்தி வருகின்றனர். சசிகலாவை அதிகார பீடத்தில் இருத்த விரும்புபவர்கள் தற்போது அதிகாரத்தில் இருப்பவர்களாகவும் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், பிரதிநிதிகளாகவுமே இருக்கின்றனர். அவர்களில் மிகமிக முக்கியமானவர் தமிழ்நாட்டின் தற்போதைய முதலமைச்சரான ஓ.பன்னீர் செல்வம்.




மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் நண்பியாக, மெய்க்காப்பாளராக, ஆலோசகராக, கழகத்தின் முக்கிய உறுப்பினராக செயற்பட்ட சின்னம்மாவே (சசிகலாவே), தற்போது அ.தி.மு. கழகம் இருக்கும் அதே இராணுவக் கட்டமைப்புடன் கட்சியைக் கொண்டு செல்ல வல்லவர்.

அவர் கட்சியின் செயலாளராகப் பொறுப்பேற்க சம்மதிக்க வேண்டும் என்று பன்னீர்ச்செல்வம் சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார். குறித்த கட்சியின் ஏனைய அமைச்சர்கள், தொண்டர்கள் எனப் பலதரப்பினரின் ஆதரவைப் பெற்றவராகவும் அவர் உள்ளார். இதற்கிடையே போயஸ் கார்டனை விட்டு சசிகலா வெளியேறப்போகிறார் என்றும் சில இந்தியச் செய்திகள் தெரிவித்திருந்தன.


மொத்தத்தில் ஜெயாவின் சாவுக்கு சசிகலா காரணமா? என்பதும், சசிகலாவே அ.தி.மு. கழகத்தின் அடுத்த பொதுச்செயலாளரா? என்று இரு பெரும்வாதங்களுக்குள் தமிழ்நாடு சிக்கித் தவிக்கிறது.

“மக்களால் நான் மக்களுக்காகவே நான்” என்று அன்று அம்மா தெரிவித்தார். “மக்குகளால் நான் மக்குகளுக்காகவே நான்” என்று இனிவரும் அதிகார வர்க்கங்கள் கருதாமல் இருந்தால் சரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

தேவநாயகம் தேவானந்த்



# ஈழ விவகாரத்தில் ஜெயலலிதா எம்.ஜி.ஆரைப் பின்பற்றினாரா?

9

இலங்கையில் ஈழவிடுதலைப் போராட்டம் இந்தியா என்ற வல்லமையால் தீர்மானிக்கப்பட்டது என்பது எல்லோராலும் உணரப்படுகின்ற விடயம். இந்திராகாந்தி, பனிப்போர் காலத்தில் இலங்கையைத் தனது கட்டுக்குள் வைத்துக் கொள்வதற்காகவும், இலங்கை விவகாரத்தில் தனது மூக்கை நுழைப்பதற்காகவும் ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகச் செயற்பட்டார் எனலாம். அது ஒருவகையில் அன்றைய சோசலிச முதலாளித்துவ போட்டாபோட்டி அரசியல் சார்ந்த, குறிப்பாக இந்திய நலன் சார்ந்த ஒரு விடயம் என்பது வெள்ளிடைமலை. இதற்குள் இலங்கைத் தமிழர்கள் அகப்பட்டு, சிறைப்பட்டு சிதறடிக்கபட்டார்கள்; படுகிறார்கள். இந்தஅரசியல் பின்புலத்தில், விடுதலை இயக்கங்கள் இந்தியாவில் மையம் கொண்டிருந்த காலகட்டத்தில் தமிழ்நாட்டில் அவர்களின் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்பட்டன. ஈழத்தமிழர்களுக்கான தமிழ்நாட்டின் ஆதரவு என்பது, அண்ணாத்துரை காலத்திலிருந்தே இருந்தாக உணர்ச்சிக் கவிஞன் காசி ஆனந்தன் போன்றவர்கள் தெரிவிக்கின்றார்கள். இலங்கை அரசு பற்றி அண்ணாத்துரை குறிப்பிட்டுப் பேசுகின்ற போதெல்லாம் அப்போதைய இந்திய நடுவன் அரசு இலங்கை ஓர் இறையாண்மையுள்ள நாடு, அதன் செயற்பாடுகளில் நாம் தலையிடமுடியாது என்று குறிப்பிடுவது வழக்கம். ஒருமுறை இதற்கு அண்ணாத்துரை ஒரு குட்டிக் கதையொன்றின் மூலம் இலங்கை விவகாரத்தில் ஏன் இந்தியா தலையிடவேண்டும் என்பதை விளக்கியிருந்தார்.

அயல் வீட்டுக்காரன் தனது மனைவியுடன் கொஞ்சிக்குலாவி மகிழ்ந்திருந்தால் பக்கத்து வீட்டுக்காரன் எட்டிப்பார்த்து அந்த மகிழ்வான குடும்பத்தில் தலையிடுவது நாகரிகமில்லை. ஆனால் அயல் வீட்டுக்காரன் மனைவியை அடித்து துன்புறுத்துகின்றபோது பக்கத்து வீட்டுக்காரன் எட்டிப்பார்க்காமல் இருப்பது தவறு. அதுவும் அடிவாங்குபவள் பக்கத்துவீட்டுக்காரனின் தங்கையாக இருக்கின்ற போது எப்படி தலையிடாமல் இருக்க முடியும்? என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

**ஈழவிடுதலைப் போராட்டத்தை வெளிப் படையாக ஆதரித்தவர் எம்.ஜி.ஆர்**

இந்தப் பின்னணியில், எண்பதுகளில் ஈழ விடுதலைப்போராட்டத்திற்கு வெளிப்படையாக ஆதரவு தருபவராக எம்.ஜி.ஆர் தன்னை இனங்காட்டிக் கொண்டார். இலங்கையில் பிறந்ததாலோ என்னவோ, எம்.ஜி.ஆருக்கு ஈழவிடுதலைப் போராட்டத்தில் அதிக ஈடுபாடு இருந்திருக்கிறது.

1980களில் ஈழப்போராட்டம் தீவிரமடைந்த போது, அதற்கு ஆதரவளித்தார் எம.ஜி.ஆர். விடுதலைப்புலிகள் தலைமையில் தமிழர்களுக்குத் தனிநாடு அமையவேண்டும் என்று அவர் விரும்பினார் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

எண்பதுகள் காலகட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வாங்குவதற்கு ஏழு கோடி ரூபாவை தனது சொந்தப் பணத்தில் வழங்கினார் என்பது வரலாறாகவுள்ளது. இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டுக்கு எதிர்மாறாக எம்.ஜி.ஆர் விடுதலைப் புலிகளுக்கு வெளிப்படையாக உதவிகள் செய்தார். இது அவர் இறக்கும் வரைக்கும் தொடர்ந்திருக்கிறது. எம்.ஜி.ஆர் இறப்பின் பின்னர் விடுதலைப் புலிகள் வெளியிட்ட இரங்கல் செய்தி இதனை உறுதிப்படுத்துவதாக அமைந்திருந்தது. தமிழீழ மக்கள் சுதந்திரமாக வாழவேண்டுமென விரும்பிய மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றனர் என்று விடுதலைப் புலிகள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்கள்.

இந்த உறவு பற்றி அன்ரன் பாலசிங்கம்மும் குறிப்பிடுகிறார். எதிர்பாராத விதமாக எம்.ஜி. ஆருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குமான உறவு மலர்ந்தது. தலைவர் பிரபாகரனின் தலைமைப் பண்பும் வீரமும் எம்.ஜி. ஆரைக் கவர்ந்தன. அது நாளடைவில் நட்பாக மாறியது, என்று அவரது குறிப்பு உள்ளது.

**புலி எதிர்ப்புக் கொள்கைகளையே ஜெயலலிதா கடைப்பிடித்தார்**

இந்தப் பின்னணியில் எம்.ஜி.ஆர் மறைவின் பின்னர் அ.தி.மு.க தலைமையை ஏற்ற ஜெயலலிதா ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு, குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே இருந்தார். புலி எதிர்ப்புக் கொள்கையையே பின்பற்றினார்.

தமிழ்நாட்டின் அரசியலில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தேர்தல் காலங்களில் மிகவும் அதிகளவில் பேசப்படுகின்ற ஒரு விடயமாகவே எப்போதும் இருக்கிறது. அ.தி.மு.க. மற்றும் தி.மு.க இரண்டு பிரதான கட்சியினரும் தம்மை ஈழ ஆதரவாளர்களாகக் காட்டி வாக்குவேட்டையை நடத்த எத்தனிப்பது ஒரு வழமையாக இருக்கின்றது. இதில் யார் அதிகளவு ஈழ ஆதரவாளர்கள் என்பது அடிக்கடி ஊடகங்களில் சூடுபிடிக்கின்ற விவாதங்களாகியிருக்கின்றன. கருணாநிதி ஈழமக்களுக்கு துரோகமிழைத்தாரா? ஜெயலலிதா துரோகமிழைத்தாரா? என்ற கேள்விகளுக்கு விடை காண ஊடகங்கள் பலமுறை முயற்சித்திருக்கின்றன. இரண்டு கட்சிகளும் மாறிமாறித் தங்கள் தான் ஈழமக்களைக் காப்பவர்கள், ஆதரிப்பவர்கள் என்று மார்தட்டி அறிக்கைகளை விட்டிருக்கிறார்கள். 1980களின் பிற்பகுதியில் தமிழகத்தில் நடந்த ஈழப்போராளி இயக்கங்களுக்கிடையேயான சண்டை, அதனால் ஏற்பட்ட படுகொலைகள் என்பவை தமிழ் நாட்டின் சட்ட ஒழுங்கைச் சீர்குலைத்தன. இதன் பயனாக தி.மு.க ஆட்சியைக் கலைக்கவேண்டிய சூழல் ஏற்பட்டது. இதன் பின்னர் ஈழப் போராளிகளுக்கு எதிரான நிலைமை இந்தியாவில் படிப்படியாக வளர ஆரம்பித்தது எனலாம். குறிப்பாக ஈழப் போராளிகளை இந்தியாவுக்கெதிரான பயங்கரவாதிகளாகச் சித்திரிக்கும் பணி தீவிரமாக ஆரம்பித்தது.

இந்த நிலைப்பாட்டை இந்திய மத்திய அரசு எடுப்பதற்கு பின்புலத்தில் நின்றவர்கள் பலர். இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சுப்பிரமணிய சுவாமி, சோ, இந்துராம் போன்றவர்கள் முக்கியமானவர்கள். குறிப்பாக இந்தியாவில் புலி எதிர்ப்பு நிலைப்பாட்டை நிலைநிறுத்தியதில் இவர்களின் பங்குஅளப்பரியது. இங்கு ஆச்சரியமான உண்மை என்ன வென்றால் இவர்கள்தான், ஜெயலலிதாவின் அரசியல் ஆலோசகர்களாகவும் செயற்பட்டார்கள் என்பதாகும்.

இந்திய பார்ப்பனீய மேட்டுக்குடி அரசைப் பாதுகாப்பதாக, அதன் வழிகாட்டலில் செயற்படுவதாகவே ஜெயலலிதாவின் ஆட்சியும் அமைந்திருந்தது என்பதை ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தோம். ஏம்.ஜி.ஆர். ஆதரித்த விடுதலைப்புலிகள் இந்தியாவில் தடை செய்யப்படுவதற்கு ஜெயலலிதா முக்கிய காரணியாக இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இது எப்படி நடந்தது என்பது முக்கியமானது தமிழ்நாட்டின் அரசியல் என்பது கலைஞர் அல்லது ஜெயலலிதா என்பதுதான். இங்கு கலைஞருக்கு மாற்று ஜெயலலிதா! ஜெயலலிதா வென்றால் சோ, சரி சோ என்றால் யாரென்று பார்த்தால், சுப்பிரமணியம் சுவாமி சரி, சும்பிரமணியம்சுவாமி என்றால் யார் என்று பார்த்தால், இந்துராம். அதுவும் சரி, இந்துராம் என்றால் யாரென்று பார்த்தீர்களென்றால் சந்திரிக்கா பின்னர் ராஜபக்ச இன்று ரணிலென்று அது நீண்டு செல்லும். ஆக, ஜெயலலிதா எவருக்குச் சார்பாக இருந்திருக்கிறார் என்பது இதன் மூலம் புலனாகும்.

தனது குருவாக எம்.ஜி.ஆரை அடிக்கடி தனது அரசியல் அரங்கில் குறிப்பிட்ட ஜெயலலிதா, ஈழ விவகாரத்தில் எம்.ஜி. ஆரின் கொள்கைகளைப் பின்பற்றவில்லை என்பதே உண்மை. ஜெயலலிதா ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு என்ன செய்தார் என்பதை அடுத்த தொடரில் பார்க்கலாம்.

(தொடரும்)

> ஏம்.ஜி.ஆர். ஆதரித்த விடுதலைப்புலிகள் இந்தியாவில் தடைசெய்யப் படுவதற்கு ஜெயலலிதா முக்கிய காரணியாகக் குறிப்பிடப்படுகிறது. இது எப்படி நடந்தது என்பது முக்கிய மானது தமிழ்நாட்டின் அரசியல் என்பது கலைஞர் அல்லது ஜெயலலிதா என்பதுதான். இங்கு கலைஞருக்கு மாற்று ஜெயலலிதா! ஜெயலலிதா வென்றால் சோ, சரி சோ என்றால் யாரென்று பார்த்தால், சுப்பிரமணியம் சுவாமி சரி, சும்பிரமணியம்சுவாமி என்றால் யார் என்று பார்த்தால், இந்துராம். அதுவும் சரி, இந்துராம் என்றால் யாரென்று பார்த்தீர்களென்றால் சந்திரிக்கா பின்னர் ராஜபக்ச இன்று ரணிலென்று அது நீண்டு செல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். மாமன் மைத்துனர் வகையில் கேட்ட உதவி கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**இடபம்:** பிடிவாத குணத்தால், குடும்பத்தில் குழப்பம் ஏற்படலாம். தொழிலில் வருமானம் சுமாராக இருக்கும். குடும்பத்தில் திடீர் செலவு உண்டாகும். பெற்றோரின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும்.

**மிதுனம்:** அடுத்தவர் வியக்கும் வகையில் பணியாற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனையின் அளவு அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும். மனைவி விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**கடகம்:** பணிகளில் மேம்போக்காக ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** பேச்சு, செயலில் நேர்மை நிறைந்திருக்கும். நல்லவர்களின் அறிமுகமும் ஆசியும் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை முன்னேற்றம் பெறும். வெகுநாள் வாங்க நினைத்த பொருள் வாங்குவீர்கள்.

**கன்னி:** மனதில் எண்ணிய எண்ணம் செயல் வடிவம் பெறும். நண்பரின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**துலாம்:** குடும்ப விடயத்தைப் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரரின் ஆதரவு நம்பிக்கை அளிக்கும்.

**விருச்சிகம்:** உறவினரின் செயலை விமர்சனம் செய்ய வேண்டாம். தொழிலில் உற்பத்தி விற்பனை சுமாராக இருக்கும். பெண்களால் குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படும். மாணவர்கள் படிப்பில் ஆர்வத்துடன் ஈடுபடுவர்.

**தனுசு:** கடந்த கால அனுபவம் வளர்ச்சிக்கு துணை நிற்கும். புதிய வாய்ப்பை சரியாகப் பயன்படுத்துவீர்கள்.. குடும்பத் தேவை நிறைவேறும். அரசியல்வாதிகளுக்கு எதிர்ப்பாளரால் இருந்த தொல்லை மறையும்.

**மகரம்:** மனதில் மகிழ்ச்சி நிலைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். வாழ்க்கைத்தரம் மேம்படும். பணக்கடனில் ஒரு பகுதி அடைபடும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**கும்பம்:** சிலரது பேச்சால் சங்கடத்திற்கு ஆளாகலாம். பணியில் மட்டும் அக்கறை கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனில் கவனம் செலுத்துவர்.

**மீனம்:** செயலில் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர். உடல் ஆரோக்கியம் பெறும். புத்திரரின் நற்செயல் பெருமை தேடித் தரும்.




# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 6 | | | 5 | | |
| | | | | | | | 3 | 4 |
| 9 | | 1 | 7 | | | | 6 | |
| 1 | | 2 | 8 | 9 | | | | |
| 8 | | | | | | | | 2 |
| 4 | | 6 | | | | | | 7 |
| | | | | | | 1 | | |
| 3 | | | | 4 | | | 7 | |
| | | | | 8 | 3 | | 5 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 6 | 8 | 7 | 2 | 5 | 4 | 3 |
| 4 | 7 | 3 | 5 | 1 | 9 | 8 | 2 | 6 |
| 8 | 5 | 2 | 6 | 3 | 4 | 1 | 7 | 9 |
| 1 | 6 | 5 | 4 | 9 | 7 | 2 | 3 | 8 |
| 2 | 8 | 4 | 1 | 6 | 3 | 9 | 5 | 7 |
| 3 | 9 | 7 | 2 | 5 | 8 | 4 | 6 | 1 |
| 7 | 2 | 8 | 9 | 4 | 6 | 3 | 1 | 5 |
| 5 | 3 | 9 | 7 | 2 | 1 | 6 | 8 | 4 |
| 6 | 4 | 1 | 3 | 8 | 5 | 7 | 9 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# யுனிசெப் நல்லெண்ண தூதராக பிரியங்கா சோப்ரா



பொலிவுட் நடிகை பிரியங்கா சோப்ரா ஐ.நா. சிறுவர் நிதியத்தின் (யுனி செப்) நல்லெண்ண தூதராக நியமிக்கப்பட்டார்.

பிரியங்கா சோப்ரா தற்போது கொலிவுட் படங்கள், தொலைக்காட்சித் தொடர்களில் நடித்து வருகிறார். இதனால் அவர் பொலிவுட் தவிர்த்து ஹொலி வுட்டிலும் பிரபலமாக உள்ளார்.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் (யுனிசெப்) நல்லெண்ண தூதராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

குழந்தைகள் நலனுக்காகப் பாடுபட உள்ளதை நினைத்து பெருமைப்படுவதாக பிரியங்கா தெரிவித்தார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடந்த யுனிசெப்பின் 70ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சியில் பிரியங்கா கலந்துகொண்டார். அப்போது தான் அவர் யுனிசெப் நல்லெண்ண தூதராக நியமிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## குழந்தை அருண்



துக்கத்திலிருப்பவர்களுக்கு தூக்கம் வராது. தூக்கத்திலிருப்பவர்களுக்கு துக்கம் வராது இதுதான் வாழ்க்கை.

# தலை அலங்காரம்



1, 2, 3, 4 தலைமுடியை நன்கு வாரி வழமையாக பின்னலுக்கு பிரிப்பது போன்று பிரித்து, அவற்றை மீண்டும் மூன்றாக பிரித்துப் பின்னிக் கொள்ளவும்.

5 பின்னர் மூன்று பின்னலையும் வழமையான பின்னல் போன்று பின்னிக் கொள்ளவும்.

6 தலை அலங்காரம் தயார். மிகவும் இலகுவானதுடன், பார்வைக்கு அழகான பின்னலாகும்.

# இது புதுசு



பலவர்ண கற்கள் பதித்த ஆபரணங்கள் அறிமுகமாகியுள்ளன. ஒரே நிறத்தில் அல்லமால் பலவர்ணங்களின் கலவையாக கற்கள் அமைவிடப்படுத்தப்பட்டுள்ளன. மிகவும் பகட்டான இவை வைபவங்களில் அணிய உகந்ததாகும். இவை, 3 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.



# முளைக் கீரையின் மருத்துவப் பயன்கள்:

1. இக்கீரையில் அடங்கியுள்ள இரும்பு மற்றும் தாவரச் சத்துக்கள் குருதியைச் சுத்தம் செய்துவதோடு, இதில் அடங்கியுள்ள மணிச்சத்து மூளை வளர்ச்சிக்கு உதவுகின்றது. முளைக் கீரை அதிமதுரம் (ஒரு துண்டு), மஞ்சள் (3 சிட்டிகை) மூன்றையும் சேர்த்துக் காயமாகச் செய்து சாப்பிட்டால் எப்படிப்பட்ட இருமலும் குணமாகும்.

2. முளைக் கீரையுடன் சீரகத்தை நெய்யில் வறுத்துச் சேர்த்து, மிளகாய் வற்றலைக் கிள்ளிப்போட்டு, தண்ணீர் சேர்த்து அவித்து சாற்றை வடித்து, சாதத்தோடு கலந்து சாப்பிட்டால் அனைத்துவகையான காய்ச்சலும் குணமாகும்.

3. முளைக் கீரை, துத்திக் கீரை இரண்டையும் சம அளவு எடுத்து, சிறுபருப்பு சேர்த்துக் சமைத்துச் சாப்பிட்டால் உள் மூலம், பௌத்திரக் கட்டி, குருதி மூலம் போன்றவை சரியாகும்.

4. முளைக் கீரையுடன் மிளகு, சீரகம், பூண்டு, சின்ன வெங்காயம், மஞ்சள் ஆகியவற்றைச் சேர்ததுக் கொதிக்க வைத்து சாப்பிட்டால் பசியின்மை நீங்கி நல்ல பசி உண்டாக்கும்.

5. முளைக் கீரையுடன் சிறிது புளிச்சக் கீரை, மிளகு, மஞ்சள், உப்பு சேர்த்து அவித்துச் சாப்பிட்டால் ருசியின்மைக் குறைபாடு நீங்கும்.

6. முளைக் கீரையைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடல் ஆரோக்கியத்துக்குத் தேவையான விற்றமின்களும் தாதுப் பொருள்களும் உடலுக்குப் போதிய அளவில் கிடைக்கும். 40 நாள்களுக்குத் குழந்தைகளுக்கு; கொடுத்தால் நல்ல உயரமாக வளருவார்கள்.

7. முளைக் கீரைச் சாற்றில் சீரகத்தை ஊறவைத்து, உலர்த்தித் தூள் செய்து சாப்பிட்டால் பித்த நோய்கள், மயக்கம், குருதி அழுத்தம் போன்றவை சரியாகும்.

8. சிறுவர், சிறுமியருக்கு முளைக்கீரை நல்லது. முளைக்கீரையை சாப்பிட்டால் நல்ல பசி எடுக்கும். காச நோயால் ஏற்படும் காய்ச்சலை நீக்கும் ஆற்றல் உடையது. முளைக் கீரையுடன் சிறு பருப்பு சேர்த்துச் சமைத்துச் சாப்பிட்டால் குடல்புண்கள் குணமாகும்.


9. முளைக் கீரைச் சாற்றில் முந்திரிப் பருப்பு, மஞ்சள் சேர்த்து அரைத்து முகத்தில் தடவிவந்தால், முகப்பரு, தேமல் போன்றவை மறைந்து முகப் பொலிவு உண்டாகும்.



10. சொறி- சிரங்கு முதலிய நோய்கள் இக்கீரையை உண்பதினால் குணமடையும். இந்தக் கீரையானது வெப்பசுரத்தைதணிக்க வல்லது. முளைக் கீரைச் சாற்றில் உளுந்தை ஊற வைத்து அரைத்துச் சாப்பிட்டால் நீர்க்கடுப்பு மறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மசாலா கொழுக்கட்டை



### தேவையான பொருள்கள்

பயத்தம் பருப்பு - 50 கிராம்
பச்சை மிளகாய் - 2
தேங்காய் துருவல் - கால் கப்
ஒன்றரை மேசைக்கரண்டி
கடுகு - அரை தேக்கரண்டி
பெருங்காயத் தூள் - ஒரு சிட்டிகை
எண்ணெய் - 5 தேக்கரண்டி ,
அரை மேசைக்கரண்டி
அரிசி மா - ஒரு கப்
சின்ன வெங்காயம் - 8
மிளகாய் வற்றல் - 4
உப்பு - ஒரு தேக்கரண்டி
கல் உப்பு - கால் தேக்கரண்டி
எலுமிச்சை - ஒரு மூடி

### செய்முறை

பயத்தம் பருப்பை சுத்தம் செய்து எடுத்துக் கொள்ளவும். பச்சை மிளகாயை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். தேங்காயை துருவி வைத்துக் கொள்ளவும். சின்ன வெங்காயத்தை தோல் உரித்து வைத்துக்கொள்ளவும். மற்ற தேவையான அனைத்து பொருள்களையும் தயாராக எடுத்து வைத்துக் கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் ஒரு கப் தண்ணீர் ஊற்றி சூடானதும் சுத்தம் செய்த பயத்தம் பருப்பை போட்டு 15 நிமிடம் வேக வைத்து எடுத்துக் கொள்ளவும்.

அம்மியில் அல்லது மிக்ஸியில் மிளகாய் வற்றல், கால் தேக்கரண்டி கல் உப்பு சேர்த்து அரைக்கவும். அவை மசிந்தவுடன் கால் கப் தேங்காய் துருவல் சேர்த்து அரைத்து விட்டு கடைசியில் சின்ன வெங்காயம் சேர்த்து விழுதாக அரைத்து எடுத்துக் கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் ஒரு கப் தண்ணீர் ஊற்றி அதில் ஒரு தேக்கரண்டி எண்ணெய் ஊற்றி, அரை தேக்கரண்டி உப்பு சேர்த்து கொதிக்க விட்டு அதில் அரிசி மாவை போட்டு கரண்டியின் பின்புறத்தை வைத்து கிளறி கொண்டே இருக்கவும். கெட்டியாக ஆனதும் இறக்கி ஒரு வாய் அகன்ற பாத்திரத்தில் கொட்டி கால் கப் தண்ணீரை சிறிது சிறிதாக தெளித்து இடியப்ப மா பதத்தில் கெட்டியாக, கையில் ஒட்டாமல் வரும் வரை பிசையவும்.

சட்டியில் 2 தேக்கரண்டி எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு போட்டு தாளித்து விட்டு அதில் நறுக்கின பச்சை மிளகாய் போட்டு 30 நொடி வதக்கவும். பின்னர் அதனுடன் வேக வைத்த பருப்பில் உள்ள தண்ணீரை வடித்து விட்டு போட்டு ஒரு நிமிடம் பிரட்டவும். பருப்புடன் அரை தேக்கரண்டி உப்பு, பெருங்காயத் தூள் மற்றும் ஒன்றரை மேசைக்கரண்டி தேங்காய் துருவல் சேர்த்து 2 நிமிடம் நன்கு பிரட்டி இறக்கி வைத்து மேலே எலுமிச்சை பழம் பிழியவும். பிறகு கிளறி விட்டு ஒரு கிண்ணத்தில் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

அதன் பிறகு பிசைந்து வைத்த மாவை ஒரு பெரிய நெல்லிக்காய் அளவு எடுத்துக்கொண்டு முதலில் கட்டைவிரலை நடுவில் வைத்து திருப்பி திருப்பி விட்டு கிண்ணம்போல் செய்து கொள்ளவும். அதன் நடுவில் செய்து வைத்திருக்கும் பயத்தம் பருப்பு மசா லாவை வைத்து மூடி, உள்ளங்கையில் வைத்து வலது கையால் சீடையை தேய்ப்பது போல் தேய்த்து முட்டையைபோல உருட்டி வைக்கவும். கையில் ஒட்டாமல் இருக்க எண்ணெய் தடவிக் கொள்ளவும்.

இதை போல எல்லா மாவையும் செய்து கொள்ளவும். ஒரு தட்டில் எண்ணெய் தடவி செய்து வைத்திருக்கும் உருண்டைகளை வைத்து மேலே தண்ணீர் தெளித்து இட்லி பானையில் வைத்து 10 நிமிடம் வேக வைத்து எடுத்துக் கொள்ளவும்.

சட்டியில் அரை மேசைக்கரண்டி எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு, கறிவேப்பிலை போட்டு தாளித்து வேக வைத்த உருண்டைகளை போட்டு மெதுவாக பிரட்டி விடவும்.

பிறகு அரைத்து எடுத்து வைத்திருக்கும் விழுதை போட்டு அதன் மேல் ஒரு சிட்டிகை மஞ்சள் தூள் சேர்த்து மெதுவாக மசாலா, உருண்டைகளுடன் ஒன்றாக சேரும்படி பிரட்டி விடவும். மேலே 2 தேக்கரண்டி எண்ணெய் ஊற்றி ஒன்றாக நன்கு பிரட்டி இறக்கவும். பார்க்க முட்டை போல் இருக்கும் சுவையான மசாலா கொழுக்கட்டை தயார். இதை மாலை நேரச் சிற்றுண்டியாக பரிமாறலாம்.


# பூச்சிகளை விழுங்கும் தாவரங்கள்!

1800 ஆம் ஆண்டுகளில் மடகாஸ்கர் காடுகளில் சுற்றித் திரிந்த ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த கார்ல் லிச்சி என்பவர் ஒரு பெண்ணை மரம் விழுங்கியதாகவும் அதனைத் தான் பார்த்த தாகவும் கூறிய தகவல்கள் அடங்கிய விவரணக் கட்டுரை ஒன்று கண்டுகொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1950 ஆண்டுகளில் வெளியான கட்டுரையொன்றில் மேற்படி தகவல் தரலுக்கு மறுப்பும் தெரிவிக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது.

குறிப்பாக கார்ல் லிச்சி என்கிற பெயரில் யாரும் மடகாஸ்கர் காடுகளை ஆராயவில்லை என்பது தான் அந்த கட்டுரையின் உள்ளடக்கமாக காணப்படுகிறது.

இந்தநிலையிலே மனிதர்களைச் சாப்பிடும் மரம் இல்லாமல் போனாலும், சிறிய பூச்சிகளை விழுங்கும் பூக்களைக் கொண்ட பிட்சர் தாவரம் இருப்பது அந்தக் கட்டுரையில் உறுதிசெய்யப்பட்டதாக கூறப்படுகிறது. இவ்வகை தாவரங்கள் இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, மலேசியா



போன்ற வெப்ப மண்டல பகுதிகளில் காணப்படுகின்றன.

இதன்படி பிட்சர் தாவரத்தின் பூக்கள் ஒரு பெரிய ஜாடியின் வடிவத்தில் இருக்கும். இலைகளின் உதவியால் சுரக்கப்படுகின்ற வாசனையான படலம் பூக்களின் உட்புறத்தில் படிந்துகொள்கிறது.

வேர்களால் உறிஞ்சப்படும் நீரில் இந்த வாசனையுள்ள படலம் கரைந்து பூவின் அடியில் தங்கிவிடுகிறது. சிறு பிராணிகள் வாசனை யால் கவரப்பட்டு நீரைக் குடிப்பதற்காக ஜாடி வடிவப் பூவிற்குள் செல்லும்போது பூ மூடிக் கொள்கிறது. பிராணிகளின் உடல் சிதைக்கப்பட்டு பிட்சர் தாவரத்தால் உறிஞ்சிக்கொள்ளப்படுகிறது.

## மரண அறிவித்தல்கள்



### சபாபதிப்பிள்ளை குகதாசன்

கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாயில் வசித்தவரும் தற்போது வெல்லன் கரவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை குகதாசன் 13.12.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கண்மணியின் வளர்ப்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகேசு இளையபிள்ளை தம்பதியரின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற தங்கம்மாவின் கணவரும் மதிவதனி, பாஸ்கரன்(Sirra Water Board), சுதர்சன் ஆகியோரின் தந்தையும் ரவிக்குமார் (கௌரி ஸ்ரோர்ஸ்- பருத்தித்துறை) விஜிதா ஆகியோரின் மாமனாரும் கோகிலகிருஸ்ணன் (Commercial Credit Jaffna), கோகிலறமணன் ஆகியோரின் பேரனும் செல்வராணி, இந்திராணி ஆகியோரின் சகோதரரும் கனகலிங்கம், திருச்செல்வம், பவளராணி ஆகியோரின் மைத்துனரும் கந்தசாமியின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வெல்லன், கரவெட்டி மேற்கு.**


**தகவல்: குடும்பத்தினர்.**

(J/ 6857)(12.18.17)

### செல்லையா தில்லைநாதன்

(முன்னாள் பிரபல வர்த்தகர் - நீர்கொழும்பு. அகில இலங்கை சமாதான நீதிவான், நீர்கொழும்பு சைவத்திருமுறை அடியார் சங்கம மூத்த உறுப்பினர்)

தோற்றம்
09 . 09 . 1929



மறைவு
13 . 12 . 2016

யாழ்.புங்குடுதீவு, 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 11ஆம் வட்டாரம், நீர்கொழும்பு ஆகிய இடங்களைப் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தில்லைநாதன் 13.12.2016 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், கற்பகத்தின் பாசமிகு கணவரும்,புவேந்திரன் (பிரான்ஸ்), தியாகேஸ்வரி (இலங்கை), திலகவதி (செல்வி – சுவிஸ்),ஞானேந்திரன் (பிரான்ஸ்), தரணீஸ்வரி (பிரான்ஸ்), விமலேஸ்வரி (கனடா), யோகேஸ்வரி (கனடா), லோகேந்திரன் (சிங்கப்பூர்), சியாமளா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சுபத்திரை, வர்ணமாணிக்கம் மற்றும் கந்தசாமி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயகொடிதேவி, சச்சிதானந்தன், சுவேந்திரராஜா, ரோஹிணி, காலஞ்சென்ற கேதீஸ்வரன் மற்றும் நந்தகுமாரன், துஷிகரன், உமா, வசந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், பரமானந்தம் மற்றும் பூங்காவனம் (இலங்கை), காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, தையல்முத்து, முத்துக்குமாரு, தங்கம்மா, குணரெட்ணம் மற்றும் சிதம்பரம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கபிலன், ஐஸ்வர்யா,தனுசன், சஞ்ஜீவ் - சுகிர்தா, ரதீபன்- துர்ஷிதா, விதுர்ஷன், விகிர்தா, கீர்த்திகா, றொனிஷன், ராகவி, ருஷிகா, ரிஷாந், தனுஷாந், துர்க்கா, வைஷ்ணவி, மயூரா, விஷோஷன், ஜஸ்மிரா ஆகியோரின் அன்புப் பேரனும், ஆதேஷின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.12.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோயில் கடற்கரையில் அமைந்துள்ள மணற்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**11ஆம் வட்டாரம், புங்குடுதீவு, இல.11, சூரியா வீதி,நீர்கொழும்பு**

**தகவல்: குடும்பத்தினர்.**

**கற்பகம் (மனைவி) - இலங்கை +9477 7598558, +9476 381 6473**

(J/6843) (11,18)

## மரண அறிவித்தல்

திருமதி

### மகேஸ்வரி கந்தையா



சின்னப் பூவரசங்குளம், புளியங்குளத்தைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை (சியாமளா மில் ஒழுங்கை) வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கந்தையா நேற்று (14.12.2016) புதன் கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா (குஞ்சையா)வின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-சீதேவி தம்பதியின் அன்பு மகளும் சூரியகலா(ஜேர்மனி), சந்திரகலா, உதயகலா, ஜெயசிறி, பிறேமதாசன்(ஜேர்மனி), சுசிகலா(பிரான்ஸ்), ரசன் டோனி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜயகுமார்(ஜேர்மனி), சதீஸ்குமார், சிவதாஸ், நேசகுமார்(பிரான்ஸ்), சிவநாதன் (பிரான்ஸ்), மேனகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமி யாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15.12.2016) வியாழக் கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மீசாலை வடக்கு, வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சியாமளா மில் ஒழுங்கை, மீசாலை வடக்கு, மீசாலை**

**தகவல் : வி. அப்புலிங்கம் (குணசிங்கம்) (மைத்துனர்) 077 328 6489**

## மரண அறிவித்தல்

### கந்தையா குமாரசாமி (CK)



இணுவில்மேற்கைப் பிறப்பிடமாகவும் வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குமாரசாமி 13.12.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணேசலிங்கம் - பரமேஸ்வரி அம்மா தம்பதிகளின் அருமை மருமகனும் தேவிஇந்திராணியின் அன்புக் கணவரும் செந்தாமரையாசனி(மானிப்பாய் பிரதேசசபை), செங்கமலச்செல்வி (சுற்றாடல் உத்தியோகத்தர் - மத்திய சுற்றாடல் அதிகாரசபை), யதுனந்தன்(சிங்கப்பூர்) ஆகியோரது பாசமிகு தந்தையும் பிரியதர்சன், செந்தூரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் யனுஜன், நித்திலா, தர்மீகன் ஆகியோரின் அருமைப் பேரனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்(SM), குமரேசு, விசுவலிங்கம், கைலாயபிள்ளை (AO) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகராஜசேகரன், நகுலேந்திர ராணி, சிவராஜசேகரன், விக்னராஜசேகரன், கௌரிஇந்திராணி, வாமனஇராஜசேகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2016) வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.55/25, வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவில்.**

**தகவல்: மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.**

(J 6850) (14.17.18)

**021 205 4419**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தாவது ஆண்டு நினைவலைகள்



வையத்தின் மைந்தனாக
16 * 08 * 1963

தெய்வத்தின் சொந்தமாக
06 * 12 * 2006

# அமரர் நாகமுத்து ரவிச்சந்திரன்

முன்னைநாள் ஆசிரியர்
(யா / மிருசுவில் அ.த.க. பாடசாலை)
திதி: அபரபக்கதுதியை

ஞானத்தின் திருவுருவே!
நம் வாழ்வின் ஒளிவிளக்கே!
தேனொக்கும் வாழ்வளித்த தெய்வத்திருவுருவே!!
ஓடி மறைந்தது பத்து ஆண்டுகள்
வாடி நிற்கின்றோம் நாம் இங்கு
எம்முள் இறையாகி என்றென்றும்
எமக்கு நல்லன தந்திடுவீர்.


உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

நாவற்காடு, வரணி.

அன்பான மனைவி திலகவதி
மற்றும் குடும்பத்தினர்

## நெஞ்சை விட்டகலாத முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
24. 02. 1946



ஆண்டவன் அடியில்
27. 11. 2015

# தாமோதரம்பிள்ளை லோகநாதன் (ரமணா)

### திதி- அபரபக்கதுதியை

எங்கள் அக்காவின் அன்புக்கணவர் எங்கள் அன்பு அத்தான்
எங்கள் நல்வாழ்க்கைக்கு வழிகாட்டிய எங்கள் அன்புத்தெய்வம்
நீங்கள் இவ்வுலகில் இல்லையென்ற வேதனை உணர்வை எம்மனம்
ஜீரணித்துக் கொள்ளும் முன்பே ஆண்டும் ஒன்று ஆனதே
ஆண்டாண்டு தோறும் அழுதுபுரண்டாலும்
மாண்டார் வருவதில்லை - ஆனாலும் நீங்கள் அக்காவை விட்டுப்பிரிந்ததை
எம்மனம் ஏற்றுக்கொள்ளவில்லை அன்பு மகனைப் பிரிந்த வலி
ஆறுமுன்னே பேரிடியாக உங்களையும் இழந்தோம் நாம்
இல்லறம் சிறக்க இணைபிரியாமல் இன்புற்று மகிழ்வோடு இனிமையான
இசையினில் லயித்து உன்னதமான வாழ்வல்லவா வாழ்ந்தீர்கள்
மனைவி பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் மருமக்கள்
உற்றார் உறவினர் எல்லோருடனும் மகிழ்வாக
வாழ்ந்தீர்கள் உங்கள் அருமை மனைவியின் வாழ்வின் ஆதாரம்
அன்பின் ஆழம் அவர்கண்ட உலகம் எல்லாமே நீங்கள் தானே
உங்கள் பிரிவினால் பரிதவித்து நிலை குலைந்து நிற்கும்
அன்பு மனைவி அருமைப்பிள்ளைகள் ஆசைமருமக்கள்
உங்கள் அரவணைப்புத்தேடும் பேரப்பிள்ளைகள்
எல்லோருக்கும் ஆறுதல் சொல்ல இம்மண்ணில்
பிறக்க வேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றோம்
கள்ளங்கபடமற்ற நேர்மை அறிவாற்றல் பண்பு பாசம்
பரிவு தன்மானம் உள்ளவராக வாழ்ந்தீர்கள் உன்னதமான
உபசரிப்பில் உயாந்தே நின்றீர்கள் எங்கள் வாழ்வின்
உயர்வினில உங்கள் அறிவுரைகளும்
நல்லாசிகளும் நிறைந்தேயிருக்கும் காலங்கள் மறைந்தாலும் என்றும்
மறைந்திடாத உங்கள் நினைவுகளோடும் துயரத்தோடும் நாங்கள்

58/11, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்.

## வேலையாள்கள் தேவை


திருநெல்வேலியில் இயங்கும் வாணிபம் ஒன்றிற்கு கணக்குவேலை தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை.

**077 623 1295**

## மரண அறிவித்தல்

# கணபதிப்பிள்ளை செவ்வந்திராஜா

( ஓய்வு நிலை கணக்காய்வாளர் - இலங்கைப் போக்குவரத்துச்சபை)



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை செவ்வந்திராஜா நேற்று (14.12.2016) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் இந்திராதேவியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - திலகவதி தம்பதியிரின் அன்புமருமகனும் சுஜித்தா, சிவோதயன், மகிழன், குணாளன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இன்பமலர் மறறும் செவ்வந்தி மலர், சுகுமார், பானுமதி ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஸ்ரீதயாபரனின் அன்பு மாமனாரும் ஸ்ரீஜனின் அன்புப் பேரனும் சிவராமச்சந்திரன், சந்திராதேவி, கலாநிதி, அனுஷியாதேவி, தயாநிதி ஆகியோரின் அன்பு மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர். 077 822 1830

## மரண அறிவித்தல்

திருமதி

# செல்லம்மா அப்பாக்குட்டி



கோப்பாய் மத்தி, கோப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா அப்பாக்குட்டி 13.12.2016 அன்று காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற கணபதி-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அப்பாக்குட்டியின் அன்பு மனைவியும் செல்வமணி, சண்முக லிங்கம், பரமலிங்கம், தருமலிங்கம் காலஞ் சென்றவர்களான மகாலிங்கம், சிவலிங்கம் மற்றும் அமிர்தலிங்கம், பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் மகேஸ்வரி, கமலாதேவி, சத்தியதேவி(ராணி), சத்தியதேவி, இராஜேஸ்வரி, செல்வநிதி, ஶௌசி ஆகியோரின் அன்பு மாமியும் பாலசுந்தரம்-குஞ்சு, இராஜசுலோசனா-சத்தியமூர்த்தி, மாலினி-யோகேஷ், கௌசலா-சிவலிங்கம், வாசுகி-குணரட்ணம் காலஞ்சென்ற ரவிச்சந்தன் மற்றும் விஜி-சுதா, சசி-சந்திரன், சுரேஷ்-வேணுகா, கேதீஸ்-கிருஷ்ணவேணி, ரவிராஜ்-அனோஜா, பகிரதன்-ராஜி, நிறோஷன்-பிரபா, தர்சிகா-செல்வன், துஷானிகா-பிரதீப், நிலானிகா- சுரேஸ், அனுசிகா-சுகந்தன், மதன், துளசிகா-சுசாந், நறோஷன்-நிருஜா, தூரிகா, சோபிகா-சந்துரு, அனோஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கஜன் காலஞ்சென்ற றஷாந் மற்றும் கம்ஷன், மதீஷன், தனுஷன், தபோஷன் ,சியேந்த், சித்தேஷா, நிஷா, சுகன், பிரவீனா, சகீனா, சகித், தர்மிகா ,நர்மதன், தமிஸ், யதுஷ், டிலக்ஷி காலஞ்சென்ற திபிஷன் மற்றும் திபிஷிகா, அஜீஷ், அபினிஷா, சகில்த், யாழிதன், தாருஷ், அதீனா, ஆரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12.2016) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோப்பாய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்..

தகவல்:

Tel. 077 518 4407

மகன்(பஞ்சலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமி மீது விண்கல் மோதுவதை தடுப்பதற்கு நடவடிக்கை அவசியம்



எதிர்காலத்தில் பூமி மீது விண்கல் மோதுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கும் பட்சத்தில், அதனை எதிர்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இப்போது எடுக்க வேண்டும் என்று அமெரிக்காவில் உள்ள விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

சான் பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற அமெரிக்கப் புவிப் பௌதிகவியல் ஒன்றியத்தின் கூட்டம் ஒன்றில், இதற்காக புதிய விண்கலம் ஒன்றைத் தயாரிக்க ஆராய்ச்சியாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

அந்த விண்கலம் பூமியை நோக்கி வரும் வால் நட்சத்திரம் அல்லது விண்கல் போன்றவற்றை அணு வெடிபொருள்கள் மூலம் தகர்த்து அதன் பாதையை மாற்றுவதற்காக பயன்படலாம்.

சுமார் 15 ஆயிரம் விண்கற்கள் தற்போது கண்காணிக்கப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்னும் நிறைய விண்கற்கள் கண்டுபிடிக்கப் படாமல் உள்ளன என்றும், அந்த விண்கற்கள் பூமியுடன் மோதும் பாதையை கொண்டிருக்கலாம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

ஒரே ஒரு பிரம்மாண்ட விண்கல் கடலில் விழுந்தாலும், காற்றில் பல கிலோமீற்றர்களுக்குப் பெரிய அலைகளை உண்டாக்கி கடற்கரையோர நகரங்களை அழித்துவிடும் என்று விஞ்ஞானிகள் சொல்கின்றனர்.


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர்
**திருமதி குககுமாரி விஜயரகுநாதன்** அவர்களின்
அன்புத்தாயார்

திருமதி **சரஸ்வதி ஆறுமுகம்**
**(இளைப்பாறிய ஆசிரியர்)**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயக்குடும்பம்.**

(ஜே/6870)
(17.19.20)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரியில் சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றும்
**திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா**
அவர்களின் அன்புத்தாயார்
திருமதி
**சரஸ்வதி ஆறுமுகம்**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கல்லூரிச்சமூகம்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

## கண்ணீர் அஞ்சலி



ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின்
தலைவர் **செஞ்சொற்செல்வர்**
**ஆறு.திருமுருகன்** அவர்களின்
அன்புத்தாயார்

திருமதி **சரஸ்வதி ஆறுமுகம்**
**(இளைப்பாறிய ஆசிரியர்)**

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு துயருறுகின்றோம் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அண்ணா தொழிலகம் இணுவில்**
**077 3769031**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
**11.11.1988**

**மறைவு**
**10.12.2016**

### திருமதி நேர்மிலா ரஜிகரன்



யாழ். பருத்தித்துறை வீதி, 1ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேர்மிலா ரஜிகரன் (10.12.2016) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் இரத்தினசிங்கம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்புமகளும் தங்கராசா - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் ரஜிகரனின் (ஆஸ்திரேலியா) பாசமிகு மனைவியும் ரமேஸ் (பிரான்ஸ்), சுரேஸ் (பிரான்ஸ்), தனான் (பிரான்ஸ்), இந்துஜா (பெல்ஜியம்) காலஞ்சென்ற பவன், அருள்மோகன் (இலங்கை) ஆகியோரின் அன்புச்சகோதரியும் வதனி (பிரான்ஸ்), சாருஜா (பிரான்ஸ்), பிரதீபா (இலங்கை), சுதர்சன் (பெல்ஜியம்) காலஞ்சென்ற யுசானி யாழினி (இலங்கை), மதுஷா (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் அரேஸ், அலிஷா, அமேஸ், சக்தி, அக்ஷயா, லியானிகா ஆகியோரின் பாசமிகு அத்தையும் கீர்த்தியின் பாசமிகு சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2016) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 48/9, 1 ஆம் ஒழுங்கை,**
**பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்**
**077 030 6122**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(சி/6860)(17.20)

## கண்ணீர் அஞ்சலி



சிவபூமி அறக்கட்டளையின்
தலைவர் செஞ்சொற்செல்வர்
**கலாநிதி ஆறு திருமுருகன்**
அவர்களின் அருமைத்தாயார்

திருமதி **சரஸ்வதி ஆறுமுகம்**
**(இளைப்பாறிய ஆசிரியர்)**

அவர்கள் அகவை 90 இல் அமரத்துவம் அடைந்தார். அன்னாரின் ஆத்மா அம்பாளின் திருவடியை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

**சிவபூமி குடும்பம்.**

(ஜே/6871)
(17.19.20)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி ஆறுமுகம்

**(இளைப்பாறிய உப அதிபர், யாழ்/ இந்து ஆரம்பப் பாடசாலை)**



இணுவிலைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி ஆறுமுகம் (இளைப்பாறிய உபஅதிபர், யாழ்/ இந்து ஆரம்பப்பாடசாலை) அவர்கள் 14.12.2016 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-செல்லமுத்து தம்பதியரின் அன்பான புத்திரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற ஆறுமுகம்(இளைப்பாறிய ஆசிரியர், யாழ்/ இந்து ஆரம்பப் பாடசாலை) அவர்களின் அன்பான மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பையா, வீரசிங்கம், அம்பலவாணர், இலங்கைநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை(ஆசிரியர்) சின்னத்தம்பி, செல்லம்மா, சின்னம்மா, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி(முன்னாள் அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்,தென்மராட்சி கல்வி வலயம்), குகமூர்த்தி(இளைப்பாறிய விரிவுரையாளர், தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை), குககுமாரி(அதிபர், நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்) கோணேஸ்வரி(ஆசிரியை, இராமநாதன் கல்லூரி), ஆறுதிருமுருகன்(இளைப்பாறிய அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி), விக்னேஸ்வரி(விரிவுரையாளர், கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்), கேதீஸ்வரி(ஆசிரியை, யாழ்/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற ஞானலக்ஷ்மி(ஆசிரியை, நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்) மற்றும் சசிகலா(கல்வித் துறைத் தலைவர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்), விஜயரகுநாதன்(இளைப்பாறிய கணக்காளர், யாழ்/ போதனா வைத்தியசாலை), இராமச்சந்திரன்(இளைப்பாறிய சேவைக்கால ஆலோசகர், வலிகாமம் வலயம்), நரேந்திரா(இளைப்பாறிய ஆசிரியர், உரும்பிராய் இந்துக் கல்லூரி), ஆனந்தரட்ணம்(இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதிக் கிளை) ஆகியோரின் அன்பு மாமியும் Dr. மயூரேசன்(வைத்திய நிபுணர், தேசிய வைத்தியசாலை), லாவண்யா(ஆசிரியை, றோயல் கல்லூரி), Dr. கமலகுமார்(யாழ்/ போதனா வைத்தியசாலை), கேதுஷா(ஆசிரியை, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஸ்ரீவிசாகன்(விரிவுரையாளர், பல்கலைக்கழகக் கல்லூரி, மாத்தறை), ஸ்ரீவித்தகன்(விரிவுரையாளர், பல்கலைக்கழகக் கல்லூரி, யாழ்ப்பாணம்), கோகுலன்(ஆய்வாளர், கிறீனிச் பல்கலைக்கழகம்,UK), தாயினி(System Analyst,Uk) , விசாரதன்(Senior Business Analyst, கொழும்பு), உசேனி, வேதப்பிரியன்(Software Engineer, கொழும்பு), விதுஷன் (மாணவன், யாழ்/ இந்துக் கல்லூரி), தர்மிதா(மாணவி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் விவிராம்(UK), கல்கி ஆகியோரின் அன்பிற்குரிய பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(2016.12.15) வியாழக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4 மணியளவில் பூதவுடல் இணுவில் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**246/4A,**
**கோயில் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**ஆறு. திருமுருகன்**
**(மகன்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ஆர்கிட் செடி!

## பச்சயம் இன்றி ஒளிச்சேர்க்கை செய்யும் கடன் வாங்கி!

பிச்சை எடுத்ததாம் பெருமாள் அதைப் பிடுங்கியதாம் அனுமார் என்பதான கதை வெளியின் பரம்பலை செவிவழி கேட்டிருக்கிறோம். அதன் அர்த்தங்களை ஆராய்ந்து வாய்மொழிகளை முகிழ்ந்திருக்கிறோம்.

அந்தவகையிலே ஒரு ஆர்கிட் செடி தனக்குத்



தேவையான சக்கரை உணவை பூஞ்சணக் கிருமிகளிடமிருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்கின்றது. அந்தப் பூஞ்சணங்களோ பக்கத்தில் வளரும் மரங்களின் வேர்களிலிருந்து சக்கரையைத் திருடுகின்றன. இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் மண்ணுக்கடியிலேவெளித் தெரியாமல் இடம் பெறுவதாகச் சொல்லப் படுகிறது.

உயிரியல் வல்லுநர்கள் தாய்லாந்தில் அண்மிதமாக பச்சையம் இல்லாத மூன்று ஆர்க்கிட் செடிகளைக் கண்டதாகவும் பச்சை நிறம் இன்றி எப்படி இந்தச் செடிகள் ஒளிச்சேர்க்கை செய்து பிழைக்கிறது என்பது தொடர்பில் ஆராய்ந்த போது பூஞ்சணங்களின் உதவியுடன் பக்கத்தில் இருக்கும் மரங்களின் வேர்களிலிருந்துஉணவைத் திருடி வாழ்க்கை நடத்துவது தெரிய வந்துள்ளது.

அடர்ந்த கானகத்தில் வாழும் இவ்வகை ஆர்க்கிட் செடிகள் மிகவும் அபூர்வமானவை எனவும் அவற்றின் வாழ்க்கை முறை என்பது அதிசயமானதாக இருப்பதாகவும் இவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அந்தவகையிலே பூஞ்சணங்கள் பொதுவாக மண்ணில் வாழும் கிருமிகள் என்பதுடன் காளான்கள் கூட பூஞ்சணங்கள் தான் என்கின்றனர் அறிவியல் நிபுணர்கள்.

ஆக, ஆர்க்கிட் செடிகள் சாதுரியமாகச் செயற்பட்டு பூஞ்சணங்களிடம் இருந்து உணவைப் பெற்று வாழும் முறை ஆச்சரியமாக இருக்கிறது.


## மரண அறிவித்தல்

### சரவணமுத்து சங்கரப்பிள்ளை



அச்செழுவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது நீர்வேலி மத்தியில் வசித்தவருமாகிய சரவணமுத்து சங்கரப்பிள்ளை (14.12.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் மட்டுவில் இராமலிங்கம் அன்னம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக்கணவரும் சந்திரசூடி (கொள்வனவு உத்தயோகத்தர் நீர்வேலி - M.P.C.S), உமாமகேஸ்வரன் (ஆசிரியர் கிளி - பூநகரி பரமங்கிராய் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதேஸ்வரி, கலாவதி, ஆகியோரின் மாமனும் சிவசுதன், மதுஷா, அபர்ணா ,சிவக்பிலன், சிவப்பிரியன் ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான செல்லையா பொன்னம்பலம் மற்றும் கந்தசாமி சபாரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2016) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணியளிவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.30 மணிக்கு நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசகேசரிப்பிள்ளையார் கோயிலடி
நீர்வேலி மத்தி, நீர்வேலி
சூடி - 077 2562 513, உமா - 077 4412 420

தகவல்
ச. சந்திரசூடி

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் இராசையா
இராஜேஸ்வரன்

தோற்றம் 01.01.1954
மறைவு 15.11.2016

கடந்த 15.11.2016 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் இராசையா இராஜேஸ்வரன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (15.12.2016) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

96, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 3288107, 021 222 2491

## கண்ணீர்அஞ்சலி



எங்கள் உயர் மதிப்பிற்குரிய செஞ்சொற்செல்வர் **கலாநிதி ஆறு.திருமுருகன் ஐயா** தலைவர் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்) அவர்களின் தாயாராகிய

### திருமதி சரஸ்வதி ஆறுமுகம்

**(இளைப்பாறிய ஆசிரியர்)**

அவர்கள் 14.12.2016 அன்று இறைபதம் அடைந்துவிட்டார் என்ற செய்தியை கேட்டு துயரடைவதோடு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இந்திய சிற்பக்கலைஞர்கள் உரும்பிராய்,**
**JEYASUNJAN CONSTRUCTION URELU,**
**S.K.S. CONSTRUCTIONS RASAVINTHODDAM.**

(ஜே/6871)
(17.19.20)

Galaxy Star
வெற்றி வாரம் 118
திகதி 14.12.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
07 14 42 54 60
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,222,400 /-

## 56 ஆவது பிறந்தநாள் நினைவும் 45 ஆம் நாள் நினைவஞ்சலியும்



இராஜரெத்தினம்
இராஜசிங்கம்
(முகாமையாளர் - நியூ சண்முகானந்த ரெக்ஸ்மைல்)

பிறப்பு 15.12.1960
இறப்பு 30.12.2016

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வாழவைத்து
பாருவோர் புகழ்ந்தேற்ற
பெருமையாய் வாழ்ந்த தெய்வம்
இக வாழ்வில் சுவை துறந்து
இறைபணியைத் தொடர்ந்திட
வைரவரைப் போற்றி செய்வோம்.

சேச் றோட்,
சங்கானை.

(J 6795)
(14,17,18)

குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 01 . 12 . 1932



மறைவு 27 . 11 . 2015

திதி: அபரபக்க துதியை- 15.12.2016 வியாழக்கிழமை

விஸ்வ பிரமஸ்ரீ கலாபூசணம்

அமரர் **சின்னத்தம்பி நாகராசா** (சிற்பாச்சாரியார்)

(ஈஸ்வரன் சிற்பஸ்தாபன ஸ்தாபகர்,A.S.N.R, தவில்கொட்டுத் தயாரிப்பாளர், பேரீவாத்ய விஸ்வபிரமன், கலாபூசணம்)

சொல்லு நற்சிற்பாந்தியாய் நல்லதொரு தந்தையாய்
வல்லதொரு வித்தகனாய் சிற்பங்கள் முதல் கலைமரபு பேண்
வாத்தியக் கருவிகளை அழகுடனே
இத்தனையும் இத்தரையில் படைத்து
மங்காப் புகழுடனே செங்கதிரோன் ஒளிபோல
வாழ்ந்த எம் குலவிளக்கே
உங்கள் ஆன்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி ! சாந்தி!

என்றும் நினைவில்...

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.(நாவடி)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதியமைச்சரை...

மன்றத்தில் தெரிவித்துள்ளமை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும் எனக் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

நிதியமைச்சரது இந்தக் கருத்தினால் அனைத்து மாகாண சபைகளும் பல்வேறு நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்துமுதலமைச்சர்வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

2017 வரவு - செலவுத்திட்டத்தில் அனைத்து மாகாணங்களுக்கும் கடந்த 2016இல் ஒதுக்கப்பட்ட நிதியில் 46 வீதமே ஒதுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக 2016 இல் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு 3,297 மில்லியன் ரூபா நிதியொதுக்கப்பட்டது. ஆனால் 2017இல் 1544 மில்லியன் ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகளுக்கு குறைக்கப்பட்ட நிதியை மத்திய அமைச்சுக்களுக்கு அதிகரித்து வழங்கியதன் மூலம் சமப்படுத்தியுள்ளதாக நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் ஒதுக்கப்பட்ட நிதியில் மாகாண சபை வீண் செலவு செய்துள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டை பொதுமைப்படுத்த முடியாது. மாகாண சபையின் எந்தவொரு உறுப்பினரும் மாகாண சபை நிதியை விரயப்படுத்தவில்லை.

கடந்த அரசிலுள்ளவர்கள் அவ்வாறு செயற்பட்டிருக்கலாம். குறித்த நபர்கள் தவறாக அரச நிதியைப் பயன்படுத்தியமை தொடர்பிலேயே இப்போது விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அத்தனை நிதிக் குற்றங்களும் மத்திய அரசின் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் எவ்வித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படவில்லை.

ஆகவே மாகாண சபைகளுக்கான நிதியைக் குறைப்பதற்கு நிதியமைச்சர் முன்வைத்த கருத்துக்கள் ஆதாரமற்ற நொண்டிச் சாட்டுகள்.

எவ்வாறாயினும் மாகாண சபைகளுக்கு போதிய நிதி வழங்காமல் முழுமையான அதிகாரப் பகிர்வு என்பது அசாத்தியமான விடயம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசு இதயசுத்தியுடன் அதிகாரப் பகிர்வு என்ற விடயத்தில் நம்பிக்கை கொண்டிருக்குமேயானால் மாகாண சபைகளுக்கான நிதியை நேரடியாக மாகாணங்களுக்கு வழங்க முன்வரவேண்டும்.

மாகாண சபைகளுக்கு தாக்கம் செலுத்தும் விடயங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை மாகாண சபைகளுக்கே வழங்க வேண்டும். ஆனால் இன்று அதற்கு மாற்றமாகவே இடம்பெறுகின்றது - என குறிப்பிட்டுள்ளார். (த-ய-45)

## பொலிஸ்...

குறைப்பதற்கும் புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் உபகுழுக்களால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையை மக்கள் விடுதலை முன்னணி முற்றாக நிராகரித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மேலும் தெரிவித்ததாவது:

போரினால் பாதிக்கப்பட்ட நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும்போது, வழங்கப்படும் தீர்வு மீண்டும் ஒரு போரை ஏற்படுத்தாதவாறு - நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்காதவாறு அமைய வேண்டும். போரினால் வடக்கு - கிழக்குத் தமிழர்கள் மாத்திரம் பாதிக்கப்படவில்லை. முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். சிங்களவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். வடக்கு - கிழக்கும் பாதிக்கப்பட்டது. தெற்கும் பாதிக்கப்பட்டது.

முழு நாட்டையும், நாட்டில் உள்ள அனைத்து இனங்களையும் போர் பாதித்துள்ளதால் முழு நாட்டையும் அனைத்து இனங்களையும் கருத்திற்கொண்டே அரசியல் தீர்வு தயாரிக்கப்படவேண்டும். வடக்கு - கிழக்கை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு இதைச் செய்ய முடியாது.

நாம் இதை இனவாதத்தோடு பார்க்கக்கூடாது. நாம் இனவாதிகள் அல்லர். எல்லா இனங்களுக்கும் நன்மை கிடைக்க வேண்டும். முழு நாடும் நன்மையடைய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். நாம் முன்வைக்கும் தீர்வு எதிர்காலச் சந்ததியினருக்கு ஆபத்து இல்லாததாக அமைய வேண்டும்.

தீர்வு என்ற பெயரில் எமது எதிர்காலச் சந்ததியினருக்கு மீண்டும் ஒரு போரை நாம் திணித்து விடக்கூடாது.

மாகாண சபைகளுக்குப் பொலிஸ், காணி அதிகாரம் வழங்குவது போன்ற எவ்வாறான யோசனைகள் முன்வைக்கப்பட்டாலும் அவை நாடாளுமன்றுக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு அங்கீகாரம் வழங்கப்படவேண்டும். பின்னர் பொது வாக்கெடுப்புக்கு விடப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும்.

அரசமைப்பையும் மக்களையும் வைத்து நாம் அரசியல் சூது விளையாடமாட்டோம். குறுகிய அரசியல் இலாபத்தை அடையும் நோக்கம் எம்மிடமில்லை. நாம் நாடாளுமன்றில் ஆறு பேர் இருந்தாலும் எல்லாவற்றையும் துணிச்சலுடன் வெளிக்கொண்டு வருவோம். மக்களுக்குத் தெளிவுபடுத்துவோம். அந்த அடிப்படையில்தான் அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பிலும் அரசமைப்பு உருவாக்கும் விடயத்திலும் செயற்படுவோம் - என்றார். (த-5)

## சுமணரத்ன...

சுமணரத்ன தேரரை நீதிமன்றம் நேற்றுப் பிணையில் விடுவித்தது. மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் முன்னிலையான அவரை, 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் செல்வதற்கு மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா அனுமதித்தார்.

மட்டக்களப்பு நகரில் கடந்த 3 ஆம் திகதி அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் ஆள்களைத் திரட்டியமை, பொலிஸ் தடை மீது ஏறி குழப்பம் விளைவித்தமை தொடர்பில் மங்களராமய விகாராதிபதிக்கு எதிராகப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

அன்றைய தினம் பொதுபலசேனா அமைப்பினருடன் இணைந்து மட்டக்களப்பு நகரில் போராட்டம் நடத்தவும் விகாராதிபதி திட்டமிட்டிருந்தார். இதனால் பொலிஸார் தடை ஏற்படுத்தினர். இதனை எதிர்த்து விகாராதிபதி செயற்பட்டார். பொலிஸாரின் தடைகளைத் தகர்ப்பதற்காக ஆள்களைத் திரட்டினார். பொலிஸாருக்கு எதிராகக் கூச்சலிட்டார். இதனால் மட்டக்களப்பு நகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டிருந்தது.

குழப்பங்களுக்குக் காரணமாக இருந்த குற்றச்சாட்டில் கடந்த 6 ஆம் திகதி மாவட்ட நீதிமன்றில் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதற்கு அமைவாக, நேற்றைய தினம் மன்றில் முன்னிலையாகுமாறு விகாராதிபதிக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது.

அவர் மன்றில் முன்னிலையானார். அவரைத் தலா 50 ஆயிரம் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்வதற்கு நீதிபதி உத்தரவிட்டார். வழக்கு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (த-5-46)

## தீவிரமாகிறது...

ஊழியர்கள் நேற்று எட்டாவது நாளாகவும் போராட்டத்தை முன்னெடுத்தனர். அம்பாந்தோட்டை மக்களில் ஒரு தொகுதியினர் இவர்களுக்கு ஆதரவாக வீதியில் போராட்டத்தை ஆரம்பித்தனர். இதனால் கொழும்பு - கதிர்காமம் முதன்மைச் சாலையின் ஊடான போக்குவரத்து நேற்றுத் துண்டிக்கப்பட்டது.

இலங்கை அரசு அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை நீண்ட காலத்துக்குச் சீன நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது. அம்பாந்தோட்டையில் 15 ஆயிரம் ஏக்கரில் சீன நிறுவனம் தொழில் வலயம் அமைப்பதற்கும் இலங்கை அரசு இணங்கியுள்ளது.

சீன நிறுவனத்துக்கு அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைக் குத்தகைக்கு வழங்கியமையால் தமது தொழில் வாய்ப்புக்கள் இல்லாது போகும் எனவும், தம்மை இலங்கைத் துறைமுக அதிகார சபையின் ஊழியர்களாக்குமாறும் கோரி, அம்பாந்தோட்டைத் துறைமுக ஊழியர்கள் கடந்த 8 நாள்களாகத் தொடர் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டத்தில் அம்பாந்தோட்டை மக்களும் நேற்று இணைந்து கொண்டுள்ளனர். கொழும்பு - கதிர்காமம் முதன்மைச் சாலையில் திஸ்ஸமகாராமவுக்கு அருகில் மிரிஜலச் சந்தியில் நேற்றுக் காலை, வீதியை மறித்துப் பொதுமக்கள் போராட்டத்தை தொடங்கினர்.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இதில் பங்கெடுத்திருந்தனர். இதனால் முதன்மைச் சாலையின் ஊடான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. நேற்று மாலை வரை இந்தப் போராட்டம் நீடித்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## 171 மோசடி...

171 முறைப் பாடுகள் சம்பந்தமான விசாரணைகள் நிறைவ டைந்துள்ளதாக அந்த ஆணைக்குழுவின் செயலர் எச்.டபிள்யூ குணதாச தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த ஆண்டு மிகப்பெரிய மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆயிரத்து 600 முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. அவற்றில் 165 முறைப்பாடுகள் ஆணைக்குழுவின் விதிமுறைக்கு அமைவானதாக இல்லை. அதன் காரணமாக அதில் 43 முறைப்பாடுகள் வேறு நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஆணைக் குழுவுக்குக் கிடைத்த 357 முறைப்பாடுகள் விசாரணைப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 36 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது வரை ஜனாதிபதி ஆணைக்குழுவினால் நிறைவு செய்யப்பட்ட 6 விசாரணை அறிக்கைகள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மேலும் 6 விசாரணை அறிக்கைகள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளன. ஆணைக் குழுவின் முன்னேற்றம் குறித்த அறிக்கை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும். அதுபோன்ற அறிக்கை எதிர்வரும் வாரத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது - என்றார். (த-5)

## 100 மில்லியன்...

மோசடி நடை பெற்றுள்ளது. இந்த நிதி மோசடி தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஜனாதிபதியை வலியுறுத்துவதாக, கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

அம்பாந்தோட்டை துறைமுக விற்பனை தொடர்பிலான பேச்சுக்கள் ஹொங் கொங்கில் நடைபெற்றுள்ளன. அதன்போது துறைமுக விற்பனையை அடிப்படையாகக் கொண்டு மோசடியாக 100 மில்லியன் அமெரிக்க டொலர் பணப்பரிமாற்றம் இடம்பெற்றுள்ளது. நிதி மோசடி தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

பெறுமதி வாய்ந்த துறைமுகம் சீன நிறுவனத்துக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் 80 சதவீதமான பங்கு 1.1 பில்லியன் அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. எனினும் துறைமுகத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்குத் தெரியாமலேயே விற்பனை செய்யப்பட்டுள்ளது. குறித்த உடன்படிக்கை சட்டத்துக்கு முரணான வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார். (த-5)

## முல்லைத்தீவில்...

அமைப்பதற்கு நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முல்லைத்தீவில் பொலிஸ் நிலையக் கட்டடத்தை அமைப்பதற்குக் கடந்த 2014 ஆம் ஆண்டே அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டது. இருப்பினும் அதன் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படவில்லை. இந்த நிலையில் முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையக் கட்டட நிர்மாணப் பணிகளைத் துரித கதியில் ஆரம்பிப்பது தொடர்பில் சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்கவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (த-5)

## இன்று...

மகிந்த ராஜபக்சவின் அலுவலகத்தில் சிறப்புச் சந்திப்பு இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அரசமைப்பு தொடர்பில் உப குழுக்கள் மற்றும் வழிநடத்தல் குழுவின் அறிக்கைகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த வாரம் அரசமைப்பு வழிநடத்தல் குழுவுடன் மகிந்த ராஜபக்ச சந்திப்பொன்றையும் நடத்தியிருந்தார்.

புதிய அரசமைப்புக்கு முற்றுமுழுதான எதிர்ப்பை வெளியிட்டுவரும் பொது எதிரணி, அரசமைப்பு மறுசீரமைப்பையே வலியுறுத்தி வருகின்றது. ஒற்றையாட்சிக்குச் சிறிதளவேனும் பங்கம் ஏற்படும் அரசமைப்பு மறுசீரமைப்புகள் இடம்பெறும் பட்சத்தில் நாட்டில் பாரதூரமான பிரச்சினைகள் தோன்றும் என்றும் பொது எதிரணி எச்சரித்து வருகின்றது.

புதிய அரசமைப்பு மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் உள்ளிட்ட பல்வேறு சமகால அரசியல் விவகாரங்கள் மற்றும் தமது எதிர்கால நகர்வுகள் தொடர்பில் ஆராய்வதற்கும், கலந்துரையாடுவதற்குமே மகிந்த தலைமையில் பொது எதிரணி இன்று கூடுகின்றது.

இந்தச் சந்திப்பில் முன்னாள் அயலுறவுத் துறை அமைச்சரும் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தலைவருமான ஜி.எல். பீரிஸும் கலந்துகொள்வார். (த-5)

## யாழ்...

கேரளக் கஞ்சா பொதிகளை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கஞ்சா போதைப்பொருள் கடத்துபவர்களின் புதிய பாணியிலான கடத்தல் மற்றும் பதுக்கல் இடங்களாகவே இவற்றை நோக்க முடிகின்றது.

யாழ்ப்பாணம் ஏ-9 வீதியில் செம்மணிச் சுடலைக்குள் சடலங்கள் வைத்து எரிக்கும் இடத்தை அண்மித்துக் காணப்பட்ட குப்பைக்குள் இருந்து 7 பொதிகளாக 14 கிலோகிராம் கஞ்சாபோதைப் பொருள் மீட்கப்பட்டது.

யாழ்.பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான சிறப்புப் போதைப் பொருள் பிரிவு இந்தக் கஞ்சாவை மீட்டது. தமக்குக் கிடைத்த தகவலின்படி அவற்றை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி குடத்தனையில் 16 கிலோகிராம் கேரளக் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன. குடத்தனை வடக்கு காட்டுப் பகுதியில் ம[illegible] யானத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 2 பொதிகளும், அங்குள்ள 2 கோயில்களை அண்மித்து தலா 2 பொதிகளும், காட்டுப் பகுதியில் புதைத்து வை[illegible]கப்பட்ட நிலையில் மற்றொரு பொதியுமா[illegible] 8 பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

தமக்குக் கிடைத்த தகவலின் அடிப்ப[illegible]யில் குறித்த பகுதிக்குச் சென்று தேடுத[illegible] நடத்திக் குறித்த கஞ்சாப் பொதிகளை மீ[illegible]தாகப் பருத்தித்துறைப் பொலிஸார் தெ[illegible]வித்தனர். (த-4-26-32-109-10

## முல்லை...

கடத்தப்பட்ட 140 கிலோகிராம் கேர[illegible] கஞ்சாவை நேற்று மீட்டதாகப் பொலிஸ[illegible] தெரிவித்தனர். நிலாவெளிப் பிரதேசத்[illegible] வைத்து நேற்று அதிகாலை குறித்த கஞ்[illegible] கைப்பற்றப்பட்டது. அதனைக் கடத்[illegible] குற்றச்சாட்டில் 3 பேர் கைதுசெய்யப்[illegible]டனர். அவர்கள் மருதமுனை, அம்பா[illegible] மத்திய முகாம் மற்றும் கல்முனைப் [illegible] தேசங்களைச் சேர்ந்தவர்கள்.

முல்லைத்தீவிலிருந்து கடல் மார்க்கம[illegible] ஒரு தொகைக் கஞ்சா கடத்தப்படுவதா[illegible] கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்ப[illegible]யில் திருகோணமலை பிராந்திய போ[illegible] ஒழிப்புப் பிரிவின் பொலிஸ் குழு ஒ[illegible] குறித்த பிரதேசத்தைச் சுற்றிவளைத்[illegible] தேடுதல் நடத்தியபோதே கஞ்சா கைப்பற்றப்பட்டது.

குறித்த பிரதேசத்தில் பொலிஸ் குழுவொ[illegible] மறைந்திருந்துள்ளது. இதன்போது [illegible] வழியாகப் பயணித்த வானொன்[illegible] பொலிஸ் குழு வழிமறித்துச் சோத[illegible] நடத்தியபோது அதில் 140 கி.கிராம் [illegible]ளக் கஞ்சா இருந்தமை கண்டறியப்[illegible] மீட்கப்பட்டது. அதனைக் கொண்டு செ[illegible] குற்றச்சாட்டில் குறித்த 3 பேரும் கை[illegible] செய்யப்பட்டனர். 3 பேரும் திருகோணம[illegible] நீதிமன்றத்தில் இன்று முற்படுத்தப்படு[illegible] அது தொடர்பில் விசாரணை தொடர்கி[illegible] என்று திருகோணமலைப் பொலிஸ[illegible] தெரிவித்தனர். (த-4-[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 15

**ஞானமுருகனின் கால்பந்தாட்டம்**

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் லீக் முறையிலான ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குறிஞ்சிக்குமரன் அணியை எதிர்த்து தீவகம் ஐயனார் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி மோதவுள்ளது.

**யாழ். மாவட்ட கரப்பந்தாட்டம்**

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகிறது. இந்தத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் அணி மோதவுள்ளது.

**மனோகராவின் கால்பந்தாட்டம்**

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-23-422-108)



மன்னார் லீக்

# எவ்.ஏ. கிண்ணத் தொடர் ஐக்கிய அணி சம்பியன்

யாழ்ப்பாணம், டிசெ. 15

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத் தொடரில் மன்னார் லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்களில் ஜோசவாஸ்நகர் ஐக்கிய அணி கிண்ணம் வென்றது.

தாழ்வுபாடு ஆயர் இராயப்பு ஜோசப் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. மன்னார் வங்காலை சென். ஆன்ஸ் அணியை எதிர்த்து ஜோசவாஸ்நகர் ஐக்கிய அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் சென். ஆன்ஸ் அணி 2:1 என்று முன்னிலை வகித்தது.

நெருக்கடியான நிலையில் களமிறங்கிய ஜோசவாஸ் அணி இரண்டாம் பாதியில் இரு கோல்களைப் பதிவு செய்து 3:2 என்று முன்னிலை பெற்றது. பின்னிலையிலிருந்து மீண்டு வந்து, அந்த அணி கிண்ணம் வெல்லப்போகிறது என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சென். ஆன்ஸின் சார்பாக மூன்றாவது கோல் பதிவானது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவு வரை வேறெந்த கோல்களும் பதிவாகவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:0 என்ற கோல் கணக்கில் ஐக்கிய அணி வெற்றிபெற்று கிண்ணத்தை வென்றது. (ம-56-23)

# வென்றது யங்ஸ்ரார்

யாழ்ப்பாணம், டிசெ. 15

**இலங்கை துடுப்பாட்டச் சங்கம்** நடத்திவரும் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வவுனியா யங்ஸ்ரார் அணி வென்றது.

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யங்ஸ்ரார் அணியை எதிர்த்து மன்னார் தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா யங்ஸ்ரார் அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து, 224 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜெனசன் ஆட்டம் இழக்காமல் 98 ஓட்டங்களையும், சயூரன் 31 ஓட்டங்களையும், கிரிதரன் 24 ஓட்டங்களையும் பெற்ற னர். பந்துவீச்சில் அகிலன் 4 இலக்குகளையும், எட்வேட் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். 225 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் அணி 34.2 பந்துப் பரிமாற்றங்கள் சகல இலக்குகளையும் இழந்து, 163 ஓட்டங்களையே பெற்றது. அதிகபட்சமாக எட்வேட் 40 ஓட்டங்களையும், ஹரிபவன் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஜெனசன், யூட் இருவரும்தலா 3 இலக்குகளை வீழத்தினர். (ம-23)

# எவ்.ஏ. கிண்ணத் தொடரில் அரையிறுதிக்குள் இளைஞர்

யாழ்ப்பாணம், டிசெ. 15

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால்; நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத் தொடரில் பருத்தித்துறை லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்களில் திக்கம் இளைஞர் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. திக்கம் இளைஞர் அணியை எதிர்த்து சென். பீற்றர்ஸ் அணி மோதியது. திக்கம் இளைஞர் அணியின் தீபன் 8 ஆவது, 12 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களை பதிவுசெய்ய இடைவேளைக்கு முன்னர் அந்த அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதி ஆரம்பமான இரண்டாவது நிமிடத்தில் சென். பீற்றர் அணியின் அசோக் தனக்கு கிடைத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தி, முதல் கோலைப் பதிவுசெய்தார். அடுத்த சில நிமிடத்தில் திக்கம் இளைஞர் அணி வீரர் ஹரிகரன் பிறிதொரு கோலைப் பதிவுசெய்து இளைஞரின் வெற்றியை உறுதிப்படுத்தினார். முடிவில் இளைஞர் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-422)





நடப்பு வருடத்துக்கான சிறந்த கால்பந்து வீரர் விருது போர்த்துக்கல் அணியின் தலைவரான ரொனால்டோவுக்குக்கிடைத்தது. ரொனால்டோ ரியல் மட்ரிட் கழகத்தின் நட்சத்திர வீரராகவும் உள்ளார். அவருக்கு இந்த விருது கிடைத்ததை அடுத்து ரியல் மட்ரிட் அணியின் தலைவர் ராமோஸ் சிறந்த கால்பந்து வீரருக்கு வழங்கப்படும் விருதின் தோற்றத்தில் கேக் ஒன்றை அன்பளிப்புச் செய்தார். (ம)

# மனோகராவின் கால்பந்துத் தொடர் தோமஸை வீழ்த்தியது அன்ரனிஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 15

மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் சவால் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் மணற்காடு சென். அன்ரனிஸ் அணி சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றது.

மனோகராவின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில், மணற்காடு சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து மாதகல் சென். தோமஸ் அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் சென். தோமஸ் அணியின் றோகி தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார். அடுத்த இரண்டாவது நிமிடத்தில் சென். அன்ரனிஸ் வீரர் றெஜினோல்ட் பதில் கோலைப் பதிவு செய்து பதிலடி கொடுத்தார். இரு அணிகளும் பலமுறை முயற்சித்தபோதும் கோல் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை. இதனால் சமநிலை தவிர்ப்பு உதைமூலம் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:1 என்ற கோல் கணக்கில் சென். அன்ரனிஸ் அணி வெற்றி பெற்று சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ம-422-108)



# பிற்போடப்பட்டது வர்ண இரவு

யாழ்ப்பாணம், டிசெ. 15

மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவிருந்த வர்ண இரவு நிகழ்வு பிற்போடப்பட்டது. எதிர்வரும் 21 ஆம் திகதி நிகழ்வு நடைபெறுமென திணைக்களப் பணிப்பாளர் இ. குருபரன் தெரிவித்தார். இடங்களில் மாற்றம் செய்யப்படவில்லை. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுகள் திணறும்

## கெய்ல் கணிப்பு

அனுபவ வீரர்களை அணியில் சேர்க்காவிட்டால் டெஸ்ட் தொடர்களில் மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடர்ந்து தடுமாற்றமான ஆட்டத்தையே வெளிப்படுத்தும் என்று கெய்ல் தெரிவித்தார்.

ரி-20 ஆடடங்களில் இருப்பதைப் போல் டெஸ்ட் ஆட்டங்களில் தீவுகள் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்துவதில்லை. ஊதிய ஒப்பந்தப் பிரச்சினை காரணமாக டெஸ்ட் ஆட்டங்களுக்கான அணியில் இருந்து கெய்ல், பொலார்ட், ரசல், பிராவோ போன்ற அனுபவ வீரர்கள் நீக்கப்பட்டமையே அந்த அணியின் தடுமாற்றத்துக்குக் காரணம் என்று பரவலாகக் கருதப்படும் நிலையில் கெய்லும் அவ்வாறான ஒரு கருத்தையே பதிவு செய்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி முன்பு சாதித்ததைப் போல் தற்போது சாதிப்பது மிகக் கடினம். தற்போதைய இளம் வீரர்கள் ரி-20 ஆட்டங்களில்தான் அதிக கவனம் செலுத்துகிறார்கள். நாம் அனைவரும் தீவுகளுக்காக விளையாட விரும்புகிறோம். அணித் தெரிவில் மாற்றங்கள் இடம்பெறாவிட்டால் தீவுகள் மீண்டெழுவதும் சாதிப்பதும் கடினம் என கெய்ல் மேலும் தெரிவித்தார். (ம)





# வார்த்தை மோதல்களிடையே ஆஸி.-பாக். தொடர் இன்று

ஆஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் பிரிஸ்பெய்ன் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரிலும் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரிலும் விளையாடுவதற்காக பாகிஸ்தான் அணி ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ளது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் பிரிஸ்பெய்ன் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது. பகலிரவு ஆட்டமாகவே இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. இரண்டாவது ஆட்டம் டிசெம்பர் 26 ஆம் திகதியும் மூன்றாவது ஆட்டம் ஜனவரி மூன்றாம் திகதியும் நடைபெறவுள்ளன.

தொடர் ஆரம்பமாவதற்கு முன்னதாக இரு தரப்பு வார்த்தை மோதல்களும் ஆரம்பித்து விட்டன. ஆஸ்திரேலியாவின் முன்னாள் பயிற்சியாளராக இருந்த மிக்கி ஆர்தர் தற்போது பாகிஸ்தானின் பயிற்சியாளராக உள்ளார். இதனால் ஆஸியின் பலவீனங்கள் வெளிப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மிக்கி ஆர்தரால் சிறிதும் அச்சமில்லை என்று ஸ்ராக் தெரிவித்திருந் தார். தற்போது அவர், 1988 ஆம் ஆண்டுக் குப் பின்னர் பிரிஸ்பெய்னில் ஆஸ்திரேலியா 27 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ளது. இந்த அடைவு தொடர்ந்து தக்கவைக்கப்படும். பாகிஸ்தானை 3:0 என்று வீழ்த்தப்படும் என்று சீண்டியுள்ளார்.

பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளரான ரியாஸ், பதிலடியாக சில கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சுக்கூட்டணி சிறப்பானது. அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம்.

ஆக்ரோசமான பந்துவீச்சை எதிர் கொள்ள ஆஸ்திரேலியா தயாராக இருக்க வேண்டும் என்று ரியாஸ் தெரிவித்தார். (ம

# ஆப்கான் சிறுவனை சந்தித்தார் மெஸ்ஸி

தனது தீவிர ரசிகனான ஆப்கானிஸ்தான் சிறுவனை நேரில் சந்தித்தார் பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரரான மெஸ்ஸி.

முர்தசா அகமட் (வயது 6) என்ற குறித்த சிறுவன் கடந்த மே மாதம் சமூக வலைத்தளங்களின் உதவியுடன் உலக அளவில் பிரபலமடைந்தான். இதற்கு முக்கிய காரணம் அவர் ஆர்ஜென்ரீனா அணியின் சீருடையின் நிறத்திலுள்ள பொலித்தீன் பையில் மெஸ்ஸியின் பெயரையும் அவரது இலக்கத்தையும் பொறித்து தனது தெருவோரங்களில் விளையாடுவது போன்ற படங்கள் அவரது சகோதரனால் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டமையால் ஆகும். இந்த விவகாரம் மெஸ்ஸியின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது. குறித்த சிறுவனை மெஸ்ஸி சந்திக்க விருப்பம் தெரிவித்தார். இருப்பினும் தொடர்ச்சியான தொடர்கள் காரணமாக அவரால் அந்தச் சிறுவனை சந்திக்க முடியவில்லை. அண்மையில் கட்டாரில் நடந்த ஆட்டமொன்றில் விளையாடுவதற்காக மெஸ்ஸி சென்றார். தான் செல்லும் நகரத்துக்கு சிறுவனை அழைத்த அவர் அவனைச் சந்தித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். (ம)







# உலகின் எந்த ஆடுகளங்களிலும் ஓட்டங்களைக் குவிப்பார் கோக்லி

## கபில்தேவ் ஆதரவு



உலகின் எந்த இடத்திலும் ஓட்டங்களைக் குவிக்கும் வல்லமை கோக்லியிடம் உள்ளது என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவரான கபில்தேவ்.


நடைபெற்றுமுடிந்த மும்பை டெஸ்ட்டில் கோக்லி இரட்டைச் சதம் விளாசி ஆட்ட நாயகனாகத் தெரிவானார். இதனையடுத்துக் கருத்துத் தெரிவித்த அண்டர் சன், சுழல்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில் கோக்லி சிறப்பாகவே துடுப்பெடுத்தாடுகிறார். ஆனால் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில் அவர் தடுமாற்றத்தை வெளிப்படுத்துவார். எல்லா இடத்திலும் சிறப்பாகச் செயற்படும் திறன் அவரிடத்தில் இல்லை. அவரது துடுப்பாட்ட உத்திகளில் சில குறைகள் உள்ளன என விமர்சித்திருந்தார். இதற்கு இன்சமாம் உடனடியாக பதிற் கருத்தைத் தெரிவித்திருந்தார்.

இங்கிலாந்து ஆடுகளத்தில் சிறப்பாகச் செயற்பட்டால்தான் அவர் சிறந்த வீரர் என்று எவர் சொன்னது. கோக்லியை இவ்வாறு குறிப்பிடும் அண்டர்சன், இங்கிலாந்துக்கு வெளியே இலக்குகளைக் கைப்பற்றியது குறைவு. எனின் அவர் ஒரு சிறந்த பந்துவீச்சாளர் அல்லர் என இன்சமாம் தெரிவித்தார். தற்பொது குறித்த விவகாரத்தில் கபில்தேவ் தலையிட்டுள்ளார்.

உலகின் எந்த ஆடுகளத்திலும் ஓட்டங்களைக் குவிக்கும் வல்லமை கோக்லியிடம் குவிந்துள்ளது. தற்போது அவரது ஆட்டம் நம்ப முடியாத அளவுக்கு அமைந்துள்ளது. இந்தியர் ஒருவர் இவ்வாறு விளையாடுவதைப் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது. அவரை போன்ற ஒரு வீரரை நான் ஒரு போதும் பார்த்ததில்லை. இந்தத் தருணத்தில் உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர் அவர்தான் என்பதை அவரது சாதனைகளே பறைசாற்றும். சிறுமைத்தனமான விமர்சனங்கள் வேண்டாம் என கபில்தேவ் தெரிவித்தார். (ம)

# நாளை டெஸ்ட்

இந்தியா, இங்கிலாந்து அணிகளின் ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் சென்னையில் நாளை ஆரம்பம். ஆடுகளம் சுழலுக்கு சாதகம் என்று சொல்லப்பட்டது. (ம)



பன்னாட்டு செய்தி நிறுவனங்களில் ஒன்றான ஏ.எவ்.பி. இந்த வருடத்தின் சிறந்த புகைப்படங்கள் என்று கருதும் சில படங்களைப் பட்டியலிட்டுள்ளது. அவற்றில் நடப்பு வருட ரியோ ஒலிம்பிக் தொடரில் உசைன் போல்ட்டின் தங்கப்பதக்கம் வென்ற ஓட்டமும் இடம்பெற்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்துவீச்சுத் தரப்படுத்தலில் கேரத்துக்கு 2ஆவது இடம்

பன்னாட்டு கிரிக்கெட் சபை தனது தரப்படுத்தலை புதுப்பித்துள்ளது. பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் கேரத் இரண்டாவது இடத்தில் தொடர்கிறார்.

குறித்த தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள அஸ்வின் 904 புள்ளிகளைப் பெற்றுள்ளார். கேரத் 867 புள்ளிகளைப் பெற்றுள்ளார். மூன்றாவது இடத்தில் தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன் உள்ளார். அவர் 844 புள்ளிகளைப் பெற்றுள்ளார். தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக ஸ்ரெய்ன் இன்னும் ஐந்து மாதங்கள் ஓய்விலிருக்கவுள்ளார். இதனால் அவர் அடுத்தடுத்த தரப்படுத்தலில் பின்தள்ளப்பட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. 818 புள்ளிகளுடன் அண்டர்சன் நான்காவது இடத்திலும் 814 புள்ளிகளுடன் கசில்வூட் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே ஜடேயா, புரோட், ஸ்ராக், ஷாஜ், வாக்நெர் ஆகியோர் உள்ளனர்.

தரப்படுத்தலில் 10 இடங்களுக்குள் உள்ள ஒரேயொரு இலங்கை வீரர் கேரத் மட்டுமே. டில்ருவான் பெரேரா 15ஆவது இடத்திலும் பிரசாத் 22 ஆவது இடத்திலும் நுவான் பிரதீப் 36 ஆவது இடத்திலும் லக்மல் 41 ஆவது இடத்திலும் உள்ளனர். இலங்கையின் சார்பாக முதல் ஐந்து சிறந்த அடைவுகள் இவையே.

(ம)



# அஸ்வின் - அண்டர்சன் மோதல் அதிருப்தி தெரிவித்தார் அலிஸ்டர்

இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன் இந்திய அணியின் சகலதுறை வீரர் அஸ்வின் இருவரும் வார்த்தை மோதலில் ஈடுபட்டமைக்கு தனது அதிருப்தியைத் தெரிவித்தார் இங்கிலாந்து அணித்தலைவர் அலிஸ்டர் குக்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான நான்காவது டெஸ்ட் ஆட்டம் இந்தியாவின் வெற்றியுடன் அண்மையில் முடிவுக்கு வந்தது. இரட்டைச்சதம் விளாசி ஆட்டநாயகன் ஆனார் கோக்லி. கோக்லியின் துடுப்பாட்டம் பலராலும் பாராட்டப்படும் நிலையில் அவரிடம் நுட்பங்கள் இல்லை என்று அண்டர்சன் விமர்சித்தார். இதனையடுத்து குறித்த ஆட்டத்தின் இறுதிநாளில் அண்டர்சன் துடுப்பெடுத்தாடக் களத்துக்கு வந்தபோது அஸ்வின் சென்று, கோக்லியிடம் நுட்பங்கள் இல்லை என்று தெரிவித்தமை தவறு என்று வாக்குவாதம் செய்தார். நடுவர்களின் தலையீட்டினாலேயே வாக்குவாதம் முடிவுக்கு வந்தது. அன்று அண்டர்சனை வீழ்த்தியவரும் அஸ்வினே. ஆட்டம் முடிந்து பவிலியன் நோக்கி நடந்து வரும்போதும் வாக்குவாதம் தொடர்ந்தது. இந்த நிலையிலேயே அலிஸ்டன் இவ்வாறு அதிருப்தி தெரிவித்தார். மிகவும் கவலை தரக்கூடிய வார்த்தை மோதலிது. இந்தத் தொடரில் இதுவரையிலுமான நிலவரத்தின் அடிப்படையில் இரு அணி வீரர்களும் மிகவும் சிறந்த உணர்வுடன் விளையாடினார்கள். அவ்வாறிருக்கையில் இந்த வாக்குவாதம் ஏமாற்றம் தருகிறது என்று அலிஸ்டர் மேலும் தெரிவித்தார். (ம)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
**பிரெஞ்சு மொழி**
உடன் பதிவு செய்யுங்கள், அல்லது இந்த நம்பரை உங்கள் மொபைலில் சேமியுங்கள்!! (J/5720)(10.17.18)
**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**பணியாளர் தேவை**
சாவகச்சேரி நகர்ப்பகுதியில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு கீழ்வரும் பணிநிலைக்குரிய பணியாளர்கள் தேவை.
தகுதியுடையோர் நேரில் வருக்கை தரவும்.
- சமையலாளர் (குக்)
- சமையல் உதவியாளர்
- ரொட்டி வேலை, கொத்துவேலை தெரிந்தவர்கள்
- உணவு பரிமாறுபவர் (வெயிற்றர்)
- சுத்திகரிப்பாளர்

தொடர்புகளுக்கு: T.P :-077 649 1027
077 940 0963

**இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்**
**யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்**
**கல்வியாண்டு 2016/17**
இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

| கற்கை நெறிகள் | அனுமதித் தகைமைகள் | மொழி | கற்கை நெறிக்கான காலம் | விண்ணப்பிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| தொழிலுரிமைத் துவமும் சிறிய வியாபார முகாமைத் துவமும் Entrepreneurship and Small Business Management (ESBM) | • 18 வயதிற்கு மேற்பட்டவர் **அத்துடன்**<br>• பீடத்தினால் நடாத்தப்படும் அடிப்படைக் கற்கை நெறியில் நிலை 1ஐ பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் **அல்லது**<br>• இ.தி.ப.கழகத்தினால் நடத்தப்படும் அடிப்படைக்கற்கை நெறியில் இரண்டு கணிப்பு விகிதத்தை அல்லது விலக்களிப்பை பெற்றிருத்தல் வேண்டும் **அல்லது**<br>• க.பொ.த (சாதாரன தரப்)பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத வகையில் 6 பாடங்களில் சித்தி | தமிழ்/ஆங்கிலம் | 1 வருடம் | 28.11.2016 30.12.2016 |
| முகாமைத்துவ பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் (Bachelor of Managemnet studies Degree ) BMS | • க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி. **அல்லது**<br>• தொழில் உரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் கற்கை நெறியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். **அல்லது**<br>• இ.தி.ப.கழகத்தினால் நடத்தப்படும் அடிப்படைக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். | தமிழ் / ஆங்கிலம் | 4 வருடம் | 28.11.2016 30.12.2016 |

**www.ou.ac.lk** என்ற இணையத்தளத்தில் பிரவேசித்து விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தகவல்களுக்கு பின்வரும் நிலையங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| நிலையம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் | பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் | 021 - 2223374 |
| வவுனியா கற்கை நிலையம் | இல 366, கண்டி வீதி, தேக்கவத்தை, வவுனியா | 024 - 2222995 |
| கிளிநொச்சி கற்கை நிலையம் | 155 ஆம மைல்கல், கண்டிவீதி, கிளிநொச்சி | 021 - 2283970 |
| முல்லைத்தீவு கற்கை நிலையம் | ஒட்டுசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு | 071 - 3522367 |
| மன்னார் கற்கை நிலையம் | தலைமன்னார் வீதி, மன்னார். | 077 - 5625352 |

**இணைய வருவழி மூலமே**
**விண்ணப்பிக்க முடியும்**

பதிவாளர்
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
(சி/27017)(10.17.19)

**தவறிவிட்டது**
கேரதீவு, சங்குப்பிட்டி பாலத்தில் றோஸ் நிற கைப்பையுடன் தங்க நெக்லஸ் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.
077 990 6394

**காணி விற்பனை**
திருநெல்வேலி Farm School க்கு அருகில் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 703 7058
(நேரடி விற்பனை மட்டும்)

**தமிழ் - சிங்கள மொழிபெயர்ப்பாளர் தேவை**
பிரபல கல்வி வெளியீட்டு நிறுவனம் ஒன்றுக்கு தமிழ் - சிங்கள மொழிபெயர்ப்பாளர் ஒருவர் தேவை. கொழும்பில் தங்குமிட வசதி வழங்கப்படும். (வீட்டில் இருந்து பகுதிநேரமாகவும் கடமைபுரிய முடியும்)
விரும்பியோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும்.
0714273035

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.